4

1933


தமிழரசு

## பொருள் அடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | கடவுள் வணக்கம் | ... 257 |
| 2. | அடிகளின் விடுதலை | ... 258 |
| 3. | 'ஹரிஜன இயக்கம் வெறுங் கூச்சலே' | ... 260 |
| 4. | 'பசுந்தோல் போர்த்திய புலி' | ... 264 |
| 5. | 1000 ரூபா போட்டிப் பரிசு | ... 267 |
| 6. | கடற்கரை சம்பாஷணை | ... 269 |
| 7. | நிலா (பாட்டு) | ... 273 |
| 8. | உயிரைக் கொடுக்கும் உழுவலன்பு | ... 274 |
| 9. | எனது சுற்றுப் பிரயாணம் | 277 |
| 10. | தன்னைத்தான் காத்தல் | ... 279 |
| 11. | அழகு (பாட்டு) | ... 282 |
| 12. | போச் [illegible] | .. 283 |
| 13. | பொ [illegible] | ... 286 |
| 14. | 'யான் கொள்ளைக்காரன் ஆனேன்!' | ... 287 |
| 15. | ஒரே தலையில் இரண்டு முகங்கள் (படம்) | ... 293 |
| 16. | சர்க்கார் வேலை | ... 295 |
| 17. | விகடத் துணுக்குகள் | ... 300 |
| 18. | இரண்டு முட்டாள்கள் | ... 301 |
| 19. | இதற்கா இரண்டு மணி நேரம்? | ... 307 |
| 20. | தாசிகளும் தாசிகாந்தர்களும் (நாடகம்) | ... 310 |
| 21. | அம்மை நோய் | ... 316 |


### சந்தா விவரம்

| | | |
|---|---|---|
| வருடம் 1-க்கு தபாற்கூலி உள்பட | இந்தியா, பர்மா, சிலோன் முதலிய உள்நாட்டிற்கு | ரூ 1—0—0 |
| | பினாங்கு, சிங்கப்பூர், தென் ஆப்ரிக்கா முதலிய வெளி நாடுகளுக்கு | 2—0—0 |
| | ஜீவிய சந்தா | 20—0—0 |
| | தனிப் பிரதி விலை | 0—1—0 |

**மாதிரி சஞ்சிகை இனாம்.**

ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

ஒவ்வொரு ஆங்கில மாதம் 15-ஆம் தேதியிலும் வெளிவரும்.

### விளம்பர விகிதம்

| | | | |
|---|---|---|---|
| உட்பக்கம் ஒன்றுக்கு | 1-மாதத்திற்கு | ரூ. | 10—0—0 |
| ,, அரைப் பக்கத்திற்கு | ,, | | 6—0—0 |
| ,, கால் பக்கத்திற்கு | ,, | | 4—0—0 |
| கவர் 3-வது பக்கத்திற்கு | ,, | | 15—0—0 |
| ,, 4 ,, | ,, | | 20—0—0 |

**இதர விவரங்களுக்கு எழுதவும்.**

மானேஜர்.


அன்பே ஆண்டவன்

# தமிழரசு

ஒரு செந்தமிழ் மாத வெளியீடு

' எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் '...

ஆசிரியர்: டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்

| மலர் | ஸ்ரீமுகஞு வைகாசிமீ 2உ 1933ஞு மேமீ 15உ | இதழ் |
|---|---|---|
| 4 | | 5 |


## கடவுள் வணக்கம்

வேதமும் வேதம் விளம்புமெய்ப் பொருளும்
அப்பொருள் விதங்களும் பஞ்ச
பூதமும் புலனும் புலன்களின் பயனும்
அப்பயன் பொலிவுற நுகரும்
ஞாதமும் உலகம் படைத்தளித் தழித்து
ஞானமாய் அகிலமு நிறைவுற்(று)
ஆதியும் நடுவும் முடிவுமாய் நின்ற
ஆதியான் அடியிணை பணிவாம்.

—வில்லிபுத்தூரர்

# அடிகளின் விடுதலை



மகாத்மா காந்தி அடிகள் விடுதலை அடைந்ததறிந்து மட்டில்லா மகிழ்ச்சி அடைகிறோம். சென்ற பதினாறு மாதங்களாக எரவாடா சிறைச்சாலையில் தேசியத் தவங் கிடந்த மகாத்மா விடுதலை பெற்றார் என்னும் செய்தி உலக மக்களுக் கெல்லாம் சந்தோஷ முண்டாக்கு மென்பதில் சந்தேக மில்லை. மகாத்மா விஷயத்தில் சமயோசித அறிவுடன் கண்ணியமாக சர்க்கார் நடந்துகொண்டதை நாம் போற்றாமல் இருக்க முடியாது.

மகாத்மா விடுதலை யடைந்ததும் ஓர் அறிக்கையை வெளியிட்டார். அதில் ஒரு மாத காலமோ அல்லது ஆறு வார காலமோ சட்ட மறுப்பை நிறுத்தி வைக்கவேண்டு மென்று காங்கிரஸின் தற்காலத் தலைவரான திரு. ஆனேயுக்கு யோசனை கூறிவிட்டு, சிறையி லிருக்கும் சட்ட மறுப்பாளரை விடுதலை செய்ய வேண்டு மென்று அரசாங்கத்தையும் கேட்டுக்கொண் டிருக்கிறார். மகாத்மா மனம்போல் அரசாங்கம் அவசரச் சட்டங்களை ரத்து செய்து அரசியல் கைதிகள் அனைவரையும் விடுதலை செய்து விட்டால், ராஜீய நிலைமையைப் பரிசீலனை செய்வதற்கும் சௌகரியமாக இருக்கும். சர்க்காருக்கும் சமாசத்தை நிலை நிறுத்த இதைவிட நல்ல சமயம் வாய்ப்பது அரிது.

இதை விட்டு 'மிஞ்சினால் கெஞ்சுவது, கெஞ்சினால் மிஞ்சுவது' என்பதுபோல் 'சட்டமறுப்பை இனிமேல் ஆரம்பிப்பதில்லை யென்று காங்கிரஸ் வாதிகள் உறுதி கூறினா லொழிய அரசியல் கைதிகளை விடுவிப்பதும், அடக்குமுறைகளைக் கைவிடுவதும் அசாத்தியமாகும்' என்று அரசாங்கத்தார் பதில் அறிக்கை வெளியிட்டிருப்பது அறிவுடைமையாகாது. இந்தியாவிற்கு விடுதலை கிடைக்கும் வரையில் சட்ட மறுப்பைப் போன்ற எண்ணிறந்த இன்னல்கள் இருந்தே தீருமென்பதைச் சர்க்கார் மறந்துவிடக் கூடாது. அன்றியும் அவசரச் சட்டங்கள், தடியடிகள் போன்ற கொடிய முறைகளைக் கையாண்டுகொண்டு அடங்கி நடந்தா லன்றி சுகமில்லை என்று சொல்லுவது கௌரவ மற்ற பேச்சாகும்.



சமாசம் வேண்டுமென்றால் இரு தரத்தாரும் சற்று விட்டுக் கொடுக்க வேண்டும். சர்க்கார் மட்டும் விட்டுக் கொடுக்க முடியாதென்று சொல்வது பொருத்தமாகாது. அன்றியும் புதிய அரசியல் சீர்திருத்தத்தை அமுலுக்குக் கொண்டுவர விரும்பும் அரசாங்கத்தார் நாட்டின் உண்மையான பிரதிநிதித்துவம் வாய்ந்த காங்கிரஸை அடக்கி வைத்துக்கொண்டு வீண் பிடிவாதம் காட்டுவது சரியாகாது. உண்மையாக சமாசம் வேண்டுமானால் சர்க்கார் சமயோசிதம்போல் நடந்து கொள்வதே முறையாகும்.

நிற்க, உலகம் போற்றும் உத்தமராகிய காந்தியடிகள் அருந்தவம் மேற் கொண்ட (8—5—33) அன்றிரவே—சில மணி நேரத்திற்கெல்லாம், ஜர்மன் வல்லரசை முறியடித்த வலிமை வாய்ந்த இந்த ஆங்கில அரசாங்கம் நடுநடுங்கி அவரை விடுதலை செய்து தன் பொறுப்பை நீக்கிக் கொண்டது. இனி மகாத்மாவின் உயிரைக் காப்பாற்றும் பொறுப்பு இந்திய மக்கள் தலை மீது சுமத்தப்பட்டிருக்கிறது. இந்தத் தள்ளாத வயதில் 21 - நாள் உண்ணா விரதத்தைத் தாங்கக் கூடிய ஆற்றல் அடிகளின் உடலில் உண்டா என்பதை எண்ண எண்ண மனம் புண்ணாகின்றது. அடிகள் 21-நாள் உண்ணா விரதம் இருந்து விடலாமென்றே நம்புகிறார். காந்தி யடிகள் தமது உயிரை விட விரும்பவில்லை; தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உழைப்பதற்காக உயிர் வாழவே விரும்புகிறார். ஆனால் உடன் உழைக்கும் ஊழியர்களின் தூய்மை யற்ற செயல்களும், சநாதனிகளின் பயனற்ற - வீண் வாதங்களுமே மகாத்மாவை இக் கடுந் தவம் புரியுமாறு தூண்டின. இனிமேலேனும் சூழ்ச்சி செய்யும் பார்ப்பன ஊழியர்களும், உயர் ஜாதி ஹிந்துக்களும், சநாதனிகளும் மனமாறுத லடைந்து காந்தி யடிகளின் திருவுளத்திற்கு அமைதியை அளிக்க வேண்டும். இன்றேல் வீண் பழிக்கு ஆளாவார்களென்பதை எச்சரிக்கை செய்கிறோம்.

## ஒரு செய்தி

அடுத்த மாதத்தி லிருந்து இனிய கதைகள் சில அதிகமாகச் சேர்க்கப்போவதோடு, அங்கங்கே மனதைக் கவரும் படங்களும் அமைக்கப்படும்.

# ‘ஹரிஜன இயக்கம் வெறுங் கூச்சலே’

(திரு. ஐயாமுத்து)



ஒரு வீட்டில் எட்டுப் பேர் இருந்தார்கள். அதில் ஒரு குட்டிப்பையன். அவனை எல்லோரும் பரிகசித்து வந்தார்கள்; அவனை மிகக் கேவலமானவனுகக் கருதி வந்தார்கள். எல்லோரும் அவனை வைவார்கள்; உதைப்பார்கள்; கண்ட கண்ட வேலை யெல்லாம் செய்யச் சொல்வார்கள். குட்டிக்கு நிற்கவும் நேரமில்லை; உட்கார ஓய்வுமில்லை.

இப்படி உழைக்கும் குட்டிக்கு வீட்டில் எத்தகைய உரிமையுமில்லை. குட்டி எப்போதும்:

1. வீட்டின் முற்றத்தில் அல்லது புறக்கடையில்தான் தூங்க வேண்டும்.

2. வீட்டில் எல்லோரும் போட்டுக் கழித்த கிழிசல்களைத்தான் போட்டுக் கொள்ள வேண்டும்.

3. எல்லோரும் உண்டு கழித்த மீதியைத்தான் உண்ணவேண்டும்.

4. வீட்டுக் குளத்தில் குளிக்கலாகாது.

5. பள்ளியில் சென்று பயிலலாகாது.

6. தனக் கெனப் பிரத்தியேகமாக எந்தப் பொருளையும் வைத்துக் கொள்ளக் கூடாது.

7. வீட்டின் ஒரு பாகமாகிய தேவாலயத்துக்குள் அவன் நுழையக் கூடாது.

8. வீட்டின் இதர பாகங்களிலும் அவன் பிரவேசிக்கக் கூடாது.

9. வீட்டில் எல்லோரும் எசமானர். குட்டி ஒருவனே வேலைக்காரன்.



10. குட்டியை யாரும் தொடமாட்டார்கள். குட்டியும் யாரையும் தொடக் கூடாது.

சதா வேலை செய்வதாலும், குளிப்பதற்கு வசதி இல்லாததாலும், குட்டியின் உடம்பில் ஒரே வியர்வை நாற்றம். அவன் கந்தையும் அழுக்கு. அவனைக் கண்டாலே எட்டடி விலகச் சொல்ல வேண்டும்.

இப்படி யிருக்கையில் ஒரு நாள் குட்டி தனக் கிழைக்கப்படும் அநீதிகளை யெல்லாம் உணர்ந்து, வீட்டை விட்டு வெளிக் கிளம்புவதாய்த் தீர்மானித்தான்.

குட்டியின் வீட்டுக்கு எதிரில் மற்றொரு வீடு. குட்டி அங்கேதான் போக வேண்டும். ஆனால் அவ்வீட்டுக்காரர் குட்டியின் வீட்டாருக்கு வெகு நாளைய விரோதி. குட்டியின் தகப்பன் (வீட்டின் தலைவன்) பார்த்தான்; குட்டி வீட்டை விட்டு வெளியே சென்று விரோதியுடன் சேர்ந்து கொண்டால் தனது பலம் குறைந்து போகுமெனக் கண்டான்; உடனே குட்டியைப் பார்த்துப் பாசாங்கு வார்த்தைகள் சொல்ல வாரம்பித்தான்; ‘குட்டி! நீ நமது வீட்டை விட்டு வெளியே போக லாகாது. நமது வீட்டைப் போன்ற பெரியதும், அழகியதுமான வீடு வேறெங்குமில்லை. இங்குள்ள உனது சகோதரர்கள் உனக்குக் கொடுமை செய்து வருகின்றனர் என்பதுண்மையே. அதற்காக நீ வீட்டை விட்டுப் போகலாகாது. உன்னைத் தேவாலயத்துள் அநுமதிக்குமாறு நான் ஏற்பாடு செய்கிறேன். நீ பொறுமையோடிரு’ எனக் கூறிவிட்டு, இதர மக்களிடம் கூறலானுர்:

‘மக்களே! குட்டியும் நம்மைச் சேர்ந்தவனே. உங்கள் கடைசி தம்பியே. ஏதோ விதிவசத்தால் கெட்டுப் போனுன். அவனை நீங்கள் சரியாகக் கவனித்துக் கொள்ளல் வேண்டும். அவன் நமது வீட்டுக்கு உரிமை யுடையவனே. ஆனுல் அவனை வீட்டுக்குள் வரும்படியாக நான் சொல்லவில்லை. அவனோடு சமபந்தி போஜனம் செய்யுமாறும் நான் கூற முன்வரவில்லை. நமது சொத்தையும் சுகத்தையும் அவனுக்குப் பங்கிட்டுக் கொடுக்குமாறும் நான் கூறவில்லை. நான் சொல்லுவதெல்லாம் அவனையும் ஒரு மனிதனுகப் பாவித்து நடத்துங்கள்; அவனை நமது தேவாலயத்துள் அநுமதித்து நமது கடவுளை அவனும் வழிபடச் செய்யுங்கள்’ என்பதே யாகும்.

இப்பிரசாரத்தைக் கேட்டதும் வீட்டிலிருந்த சிலர் பெருங் கூச்சலிட ஆரம்பித்தனர்; வீட்டின் வழக்கத்துக்கும் பழக்கத்துக்கும் விரோதமாகத் தந்தை பேசுவதைக் கண்டித்தனர். இரண்டொருவர் தந்தைக்கும் குட்டிக்கும் அநுகூலமான வார்த்தைகள் செப்பினர். ஆனுல் காரியத்தில் ஒன்றும் அவர்களால் செய்யக் கூடவில்லை.

தேவாலய விஷயமாக வீட்டில் நாளுக்குநாள் குழப்பம் அதிகரித்தது. வாதப் பிரதிவாதங்கள் மலைபோ லுயர்ந்தன. முடிவில் இவர்களுக்குள் சமாதானம் ஏற்பட்டு விட்டதாகவே வைத்துக் கொள்வோம். குட்டி கோவில் அநுமதி பெற்றுவிட்டான் என்றே எண்ணிக் கொள்வோம்.

குட்டியின் குறைக ளெல்லாம் நீங்கிவிட்டனவா?

குட்டிக்கு எத்தகைய நியாயம் கிடைக்க வேண்டும்?

*** *** ***

ஹரிஜன இயக்கமென ஹரித்துவாரத்தி லிருந்து கன்னியாகுமரி வரை ஒரு பெருங் கூச்சல் கிளம்பி யிருக்கிறது. பத்திரிகைகளிலும் பிரசங்கமேடைகளிலும் பெரிய வாதப் பிரதிவாதங்கள் கிளப்பப்பட்டிருக்கின்றன. கடந்த பல மாதங்களாக இடப்பட்ட இரைச்சல் ஏழுலகத்தையும் எட்டித்தட்டி நிற்கிறது. இம் மா பெரிய இரைச்சலை வடிகட்டிப் பார்த்தால் சத்தோ-சாரமோ-ஒன்றுங் காணோம்.

இன்றைய தினம் ஹரிஜனங்கட்குச் செய்தாக வேண்டிய சரியான காரியம் எது?

நாட்டின் வரிப் பணத்தில் ஒரு பெரும் பாகத்தை ஹரிஜனங்களின் அபிவிருத்திக்கென ஒதுக்கிப் பத்து வருடத் திட்ட மொன்றை ஏற்படுத்த வேண்டும்.

1. சேரிகளி லுள்ள குடிசைகளை யெல்லாம் நாசம் செய்ய வேண்டும். உயர்ந்த மேட்டுப்பாங்கான இடங்களிலே குடியேற்ற வேண்டும். சுகாதார முறைப்படி வீடுகளும், தெருக்களும் அமைக்க வேண்டும்.

2. மேற்குறித்த குடியேற்றப் பிரதேசங்களிலே நவீன முறைப்படி தொழிற்சாலைகள், பாடசாலைகள், வாசகசாலைகள், ஆராய்ச்சி சாலைகள், பூந்தோட்டங்கள், பந்தடிமேடைகள் ஏற்படுத்தவேண்டும்.

3. ஹரிஜன ஆண்—பெண் இருபாலருக்கும் சரியான உடற் பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.

4. ஹரிஜன உழைப்பாளிகட்குக் கொடுக்கப்படவேண்டிய 'குறைவான' கூலியும், அவர்கள் வேலை செய்யும் 'அதிகமான' நேரமும் இவ்வளவுதான் என நிர்ணயிக்கப்பட வேண்டும்.

இத்தியாதி காரியங்கள் கொண்ட பத்தாண்டுத் திட்டம் வருடம் குறைந்தது 24 கோடி ரூபாய்ச் செலவில் பூர்த்தி செய்யப்பட்டால் ஹரிஜனங்களின் நிலைமை என்னவாக விருக்கு மென்பதை சற்றே யோசித்துப் பாருங்கள்.

இவை யென்ன கனவா?



ஹரிஜன இயக்கத்திலே சத்தான யோசனைகள், திட்டங்கள் எங்கே?

சுயராஜ்யம் வந்த பின்னரே இவை சாத்திய மாகுமா? அப்படியாயின் அத்திட்டங்கட் கெல்லாம் ஆதாவு காணும் சுயராஜ்ய திட்டமெங்கே? காங்கிரஸிற் காணோம். நேரு அறிக்கையிற் காணோம். சைமன் யாதாஸ்தில் காணோம். வட்டமேசைப் பேச்சுக்களில் காணோம். இதர முடிவுகளிலுங் காணோம். வெள்ளைக் கடுதாசியிலுங் காணோம்.

கோவிற் பிரவேசத்துக்காகச் செய்யப்படும் பிரசாரத்தையும், முயற்சியையும், ஹரிஜனங்களின் பொருளாதாரம், கல்வி, கைத்தொழில், சமூக நிலையாகியவற்றை உயர்த்துவதில் தலைவர்கள் செலவழித்தால் எத்தகைய சத்தான காரியங்கள் சித்தியாகுமென யோசித்துப் பாருங்கள்.

ஒரு வீட்டில் ஒரு குழந்தை அசௌக்கிய முற்றிருந்தால், குழந்தையின் தகப்பன் தனது வருவாயின் முதல்பாகத்தை அக்குழந்தையின் நலனுக்கே செலவழிப்பான். இன்று இந்திய ஜன சமூகத்திலே நோயுற் றிருப்போர் ஹரிஜனங்களே. இந்திய வருவாயில் முதற் பாகமும், பெரும்பாகமும் அவர்கள் பொருட்டே செலவழிக்கப்பட வேண்டும். இதற்காக இதர செலவுகள் குறைக்கப்பட வேண்டும். இராணுவச் செலவு பாதியாக வேண்டும். உயர்தரப் படிப்பு பத்தாண்டுகட்கு நிறுத்தப்படவேண்டும். உயர்ந்த சம்பளங்கள் குறைக்கப்பட வேண்டும். முதலாளிகள் தலையில் வரிச்சுமை உயர வேண்டும்.

இன்று நடத்தப்படும் 'ஹரிஜன இயக்கம்' வெறுங் கூச்சலே; சத்தற்றதே. இவ் வியக்கத்தின் பயனாக ஹரிஜனங்கள் ஒரு இம்மியும் உயர முடியாது.

காந்தியின் கடைசியாக வந்த ஹரிஜன அறிக்கையில் ஹரிஜனங்கள், சிவஜனங்கள் எல்லோரும் சென்று தொழும்படியான புதுக்கோவில்கள் ஆங்காங்கு அன்பர்கள் கட்ட முயல வேண்டு மென ஒரு வேண்டுதல் காணப்படுகிறது.

ஒரு கோவில் கட்டும் பணத்தைக் கொண்டு ஒன்பதாயிரம் ஹரிஜனக் குடும்பங்களை உயர்த்தலாம். பத்து கோவில்களின் அதிகச் செலவை நிறுத்தினால் பத்தாயிரம் ஹரிஜனங்கட்கு வேண்டிய சுகாதார விடுதிகள் கட்டலாம். கோவில் மான்யங்களைக் கொண்டு குப்பை நிறைந்த சேரிகளைக் குபேர பட்டண மாக்கலாம். கோவில் நுழைவைக் காட்டிலும் கோவில் விலக்கே ஹரிஜனங்கட்கு அரிய பலன் தரு மென்பது அடியேன் எண்ணம்.

அடிமை வாழ் வொழிக !

# ‘பசுந் தோல் போர்த்திய புலி’

ஒரு சிறு கதை

(தமிழாசிரியர் - பா. பக்கிரிசுவாமி செட்டியார்)

சேர வள நாட்டிலே மலைகள் அதிகம். வானுற வோங்கிய அம் மலைகள் காண்போர்க்கு இனிய காட்சிப் பொருள்களாய் இலங்கும். அம்மலைகள்மீது பல ஒற்றையடிப் பாதைகளும் சில அகன்ற சாலைகளும் உண்டு. அவற்றுள் ஒரு சாலை யோரமாகக் குகை யொன்று இருந்தது. அக் குகையில் ஒரு சந்நியாசி வசித்து வந்தார். மக்கள் பெரிதும் அவரைக் **‘குகைச்சாமி’** என்று கூப்பிடுவது வழக்கம். ஆனால் அவர் தம் பெயர் கருணாகரர் என்று கூறி வந்தார். கருணாகரர் தம் குகை யருகே யுள்ள சாலை வழியாக வருவார் போவாருக்கு இனிய பழங்களும், குளிர்ந்த நீரும் உதவி, பசி யாற்றி, மிக நல்லவர் என்ற பெயரோடு விளங்கினார். கருணாகரர் தம் பெயருக் கேற்ப மிகவும் கருணை யுடையவர் என்று ஜனங்கள் சொல்லி வந்தார்கள்.

அந்தச் சாலை வழியாக ஒரு நாள் வர்த்தகன் ஒருவன் வந்து கொண்டிருந்தான். அவன் வசம் ரொக்கமாக ஆயிரம் பொன்னும் சில நகைகளும் இருந்தன; அன்றியும் விலை யுயர்ந்த ஆடை அணிகளும் பூண்டிருந்தான். அவ் வணிகன் வரவைக் கண்ட கருணாகரர் அவனை இனிய முகத்தோடு வரவேற்று பழ வகைகள் முதலியன பரிவோடு அளித்து உபசரித்தார். பிறகு அவ்வியாபாரி முனிவரிடம் விடை பெற்றுக் கொண்டு தம் வழியே சென்றான்.





வழியில் அவ் வர்த்தகன் முன்னே திடீரென்று ஒரு புதிய மனிதன் தோன்றினான். அவன் முக மூடியோடு பெரிய மூக்குக் கண்ணாடியும் அணிந்திருந்தான். அவன் வணிகனைப் பார்த்து ‘உன்னிடமுள்ள பொருள்களைக் கொடுத்து விடு. இன்றேல், அதோ நிற்கும் எனது ஆட்கள் இப்போதே உன்னைக் கொன்று விடுவார்கள்’ என்று கூறி, ஒரு மரத்தடியில் தங்கள் வில்லை வளைத்துக்கொண்டு நிற்கும் ஆட்களைச் சுட்டிக் காட்டினான். அவர்களைக் கண்ட வியாபாரி நடுநடுங்கிப் போய்த் தன் வசமிருந்த பொன்னையும், நகைகளையும் அப்புதிய மனிதனிடம் கொடுத்துவிட்டுத் ‘தலை தப்பியதே தம்பிரான் புண்ணிய’மென்று மேலே நடந்து போனான்.



ஆனால் வணிகன் தான் அரிதில் சேர்த்த பொருளை, வழியில் இழந்ததை எண்ணி வருந்தாமல் இருக்க முடியவில்லை. மீண்டும் அப் பொருளை எவர் துணையாவது கொண்டு அடைய முடியுமோ என்று ஆலோசித்துக்கொண்டே சென்றான். எதிரே சில போர் வீரர்கள் அரசாங்கப் பொக்கிஷப் பெட்டியோடு அதற்குக் காவலாக வந்து கொண்டிருந்தார்கள். வியாபாரி அவர்கள் துணைகொண்டு, வந்த வழியே திரும்பினான்; வரும்போது தனக்கு நேர்ந்த நஷ்டத்தையும் கஷ்டத்தையும் அப் போர் வீரர்களின் தலைவனிடம் உரைத்தான். வீரர் தலைவன் அவ் விவரம் கேட்டவுடன் தன் வீரர்களுள் ஒருவனை முன்னே பொக்கிஷப் பெட்டியோடு போகச் செய்தான்; அவனைப் பின் தொடர்ந்து மற்றப் போர் வீரர்கள் சூழ வர்த்தகனோடு போனான்.

முன்பு வியாபாரி முன் திடீரெனத் தோன்றிப் பொருள்களைப் பறித்த அதே மனிதன், அப்போதும் பொக்கிஷப் பெட்டியோடு சென்ற வீரன் முன்னே தோன்றிப் பயமுறுத்தினான். உடனே அவ் வீரன் தன் ஊதலை ஊதினான். அது கேட்டு அம்மாயக் கள்ளன் சிறிது மயங்கினான். உடனே வீரர் தலைவன் தன் இதர வீரர்களோடு அங்குத் தோன்றினான். அதுகண்ட அத் திருடன்

தன்னைப் பிடிக்க முயன்றார், தனது வீரர்கள் அவர்களைக் கொன்று விடுவார்கள் என்று கர்ஜித்தான். வீரர் தலைவன் அதுகேட்டு கொஞ்சமும் அஞ்சவில்லை; தன் வீரர்களுக்கு அக் கள்ளனைக் கொல்ல உத்தரவிட்டான். உடனே கள்ளன் தன் ஆட்களை நோக்கி ஓடினான். ஒரே சமயத்தில் பல அம்புகள் அவன் முதுகை நோக்கிப் பாய்ந்தன. கள்ளன் காயங்கள் பட்டுக் கீழே விழுந்தான். ஆனால் அவனது ஆட்கள் ஒருவராவது சிறிதும் அசையவில்லை. போர் வீரர்கள் மிகவும் ஆச்சரியப்பட்டார்கள். உடனே அவர்கள் நெருங்கிப் பார்க்கவே பொம்மைகளாக இருந்தன.



காய மடைந்த கள்வனைக் குகைச்சாமி வசிக்கும் குகைக்கு வீரர்கள் தூக்கிக் கொண்டு போனார்கள். குகைச்சாமி அங்கே காணப்படவில்லை. அதற்குள் அடியுண்ட மாயக் கள்ளன் மடிந்தான். வீரர்கள் அவன் முகமூடியையும், கண்ணாடியையும், அங்கியையும் கழற்றினார்கள். அது குகைச்சாமியின் பிணமாக இருந்தது. அனைவரும் பெரிதும் ஆச்சரிய முற்றனர்; 'பசுந் தோலைப் போர்த்திக்கொண் டிருந்த புலி' இவன்தான் என்றுரைத்தனர்.



---

# 1000 ரூபா போட்டிப் பரிசு

('உண்மை உணர்ந்தோன்')

உலகத்திலே மக்கள் பொது அறிவைப் பெறவும், பல தேசச் செய்திகளை அறியவும், நாட்டு நிலைமையை உணரவும் பத்திரிகைகள் அவசியமானதாய் இருக்கின்றன.

பத்திரிகைகளை நடத்துகிறவர்கள் மக்களை ஏமாற்றிப் பணம் பறிக்க எண்ணலாகாது. பத்திராதிபர்கள் உலகத்திற்காகவே பாடுபடக் கூடியவர்களாய் இருத்தல் வேண்டும். உலக முன்னேற்றம் பத்திரிகைகளையும் பத்திராதிபர்களையும் பொறுத் திருக்கின்றது.

இதை உணர்ந்தும் சுயநலத்தால் பத்திராதிபர்கள் பலர் வியாபாரத்திற்காகவும் மக்களை ஏமாற்றிப் பணம் சம்பாதிப்பதற்காகவும் தங்கள் பத்திரிகைகளை உபயோகப்படுத்தி வருவது அடாததாகும்.

இந்நாட்டில் ஏழை மக்களும் கற்றறிவீனர்களும் மலிந்து கிடப்பதால் அத்தகையோரை ஏமாற்றிப் பொருள் சம்பாதிக்கப் பத்திரிகைகள் இதுசமயம் நடத்தப்படுகின்றன.

## ஏமாற்றும் விதம்

பத்திரிகைகளில் 'போட்டிப் பரிசு 1000 ரூபா கொடுக்கப்படும். விடை யனுப்புவோர் எட்டு அணா தபால் முத்திரையோடு விடையையும் சேர்த்து அனுப்ப வேண்டும். பத்திராதிபர் முடிவே சரியானது. பத்திராதிபர் 'இஷ்டப்படிச் செய்யலாம்' என்று விளம்பரம் செய்து விடுகின்றனர்.

இதனைப் படித்த மக்கள் நாலைந்து பத்திரிகைகளை வாங்கித் தனித்தனி விடை எழுதி, தனித்தனி கவரில் வெவ்வேறு விடையுடன் எட்டணா தபால் பில்லைகளையும் வைத்து அனுப்புகின்றனர். இவர்கள் நோக்கம் எந்த விடைக்காவது பரிசு வரட்டும் என்பதேயாகும்.

இவ்வழியாகப் பத்திரிகைகள் அதிகம் விற்பனையாவதுமன்றி எட்டணா ஸ்டாம்புகளும் ஏராளமாய் வந்து குவிந்து விடுகின்றன.

பரிசு பெறவேண்டியவர்களின் விடைகளை அரசாங்கமோ அல்லது பொது மக்களோ பிரித்துப் பார்ப்பதற்கில்லாததால் பத்திராதிபர்கள் உண்மையில் தங்களுக்கு வரும் எல்லாக் கடிதங்களில் காணப்படும் விடைகளனைத்தையும் படிப்பது இல்லை என்று சொல்ல இடமிருக்கிறது. ஆனால் எல்லாக் கவர்களிலிருந்தும் தபால் தலைகளை மாத்திரம் எடுத்துக் கொள்வார்கள் என்பதில் சந்தேகமில்லை.

கடைசியாய்த் தங்களுக்கு வேண்டியவருக்குப் பரிசு வந்ததாயோ அல்லது தம் குடும்பத்தாரில் ஒரு பேரை பிரசுரித்துப் பரிசு கொடுத்ததாகவோ பத்திரிகைகளில் பிரசுரித்தால் தடைசெய்வார் யாருமிலர். ஏனெனில் சர்வமும் பத்திராதிபர் இஷ்டம் என்று முதலிலேயே பிரசுரிக்கப்பட்டு விடுகின்றது. இவ்வாறு உண்மையாய் நடக்கும் சம்பவங்களை நாம் நேரில் கண்டும் கேட்டு மிருக்கிறோம்.

ஒரு சமயம் உண்மையில் பரிசு கொடுப்பதாய் இருந்தாலும் நாலாயிரம் ரூபாய்க்கு முத்திரைகள் கிடைத்தால் அதில் மூன்று ஆயிரம் ரூபாய் பெறுமானமுள்ள முத்திரைகளை எடுத்துக்கொண்டு ஓர் ஆயிரம் தங்களுக்கு இஷ்டமான ஒரு நபருக்குக் கொடுப்பதானாலும் இது மோசமான காரிய மல்லவா?

லாட்டரி போடுவதைக் காட்டிலும் பதின்மடங்கு மோசமும், சூதாட்டத்தைக் காட்டிலும் நூறு மடங்கு அநியாயமும் நிறைந்துள்ள இப்பத்திரிகைப் போட்டிப் பரிசை அரசாங்கம் கவனியாதிருப்பதின் காரணம் யாது? அரசாங்கம் இதை ஊன்றிப் படிக்கவில்லையா? அல்லது பாராமுகமாய் இருக்கின்றதா? அன்றி இது நியாயமானது என்று வாளா விருக்கின்றதா? என்று கேட்கிறேன்.

குதிரைப் பந்தயம் பக்கட் ஷாப் மோசமானது எனக் கருதியதும், லாட்டரி சீட்டுகளைப் பத்திரிகைகளில் பிரசுரிக்கக் கூடாது என்று அறிக்கை செய்துள்ளதுமான அரசாங்கம் போட்டிப் பரிசை என்னென்று நினைக்கின்றதோ தெரியவில்லை?

எனவே இனியாவது அரசாங்கமோ அல்லது போலீஸோ இதைக் கவனித்துப் போட்டிப் பரிசு நடத்தும் பத்திரிகாலயங்களுக்குச் சென்று பரிசோதித்து உண்மை யறிந்து உடனே இத்தகைய மோசங்கள் இனியும் நடவாதவாறு தடுக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

தவிர, பொது மக்களே! மூளையைக் கரைத்து விடை எழுதி 'அவனுக்கு வந்தது பரிசு, இவனுக்கு வந்தது பரிசு என்று' சொல்லிக்கொண்டு பணத்தைப் பாழ்பண்ணுகிறீர்கள். போட்டிப் பரிசானது உங்கள் நன்மையைக் கருதிய தல்லவென அறிந்து நிராகரிப்பீர்களாக!

---

# கடற்கரை சம்பாஷணை

(மே. மா)

சென்ற ஏப்ரல்மீ 28உ ஒரு தனவணிகருடன் சென்னை ஆனந்தாஸ்ரமம் சென்றிருந்தேன். அதுசமயம் அவ்விடத்தி லிருந்த சந்நியாசிகளில் ஒருவர் எங்களைக் கடற்கரைக்கு அழைத்துச் செல்லக்கூடாதா எனக் கேட்டார். அதற்கிணங்கி மீண்டும் வந்து அழைத்துச் செல்வதாய்ச் சொல்லித் திரும்பிய போது அங்குள்ள வேறொரு சந்நியாசியைப் பார்த்து 'இவர் மூன்று வேதங்களைத் தமிழில் மொழி பெயர்க்கப் போகின்றார். அதற்காகும் செலவுகளைக் கொடுக்கத் திருவொற்றியூரான் அடிமை என்னும் திருவாளர் ராமசாமிப் பிள்ளை ஒத்துக் கொண்டிருக்கின்றார்' என ஒருவர் கூறினார்.

இதைக் கேட்டபின் வேதங்களை மொழி பெயர்க்க வேண்டுமானால் சையாம் நாடு சென்று அங்கு அரசன் காப்பாற்றி வைத்திருக்கும் பாலி பாஷையிலுள்ள வேதங்களை மொழி பெயர்த்தால் உலக உபகாரமாகும் எனப் பதிலிறுத்தேன். அதன்பின் மேற்சொன்ன சந்நியாசி தம்முடன் வார்த்தையாடவேண்டும் எனவும் தமக்கு இது சம்பந்தமாய் நூல் சகாயம் முதலான உதவி செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். பிறகு நான் திரும்பி மீண்டும் 6 மணிக்குச் சென்று அங்கிருந்தவர்களில் மூவருடன் கடற்கரைக்குச் சென்றேன்.

கடற்கரையில் போய்ச் சேர்ந்தபின் ஓரிடத்தில் அமர்ந்து வேதத்தை மொழி பெயர்ப்பதாய்ச் சொல்லும் வீரசேகர சிவானந்தா அவர்களை நோக்கி, 'சாமிகளே, உலகில் இலிங்கத்தை வணங்குகின்றனரே அதன் தத்துவம் என்ன? அது எதனைக் குறிக்கின்றது? ஏன் அவ்வடிவத்தை வைத்து வணங்கவேண்டும்? ஆண் குறி பெண் குறி வடிவத்தைக் குறிப்பதாகிய சத்திசிவ வடிவம் இலிங்கம் எனச் சொன்னால் ஒப்ப முடியாது. ஏனெனில் ஆணுக்கு உள்ள குறியைப்போல் பெண்ணுக்கு வெளிப்பாகத்தில் காணப்படாவிடினும் உள்பாகமாகிய நாபிக்குக் கீழ் இலிங்கமும் பீஜமும் காணப்படுகின்றன.

ஆணுக்கு விந்தானது பீஜத்தி லிருந்து வெளிப்பட்டபின் சிரசி லிருந்து பீஜத்துக்கு மீண்டும் சேருவதுபோல் பெண்ணுக்கும் பீஜத்திலிருந்த நாதமானது வெளிப்பட்டபின் சிரசிலிருந்து வேறு நாதம் பீஜத்துக்கு வந்து சேருகின்றது. இருபாலரும் சிரசிலிருந்து வெளிப்பட்ட நாதபிந்துகள் பீஜத்துக்கு வந்து சேரும் கால அளவில் உண்டாகும் உணர்ச்சியே சுகம் என்றூர்கள்.

இக்காரணத்தால் பெண்களுக்கு வீணைதண்டு நாபியோடு நிற்ற லும் ஆண்களுக்கு ஆசனத்துவாரத்திற்கு இரண்டு விரற்கடை வரை இருத்தலும் ஆக அமைந்துள்ளது.

பெண்களுக்குக் கர்ப்பப்பை ஒன்று தனியாய்க் காணப்படுவ தால் கருதரித்தல் சம்பவிக்கின்றது என்றூலும் போக சுகத்தைத் தரக்கூடிய கருவிகள் ஒன்ருகக் காணப்படுகின்றன. ஆதலால் கடவுள் லக்ஷணத்தை வெளித்தோற்ற அவயவத்தைக்கொண்டு நிர்ணயிப்பது பொருத்தமற்ற தாதலால் இவைகள் நீங்க வேறு காரணம் கூறுங்கள்' என்று வினவினேன்.

சந்நியாசி:—இலிங்கமானது ஒரு குறியாகும். உருவவழிபாடில் லாத தமிழர்கள் வணங்கியது இலிங்கமாகும். ஆண்குறி பெண் குறியால் உலகம் உற்பத்தி யாதலால் அதனையே வணங்கலாயி னர். பெண்ணுக்கு லிங்கமும் பீஜமும் இல்லை. ஏனெனில் அது காணப்படாததால். நீர் துவாரத்திற்கு மேல் பாகத்தில் ஒரு மொக் கைப்போ லொத்த வடிவம் உண்டு. அவ்வடிவில் புருஷலிங்கம் தாக் குண்டால் பெண்ணுக்கு நாதம் வெளிப்பட்டு கர்ப்பப்பையில் பாய்ந்து கருத்தரிக்கின்றது. இம்முறையில் உலக ஜீவகோடிகள் தோன்று வதால் அவ்வடிவையே வணங்கினூர்கள். தவிர லிங்கம் என்பது ஒரு குறியே யாகும். நீ சுயமரியாதைக்காரன். உனக்கு அறிவில்லை.

நான்:—எனக்கு அறிவில்லை என்று சொன்ன சொல்லைத் தங் களுக்குத் திருப்பிக்கொள்ளுங்கள்; கோபத்தை விடுங்கள். நான் கேட் பதை எனக்கு விளங்கச் சொல்லுங்கள். இலிங்கம் என்பது ஒருகுறி என்றீர்கள். ஆனூல் ஏன் வேறு குறி இருத்தலாகாது. தவிர குறியை ஒரு தடி ரூபமாகவோ, அல்லது சூரிய ரூபமாகவோ, சந்திர ரூப மாகவோ, மனித ரூபமாகவோ ஏன் வைத்தலாகாது? சொல்லுங்கள். பெண்ணின் உறுப்பு சுகசாதனமன்று? இக்குறிகளில்லாமல் உற்பத்தி யாகும் உயிர்கள் பல?

சந்நியாசி:—குறியை வைத்து வணங்காத மதம் உலகி லில்லை. நீர் சொல்லுவதை நான் ஒப்பமாட்டேன். வேதத்தில் 'உமயதி' என்று கூறப்படுகின்றதானது சக்திசிவ வடிவத்தையே குறிக்கின் றது. பிறகு புராணங்கள் கூறும்போது இமயபர்வத அரசனின்



புதல்வி, இமயவதி, பார்வதி எனக் கூறப்பட்டது. அதன் தத்துவம் ஆண்குறி பெண்குறியேயாம்.

(தனிப்பட்டது)

(ஆண்குறி பெண்குறியே சிவலிங்கமானூல் என் அனுபவத்தில் ஒரு ஆணையும் பெண்ணையும் போகிக்கச் செய்துவிட்டு அதுசமயம் அவ்வடிவத்தைப் பூசித்தலாகாது. இது சாத்தியமாகக் கூடியதாய் இருப்பதைவிட்டுக் கல்லுக்கு இவ்வர்த்தத்தைப் புகுத்தி வணங்கு வானேன்?)

சந்நியாசி—குறியை வைத்து வணங்காத மதம் கிடையாது. மக் களும் கிடையாது. ஆதலால் குறிகளில் மேலான குறியே லிங்கம். இதைக் கந்தழி வழிபாடு என்பார்கள். குறியை வணங்காத மக்களைக் காட்டும் பார்க்கலாம்.

நான்—இஸ்லாம் மதத்தில் குறி யில்லை. ரஷியாவில் கடவுள் எண்ணமும் எக்குறியும் இன்றி இருக்கின்றனர். அவர்கள் சுகமாக வாழ வில்லையா?

சந்நியாசி—இஸ்லாமியர்கள் குறி யில்லா விட்டாலும் மசூதி என்னும் குறித்த இடத்திற்குச் சென்று வணங்குவது குறியாகும். ரஷியர்கள் பௌத்த மதஸ்தர். பௌத்த மதத்தில் குறியுண்டு. குறி இல்லை என்று எப்படிச் சொல்வீர்?

நான்—இஸ்லாமியர் கடற்கரையில் துணியை விரித்து அதன் மேல் அமர்ந்து வணங்குவதைப் பார்க்கவில்லையா? ரஷியாவில் ஆலயமே கிடையாது என்றூல் அதற்குமாருக பௌத்த மதஸ்தர்கள் என்று ஒன்றை விட்டு ஒன்றைப் பேசுகிறீர்கள். எடுத்த விஷயத்தை ஒழுங்காகப் பேசுங்கள்.

சந்நியாசி—நீர் சொல்லுவதை நான் நம்ப முடியாது. பௌத்த மதம்தான் ரஷியர்கள் மதம். நீங்கள் பத்திரிகைகளைப் படித்து விட்டுப் பேசலாகாது. நான் சாஸ்திரத்தைப் படித்துக் கூறுவதைக் கேட்க வேண்டும். பத்திரிகை படிப்பவனுக்கு என்ன தெரியும்?

நான்—என்னய்யா உங்களைக் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லாமல் மதங்களையும் தேசங்களையும் சாத்திரம் படித்த பெருமை களையும் சம்பந்த மற்ற வகையில் பேசுகிறீர். இலிங்கம் வைத்து வணங்குவதின் தத்துவம் யாது, என் அதை வணங்க வேண்டும், அதனூல் பயன் விளைவதெப்படி என்ற கேள்விகளைக் கவனிக்காமல்

பேசுகிறீர். இப்போது உங்கள் குருவாகிய வீர சுப்பைய சுவாமிகளைப் பூமியில் புதைத்துவிட்டு அதன்மேல் கட்டடங்களைக் கட்டுகின்றீர்கள். அக் கட்டடத்தின் அறையில் சுப்பைய சுவாமியின் தேக உருவை வைக்காமல் இலிங்கத்தை வைப்பதின் காரணம் யாது எனக்கேட்டால் சம்பந்தமில்லாத வார்த்தைகளால் விடை யளிக்கின்றீர். இத்தகைய



வீர சுப்பைய சுவாமிகள்

வாகிய நீரா வேதத்தை தமிழாக்கப் போகின்றீர். இன்னும் பொறுமையைப் பற்றியும், உலகத்தைப்பற்றியும் நீர் படித்த பிறகு வேதத்தை மொழி பெயர்க்க முயலும். (ஸமஸ்கிருதம் படித்ததினாலேயே அறிவாளியாய் விட்டதாய் நினைப்பவரில் இவர் ஒருவர்.)

சந்நியாசி—சுப்பைய சுவாமிகள் ஆலயத்தில் உனக்காக இலிங்கம் வைக்கவில்லை. நீ வந்து வணங்க வேண்டுமெனச் சொல்லவோ அதை வைக்கவில்லை. ஆதலால் அது விஷயம் உனக்குச் சொல்ல வேண்டியதில்லை. நீ வந்தாலும் வராவிடினும் கவலை கிடையாது. தமிழர்கள் வழிபடும் குறி இலிங்கமாகும். (தமிழர்கள் என்றும் உருவ வழிபாட்டைச் செய்தவர்க ளல்லர்.) லிங்கக் குறியானது எந்த உருவையும் குறிக்காது.

இச்சம்பாஷணை நடந்தபோது திருவையாறு அறுபத்திமூவர் மடம் சிதம்பர சாமிகளும் மற்றொரு சாமிகளும் உடனிருந்தார்கள்.

(தொடரும்)

# நிலா

('பேயன்')

1. நீல வானக் கடலினை மேவி
    நிலவுகின்ற நிலா எனும் பெண்ணே!
பால முத ஒளியெங்கு பெற்றாய்ப்
    பாரும் விண்ணும் மயக்கிய ஜோதீ
கோல மின்மினித் தாரகைக் கூட்டம்
    கோடி கோடி யுனைச்சூழ்த லென்னே
காலை எங்கு மறைந்திடு கின்றாய்
    கனன்ற சூரிய னுக்குப் பயந்தோ?

2. உலக மெங்கும் உறங்கிடும் காலை
    உலகி லென்ன தொழில்செய வந்தாய்
இலகு மாந்தர் கொடுமைக்கு வெட்கி
    இருளி லேவந் துலாவுகின் றாயோ
மலைகள் மீதும் கடல்களின் மீதும்
    மற்று மெந்தப் பொருள்களின் மீதும்
உலவு கின்றனை யுன்னொளிக் கள்ளால்
    உலகம் தூங்கிக் களிப்பது போலும்.

3. மந்த மாகிய நின்னொளி யுள்ளே
    மதனத் தேன்வந் தொழுகுதி தென்னே
சந்த மோனத் தனிச்சுவைக் கீதம்
    தண் கதிர்க்குக் கொடுத்தனை கொல்லோ
உந்தன் ஜோதி யழகினைக் காண
    உனக்கோர் நீர்நிலைக் கண்ணாடி போலும்
எந்த நீர்நிலை யுள்ளும் புகுந்தே
    என்ன செய்குவை சாற்றுதி சற்றே.

4. வெள்ளைத் தாமரை யுந்தனைக் கண்டால்
    விரிந்து பேசும் விதமென்ன சொல்லாய்
புள்ளைப் போலும் இறக்கைகள் வேண்டும்
    புனிதை உன்னை யடைந்திடு வேன்நான்
கள்ளைத் தேனுட் பொழியுகின் றாயே
    கவிதை வெள்ள மெழுப்புகின் றாயே
கொள்ளைப் பூமியி லின்பம்வே றுண்டோ
    நுன்றன் ஜோதி யழகினை விட்டால்.

# உயிரைக் கொடுக்கும் உழுவலன்பு

(திரு R. சிவோகம்)

'முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்
தகநக நட்பது நட்பு.'

உழுவலன்பாவது ஒருவன் மற்றொருவனிடம் வைக்கும் தொடர்ந்த அன்பாம். அன்பென்பது பலவிதமாகப் பொருள்படும். கடவுளிடத்தும், ஆசிரியரிடத்தும் உண்டாகும் அன்பைப் பக்தி யென்றும், தாய் தந்தையரிடம் ஏற்படும் அன்பைப் பாசமென்றும், மனைவி மக்களிடத்திற் செலுத்தும் அன்பைக் காத லென்றும், நண்பர்களிடத்தில் காட்டும் அன்பை நட்பென்றும் இடத்திற்கும் பொருளுக்கும் தக்கவாறு உபயோகப்பட்டுவருதல் யாவரும் அறிந்ததே. ஆகவே இத்தகைய முழுப் பொருள் கொண்ட எழில் பெறும் அன்பினுக்கு ஓர் எல்லை வரை யறுத்தல் இயலாது. 'அன்பிற்கு முண்டோ வடைக்குந்தாழ்' என்றபடி அன் பென்னும் பெரியதொரு வெள்ளம், கரை புரண்டு ஓடின் அதைத் தடுக்கத் தக்கதொரு அணை கிடையா தன்றோ!

'தொடர்ந்த மும்மலம் முருக்கி வெம்பவக் கடல் தொலையக் கடந்துளோர்களும் கடப்பரோ மக்கள்மேற் காதல்' என்பதும் ஆன்றோர் கூற்றல்லவா? ஆயினும் இக்கட்டுரையில் விவரிக்க எழுந்தது நண்பர் மாட்டுச் செலுத்தும் உழுவலன்பைப் பற்றியாம். நண்பர் மாட்டுச் செலுத்துவதாதலின் நட்பெனப் பட்டது.

இந் நட்பின் தன்மையோ மிகவும் வியத்தற் குரியது. அதுவோ இயற்கையாகவே ஒருவனுக்கு மற்றொருவன் மாட்டு எழுகின்ற பேரன்பாம். நட்புடையாளர் தமது நண்பனுக்கு ஏற்படும் வருத்தத்தைத் தம்மதாக எண்ணி, மன்னுயிரைத் தம்முயிராகப் பேணும் பண்புடையாராவர்.

' சாதலிற் சாதலும் நோதலின் நோதலும்
அன்பிற் கறிகுறி ஆகும் என்பர்'

என்பது நட்புடையார் விஷயத்தில் எவ்வளவு பொருத்தமாக இருக்கின்றது. நட்புடையாளரோ தமது நண்பருக்கு ஏற்படும் இடுக்கண்களைத் தமது உயிரைக் கொடுத்தும் நீக்குகின்ற பெற்றியாராவர். தொட்டனைத் தூறும் மணற் கேணியைப் போல் நட்பென்பது ஒருவர் மாட்டுச் செலுத்துந் தோறும் வளருந் தன்மையது. ஒருவன்



ஒரு சிறந்த நண்பனைப் பெற்றிருத்தலைக் காட்டிலும் பெறத் தக்க பேறு வேறொன்று மில்லை.

'தோன்றவனேகம்பெறினும் தொன்னட்பிற்
சிறந்தனவோ'

'நீடுதற்குத் தக்கது நன்னெறி நின்றோர் நட்பொன்றே
தேடுதற்குக் கிடையாத திரவியமு மஃதாமால்'

'முத்திக்கு வித்ாகு முழு துணர்ந்தோர் பெருநட்பே'

'சமயம் வரினிடித்துரைப்பார் தக்கவழிச் செலச்செய்வார்
இமையவர்த முலகுறவு மிருளுலகம் பகையுமாய்
அமையவறி வுறுத்துவா ரந்தோ நூல் கற்றுணர்ந்த
கமையுடையார் நட்பெவர்க்குக் காண்கிடைக்கு மரிதரிது'

என்று வல்லூர் தேவராசப் பிள்ளையவர்கள் தமது குசே லோபாக்கியானத்தில் கூறி யுள்ளவை எவ்வளவு அருமையும் பெருமையும் வாய்ந்தன. நட்பிற் சிறந்தவர்களைக் கூறுங்கால் ஆங்கிலேயர் தாமனும் பிதியசும் என்பர். ஆயினும், சேரமான் கணைக்காலிரும் பொறை உயிர் நீத்தபோது உடன் உயிர் நீத்த பொய்கையாரின் பேரன்பையும், சீநக்க ராயர் இறந்தமை கேட்டு உடன் சாகத் துணிந்த பொய்யா மொழிப் புலவரின் உழுவலன்பையும் எதிர் கொள்ளத் தக்க உதாரணங்களை ஆங்கில நூல்களில் காணக் கிடைப்ப தரிது. கோப்பெருஞ் சோழன் இறந்த போது பிசிராந்தையார் என்னும் புலவர் உடனுயிர் நீங்கியதும், வேள்பாரி இறந்ததனால் கபிலர் உயிர் நீத்ததும் நமது மனதில் என்றும் இருக்கத் தக்கன.

சேரமான்கணைக்காலிரும்பொறை என்னும் வேந்தனும், பொய்கையார் என்னும் புலவரும் மாணவன் - ஆசிரியன் என்னும் நிலைமையில் நட்புரிமை பூண்டவர். பொய்கையார் என்னும் ஆசிரியருக்குச் சோழ வேந்தன் ஒருவனும் மாணவனா யிருந்தான். இச் சோழ மன்னனுக்கும், சேரவேந்தன் கணைக்காலிரும்பொறைக்கும் நடந்த ஒரு பெரும் போரில், சேரன் சோழனால் சிறைப்படுத்தப் பட்டான். அரசநிலையில் இருந்த சேரன் சிறைக் கூடத்தை நண்ணியதெண்ணிப் பெரிதும் மனம் புழுங்கினான். ஆயினும் என் செய்வது. விதி வலி தன்றோ!

இவ்வா றிருந்த வேந்தனுக்கு நீர் வேட்கை மிக்குறுதலும் சிறைக் கூடத்துக் காவலாளரை நீர் கொணரும்படி வேண்டினன். அவ்வாசனது வேண்டுகோளை உடனே முடிக்காது, அரசனாயினும் சிறையுற்றவ னன்றோ, என அவமதித்து எண்ணிய சிறைக்காவலாளர் சிறிது தாமதித்தே நீர் கொணர்ந்து கொடுத்தனர். நீர் கொணர்ந்த பாத்திரத்தைக் கையி லேந்திய சேரர் வேந்தன் தன் மனதுள் எண்ணுவானாயினன். வேந்த னென்ற நிலையில் தாமிருக்கும் பட்சத்

தில் இச் சிறைக் காவலாளர் இவ்வாறு அவமதிக்கத் துணிவார்களா? வேந்தனா யிருந்தும் சிறைப்பட்ட காரணத்தா லன்றோ இவ்வாறு அவமதித்தனர். அதிலும் நீர் கொணரா ஏவின தன்றோ இவற்றினுக்கெல்லாம் காரணமாக இருந்தது. ஆகவே இவ்வாறு அவமதிக்கப்பட்ட பின்பும், நீர் வேட்கை தணித்துக் கொண்டு உயிர் வாழ்வதைக் காட்டிலும் உயிர் துறப்பதே மேல் எனக் கருதி, நீரைக் கீழே ஊற்றிவிட்டு அவ்விடத்தே வீழ்ந்து உயிர் துறந்தனன்.

இஃதிவ்வாறிருக்க, தமது மாணவன் சேரமான் சிறைப்பட்டான் என்பதைக் கேட்டுப் பெரிதும் வருந்திய ஆசிரியர் பொய்கையார், சோழனால் அவன் சிறைப்பட்டதை அறிந்து, சோழன் தமது மாணவனாதலின், அவனிடம் ஓடோடியும் சென்று, சேரமானை விடுவிக்கும் வண்ணம் விடுதலைச் சீட்டை அவனிட மிருந்து பெற்று துயரமே உரு வெடுத்ததுபோல் சேரமா னிருக்கு மிடத்தை நோக்கி விரைந்தனர்; விரைந்து சென்று அவ்விடத்தை நோக்குதலும் சேரமான், மானத்தை நிலை நிறுத்த, உயிர் நீத்திருந்தமையைக் கண்டு அடியற்ற மரம் போல் வீழ்ந்து அழுவாராயினர்;

'மான முருவெடுத்து வந்தனைய மன்னவனே
ஞான வொளிபரப்பு நல்வெண் மணியேயோ'
'அன்பே வடிவா யமர்ந்தவெழிற் கோமானே
நன்பே ருலகு நயந்து நடந்தனையோ'
காட்சிக் கினிய கவினுடைய காவலனே
மாட்சி நலஞ்சான்ற மாணவவோ! மாணவவோ!!
தண் ணமிழ்தம்போலுந் தமிழின் சுவையறிந்த
வண்ணலே என்னைகொலோ வாருயிரின் நீங்கினையே'
'உன்னைப் பிரிந்திங்கு ஒருகணமுந் தாழேன்யான்
என்னுடலை நீத்திங்கு எழுந்தேன் பெருமானே'

என வாய்விட் டலறி மாணவ னருகிலேயே உயிர் நீத்தனர். இஃதன்றோ உண்மை நட்பு! இஃதன்றோ உண்மை யன்பு!!

---

## நட்பு நலன்

நண்பன், இரண்டு உடல்களில் ஓர் உயிர் போன்றவன்.
—அரிஷ்டாட்டில்

நண்பனை இழக்கா திருக்க அவனுக்கு நன்மை செய்; பகைவனை நண்பனாக்க அவனுக்கு நன்மை செய்.
—பிராங்லின்

நண்பர் பலரே என் வாழ்க்கையைச் சிறப்பிக்கும் செல்வம் போன்றவர்.
—ஆபிரகாம் லிங்கன்

# எனது சுற்றுப் பிரயாணம்

(கோபாலசமுத்திரம் - ஆசிரியர். சாமி. ஆறுமுகனார்)

ஸ்ரீ சங்கராச்சாரியர் போன்ற மடாதிபதிகளைப்போன்று எனது சுற்றுப் பிரயாணத் தொடக்கத்தி லிருந்து முடிவு வரையில், சிவிகை, யானை, குதிரை, மாடுகள் முதலியவற்றால் அலங்கரிக்கப் படவில்லை. பரிஜனங்கள் திருத்தொண்டு புரிதல் முதலிய சகல வைபவங்களையும் நானும் விரும்பவில்லை. கிடைக்கப் போவதுமில்லை. விரும்பிக் கிடைத்தாலும் வேண்டியது மில்லை. இதனால் பெரியோர்களைப் பழிக்கிறேன் என்று எண்ண வேண்டாம். இத்தகைய சுற்றுப் பிரயாணத்தால் பெரும் பணம் செலவாகிறது. இப்படிப்பட்ட பிரயாணங்களைச் சுருக்கிப் பொது மக்களின் நன்மைக் கேற்ப பிற மதத் தலைவர்களைப் போன்று பார்க்கு மிட மெங்கும் கல்விச்சாலை கட்டுதல், மருத்துவசாலை அமைத்தல், அறிவு விளக்கச் சங்கம் நிறுவுதல் முதலிய துறைகளில் இறங்குதல் வேண்டும். இதற்கு எல்லா மடாதிபதிகளும், பொதுப் பணத் தலைவர்களும் மனம் இரங்குதல் வேண்டும் என்று தான் கூற வந்தேன்.

எனது சுற்றுப் பிரயாணத்தில் கால்நடைப் பயணம், மாட்டு வண்டி ஏறுவது, மோட்டார் வண்டி ஊர்வது, குதிரை வண்டிச் சவ்வாரி, புகைவண்டியிற் போவது, சைக்கிள் வண்டியிற் செல்வது ஆகிய பகுதிகளே காணப்பட்டன. மக்கள் நிறைந்த பட்டணங்களையும், மீன்கள் நிறைந்த குளங்களையும், சிற்றூர்கள் சிலவற்றையும், நன்னீர் பாயும் நதிகளையும், பல தொழில்களி லமர்ந்த தொழிலாளிகளையும், வயிறு வளர்க்க வகை தெரியாத மாணவச் சகோதரர்கள் சிலரையும், இச்சை பல சொல்லி இடித்துண்போரையும், பை நிறையப் பணம் வைத்துக்கொண்டு, தமக்குக்கூடச் செலவு செய்ய மனமில்லாத சிக்கன மிக்கவர்களையும் கண்டது இன்னும் நினைவி லிருக்கிறது. பண்டைக்காலத் தறிஞர் கட்டி முடித்த சிற்ப வேலைப்பாடுகளைக் கொண்ட கோயில்கள் சில விசித்திரமா யிருந்தன.

நான் போன வேளையில் சில இடங்களில் சில அறிவாளிகள் பொதுக் கூட்டங்களில் சொற்பொழிவு செய்துகொண் டிருந்தார்கள். இரவிலே நாடகக் கூட்டத்தையும், சினிமாக் கூட்டத்தையும், சங்கீதக் கச்சேரிக் கூட்டத்தையும் பார்க்கவும், அவர்கள் கூறும் கூற்றுக்களைக் கேட்கவும் சில சமயங்கள் அமைந்தன. ஆயினும்

சுமார் இரண்டு ஆண்டுகட்கு முன்பு இருந்தபடி இப்பொழுது இருக்கக் கண்டிலேன்.

எங்குப் பார்த்தாலும் கடன் கொடுக்க வேண்டுமே என்று கவலைப் படுகிறவர்களையும், கொடுத்த கடன் சீக்கிரம் வர வேண்டுமே என்று மனம் துடிப்பவர்களையும் சந்தித்தல் சகஜமா யிருக்கிறது. அகவிலை குறைந்து விட்டதே என்று வருந்தும் வியாபாரிகளையும், கையிலே பண மில்லையே என்று ஏங்கும் ஏழைகளையும் பார்க்கப் பார்க்க மகிழ்ச்சி என்னும் உணர்ச்சி அடியோடு தொலைந்து போகிறது.

செழிப்பு மலிந்த இந்தியாவில் தரித்திர நாராயணர்களின் தொகை அதிகமாகப் பெருகும் குறி காணப்படுகிறது. இந்தியச் செல்வர்களும், செல்விகளும், சீமான்களும், சீமாட்டிகளும், ஆடவர் பெண்டிரும், சிறுவர் சிறுமியரும், பட்டிக் காட்டுச் சிசுக்கள் முதல் பட்டணத்துப் பாட்டன், பாட்டியார் வரை எல்லாரும் போதுமான வசதி யில்லாமல் வருந்துவதைப் பார்க்க எந்த இந்தியனுக்குத்தான் மனம் சம்மதிக்கும்?

இம் மாதிரியே கவலை கொண்ட நெஞ்சத்தார் காட்சிகளைக் காணக் காண மனம் பொறாமல் எனது பிரயாணத்தை நீண்டதொன்றாகப் பெருக்காமல் சுருக்கிக் கொள்ள நேர்ந்தது. ஏழைகள், பிச்சைக்காரர்கள், நோயாளிகள், படியாதவர்கள், குடிகாரர்கள், பொல்லாதவர்கள் முதலிய களங்கங்கள் இல்லாதபடி எங்கும் இன்பமயமாய் விளங்குமாறு திருவருள் துணை புரிய இந்திய மாதா இரங்குதல் வேண்டுமென்று ஒவ்வொரு இந்தியனும் உண்மை அன்புடன் உணரும் காலம் எப்பொழுதென்பது எனது சுற்றுப் பிரயாணத்தால் அறிய முடியவில்லை. அங்ஙனம் ஒரு காலத்தில் வந்தே தீருமென்பது மட்டும் உறுதியென்று புலப்படுகிறது.

---

## பழைய இந்தியாவைப் பற்றி

செல்வம், அழகு, உண்மை, தூய்மை முதலியவற்றால் நிறைந்து பூலோக சுவர்க்கம் எனக் கொண்டாடத் தக்க நாடு எது வென்று என்னைக் கேட்டால், இந்தியா என்று யான் சுட்டிக் காட்டுவேன்.

—மாக்ஸ் முல்லர்

இந்தியர் கோழைகள் அல்லர்; தாழ்ந்தவர் அல்லர். எங்கள் முன்னோர் நாகரிகம் அற்றிருந்த காலத்தில் இந்தியா பொன்னாடாக விளங்கியது. இந்தியர் தேவர்களாக விளங்கினர். இந்தியா செல்வத்தைப் பொழிந்துகொண் டிருந்தது.

—எட்மண்ட் பர்க்

# தன்னைத்தான் காதலித்தல்

(திரு. கந்தநரசிம்மம் B. A., B. L.)

காதல் பேச்சு நிறைந்த காலமாகும் தற்காலம். எங்கே பார்த்தாலும் காதற்கதைகள், காதல் நாடகங்கள், காதல் பாட்டுகள், காதல் நாவல்கள், காதல் சினிமா-காதல் டாக்கீ இன்னும் பிற பல காதல் விஷயங்களே மக்களுடைய மனதில் ததும்பித் தத்தளிக்கின்றன. அக்காதலைப்பற்றிக் கேட்கவும், பாடவும், அதை உணரவும், அதை அநுபவிக்கவும் மக்கள் படும் சிரமங்களும், செய்யும் செலவுகளும், தியாகங்களும் கணக்கற்றன; வகையற்றன; அளவற்றன. அவர்களுடைய உள்ள ஆர்வத்தை அவ்வளவு வேகமாகவும் பலமாகவும் ஈர்க்கும் சக்தி அக்காதலிடத்தில் அமைந்து கிடக்கிறது. உலக மெல்லாம் கொந்தளிப்பாக்கி விடுகின்ற அக்காதல் எதன்மேல், அது எவ்வாறு பிறந்தது, அதன் முடிவு எத்தகையது என்று யோசித்தால் அக்காதலின் குட்டு வெட்டவெளியாக வெளிப்பட்டு விடும்.

இன்பத்தை அல்லது சந்தோஷத்தை நாடுவதே மனிதனுடைய இயற்கைக் குணம். தண்ணீரை விட்டகன்ற மீன் தண்ணீரைத்தான் நாடும். அதுபோலவே அவனும். ஆனால் மனிதன் தான் யார் என்ற இயற்கைத் தன்மையை சடுதியில் மறந்து விடுகிறான். 'எண்சாணுடம்பு மாத்திரமே நான். நான் இந்த உடலன்றி வேறு யாது மில்லை. உச்சிக்கும் உள்ளங் காலுக்கு மிடையே தோன்றும் இப்பிண்டம்தான் நான்' என்றெண்ணி அதே தீர்மானஞ் செய்து விடுகிறான். எண்ணி எண்ணி இந்த எண்ணமே அவன் மனதில் வேரூன்றி, வெளிக் கிளம்பி, வளர்ந்து, காய்த்துப் பூத்துப் பெரிய விருக்ஷம்போல் அவனுள்ளத்தை நிரம்பி நிற்கிறது. அக்கொடிய மரத்தின் நிழலில் 'நான் ஆத்மா, நான் உயிர்,' என்ற நல்விதை முளை யெடுக்கவும் முடிவதில்லை. ஆகவே, மேற்கொண்டு உடம்பைப் பற்றியே எல்லா எண்ணமும். எல்லாக் காதலும் அவ்வுடம்பின் மேலேயே. இந்த உடம்பிற்குச் சுகங்கள் கொடுப்பதெப்படி, நாவுக்கினிய பண்டங்களென்ன, கண்களுக்கு இனிய காட்சிகளென்ன, காதுக்கினிய பாட்டென்ன, நுகர்வதற்கேற்ற சிற்றின்பமென்ன என்று எண்ணுவதும், உடம்பு சுகத்திற்கானவைகளைத் தேடுவதும், பாடுபடுவதும், அதற்குத் தடையா யிருக்கும் விஷயங்க

ளிடத்திலும் மனிதர்களிடத்திலும் வெறுப்புக் காட்டி கோபித்துப் போர் செய்வதும், உடம்பிற்குச் சுகம் கொடுக்காத நிலையைப்பற்றி அதிருப்தி பெற்று, மனக் கவலை, மனத் திகில், மனோ பயம் ஆகியவைகளில் விழுந்து நோவதுமே சகஜமாய் விடுகிறது. உண்மை இயற்கை வடிவாக விளங்கும் இவனுக்குப் புறம்பே கொடுத்த உடம்பையே இவன் தானென்று கொண்ட மயக்கத்தால் எந்நேரமும் புறப் பொருள்களிலேயே இவனுக்கு ஆசை எழுகிறது; வளர்கிறது; முதிர்கிறது. இவன் அதிதீவிரமாக ஆசிப்பது - அதாவது காதலிப்பது - புறப்பொருள்களையே. ஏன்? வெளிப்பொருள்களால் தான் இவனது உடம்பு சுகப்படுகிறது. ஆதலால் உணவு, உடை, வேறு உடல் இவைகளையே இவன் காதலிக்கிறான். 'உடம்புதான் நான்' என்ற எண்ணம் இவனைத் தன் அடிமையாக்கிக் கொள்ளவே, இவனுடைய மெய், கண், காது, மூக்கு, நாக்கு என்றவை இவனை அடிமையாக்கிக் கொண்டன. உடனே இவன் வெளிப்பொருள்களுக்கு அடிமையாகிவிட்டான். அந்த அடிமைச் சுகத்தையே நீடூழியான சுகமானதென்று நம்பி அந்த அடிமை சால அழகுடைத்தென்று ஆச்சரியப்பட்டு அகமகிழ்கிறான். ஆனால், கால வெள்ளத்தில் மரண அலை வந்து இவன் உடலைத் தாக்கும்போது அவன் எண்ணிய எண்ணமெல்லாம் பொய்யெனத் தோன்றுகிறது. 'ஐயையோ, இந்த உடல் நானல்லவே' என்ற எண்ணம் மின்னல்போல் அப்போது தோன்றி மறைகிறது. ஆனால் என்ன செய்வது? கால வெள்ளத்தில் பிறப்பு என்ற இன்னோரலை இவனை மீண்டும் உடலைத் தாங்கச் செய்கிறது. மீண்டும் அதே எண்ணங் கொண்டு வாழ்ந்தால் மீண்டும் அதே கதிதான். இப்படியே அவன் தன் நிஜ நிலையை உணர்ந்து வாழ மட்டும் அல்லற்பட வேண்டியதே.

இப் பொய் எண்ணத்தால்தான் மனிதன் பிறருக்குத் தீங்கு செய்ய நினைக்கிறான்; தீய காரியங்களில் பயமில்லாமல் தலைப்படுகிறான்; நாக்கு ருசிக்காகவே மந்தை மந்தையாக மாடுகளையும், ஆடுகளையும், கோழிகளையும், கப்பல் கப்பலாக மீன்களையும் கொல்லுகிறான்; பணத்தில் ஆசைப்பட்டுப் பொய், வஞ்சனை, சூது முதலிய விதங்களில் பணம் பெற ஓடுகிறான்; கள்ளத் தனமாகப் பிறர் மனைவியை இச்சிக்கிறான்; இன்னும் அநேக தீய காரியங்களைச் செய்கிறான். இத்தனைத் தீய காரியங்களைச் செய்தும் இவன் பட்ட சுகம் உடற் சுகமே. அவ்வுடல் அழிவதாகவே, உடம்பினிடம் வைத்த அளவற்ற காதலும் வீண் காதலே. இறுதியில் இவனுடைய மரண காலத்திலும், அதற்குப் பிறகும் இவன் துன்பத்தையே அனுபவிப்பதால், இவனது புறப்பொருள் காதல் முழுதும் வீணானதே.

ஆனால் மனிதன் எதைக் காதலிக்க வேண்டுமென்றால், உடம்பிற்கு அதீதமாயிருக்கும் தன்னை. அது பஞ்ச பூதங்களால் ஆக்கப்



படாதது. அதற்கு அப் பஞ்ச பூதங்களால் ஆக்கப்பட்ட உடம்பு நல்ல ஒரு நோக்கத்தோடு கொடுக்கப்பட்ட ஒரு வெளிக்கருவியே. அதற்கு அதீத ஒன்றையே உயிர் என்றும், ஜீவனென்றும், ஆத்மாவென்றும் சொல்லுவது. அது எப்போதும் இன்பமாகப் பொலிவது. என்றாலும், அப்பொலிவு நன்கு விளங்கும்படிக்குச் செய்யாமலிருப்பதே நம் பாவம். எனவே பாவத்தை உண்டாக்கும் தீய காரியங்களை அறவே விடவேண்டும்; பாவத்தை நீக்க வேண்டும். அதாவது இயற்கை இன்ப வடிவமாக உள்ள தன்னையே தான் அனுபவிக்க வேண்டுமானால், தீய காரியங்களை அறவே விடவேண்டும். இதையே திருவள்ளுவர் பின் வருமாறு குறிப்பிடுகிறார்:

'தன்னைத்தான் காதல னாயின் எனைத்தொன்றும்
துன்னற்க தீவினைப் பால்.'

அதாவது, 'ஒருவன் தன் உண்மை நிலை ஆத்ம நிலை என்று கண்டு அதையே அடைந்து அநுபவிக்கும் காதல் நிரம்பியவனாயிருந்தால், அவன் எத்துணையும் சிறிய தொன்றாயினும் தீய காரியத்தைச் செய்யாது ஒழிவானாக' என்றருளினார்.

உடல் மிக முக்கியம் எனினும், நம் உண்மையான நிலை ஆத்ம நிலை. மனித வாழ்வு என்பது அந்நிலையை மறந்த நாம் மீண்டும் அவ் வெண்ணம் பெற்று இன்பமடைய அருளப்பட்டது. மனித வாழ்வு ஒரு வீணை போன்றது. தெய்வம் அருளிய அவ் வீணையை வீண் காலம் என்ற புழுதியில் எறியலாமோ? இயற்கை யின்பப் பாட்டுப் பாடி யன்றோ மகிழ வேண்டும். மனித வாழ்வு அருமையாகக் கிடைத்த சலவைக் கல் போன்றது. நம் பகுத்தறிவு என்னும் உளியைக் கொண்டு, அதில் நம் இயற்கை இன்ப நிலையாகிய சிற்பத்தைச் செதுக்கி நிறுத்த வேண்டும். மனித வாழ்வு ஒரு திரையைப் போன்றது. அதில் பகுத்தறிவெனும் எழுதுகோல் கொண்டும், அன்பு, அருள், அறம் என்ற வர்ணங்கள் கொண்டும் நம் இயற்கை நிலையாகிய தெய்வீகச் சித்திரம் வரைந் தின்பம் பெற வேண்டும்.

குறித்துக் கொண்ட ஒன்றைப் பெற் றனுபவிக்க உள்ளிருந்து உந்தும் காதல் என்பது ஒரு அரும் பெரும் சக்தி. அது மலை வெள்ளத்தைப்போல் கங்கு கரை யின்றி ஓடும். அதைத் தடுக்க இயலாது. ஆனால், அதை வாய்க்கால்கள் வழியே திருப்பினால் வயல்களிற் பாய்ந்து விளைச்சலுக்குப் பயன்படும். அதுபோல் அதைப் பொய்யான உடம்பின் மேலும், புறப் பொருள்களின் மேலும் செலுத்தாமல், மெய்யான ஆத்மாவின்மேல் திருப்ப வேண்டும். அப்போதுதான் உயிருக்கு உறுதியையும் பிற நலங்களையும் விளைவிக்கும் எண்ணங்களை எண்ணுவோம்; பேச்சைப் பேசுவோம்; காரியங்களைச் செய்வோம்.

உடற்காதல் மடக் காதல். உயிர்க்காதலே உயர்க் காதல். உடற் காதல் வெறுஞ் சாதல். உயிர்க்காதலோ நித்யத்திற்குப் போதல். அந்த உயர்க் காதலே உண்மையான அன்பு. அன்புருவே ஆண்டவன் ஆவன். ஆகவே, உயிராகிய தன்னைத்தான் காதலித்தல் என்ருல், தன்னுயிரானது ஆண்டவன் திருவுருவைப் பெறச் செய்தல் என்பதே யாகும். இவ்வுண்மையை உலகுக்கு முழக்கும் முரசே தமிழ் என்னும் தனி அரசு.

நண்பர்களே ஒருவனது தலைவிதியை நிர்ணயிக்கக் கூடியவர்கள். நண்பர்களைத் திரட்டச் சக்தி யற்றவன் தன் வாழ்க்கையையே பயனற்றதாக்கிக் கொள்கிருன். —டாக்டர் ஹில்லிங்

# அழகு

(திரு. வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார்)

அழகி னியலினை யனுபவித் தறியார்
பழகினர் போன்று பலபடப் பகர்ந்தனர் ;
வண்ணமே வனப்பென வகுத்தனர் ; அதான்று ;
வடிவே யெழிலென வரைந்தனர்; அதான்று ; நற்
குணனே கவினெனக் கூறினர், அதான்று ;
பயனுடைப் பண்பெனப் பரிந்தனர் ; அதான்று ; மற்
றின்னும் பலவா யியம்பினர் ; அவையல.
என்னே ! அழகி னியலம் மம்ம ! !
எல்லா நலனு மினிமையிற் கலந்து
கண்டவர் மனத்தைக் கணத்திற் பிணித்துத்
தன்வயப் படுக்குந் தன்மைத் தன்ரே ?
அறத்தி னீங்கிய வழகு முண்டுகொல் ?
மறத்தொடு படுமேன் மாண்பன்
றின்பஞ் செய்யு மியல்பா தலினே.

# போக்கிரி ஆறுமுகம்

(திரு. S. கோதண்டராமன் B. A., B. L.,)



ஆறுமுகத்தை அறியாதவர்கள் சாத்தூரில் இல்லை என்றே சொல்லலாம். பச்சைக் குழந்தை முதல், பல் லில்லாத கிழவர் வரை எல்லாருக்கும் தெரியும். அழுத பிள்ளையும் அவனைக் கண்டால் வாயை மூடும். வாலிபரும் அவனை மரியாதையாய் வரவேற்பர். எங்கே போனாலும் அவனைப் போ என்று சொல்வார் கிடையாது. அந்த ஊரிலுள்ள குட்டி நாய் முதல் பெரிய நாய் வரை, அவனைக் கண்டால், வாலை ஆட்டி, அவன் காலை நக்கி, சலாம் செய்யாமல் போகாது என்ருல், அவன் பெருமையைப்பற்றி அதிகம் சொல்ல வேண்டியதில்லை.

## அவன் குரு

குண்டு கிருஷ்ணப் பிள்ளைதான் ஆறுமுகத்தின் குரு. அவர் சிஷ்யர்களுக்குச் சொல்லிக் கொடுக்கும் முதல் பாடம், குருவுக்கு எப்படிக் கொள்ளி வைப்பது என்பதுதான். அவருடைய முக்கிய தத்துவங்கள் பின்வருவன : (1) நாலுபேர் கஷ்டப்பட்டால் நமக்கு ஆனந்தம். (2) தினம் குறைந்தது நூறு பொய்யாவது சொல்ல வேண்டும். (3) தப்பித்தவறிக்கூட பிறருக்கு நன்மை செய்யாதே. (4) கடவுள் இல்லை. நமக்கு நாம்தாம் கடவுள் என்பன. கிருஷ்ணப்பிள்ளை தெருவில் உள்ள பையன்களை எல்லாம் வாத்தியார் வீட்டில் போய் மாரடியுங்கள் என்பார்; வாத்தியார் கதவைச் சாத்திஞல் கதவைத் தட்டித் தட்டி மாரடியுங்கள் என்பார். இத்தகைய கூட்டங்களில் அவர் பிரதம சிஷ்யன் ஆறுமுகம் தலைமை வகிக்கத் தவறுவ தில்லை; குருவைப்பற்றி யாராவது அவதூருகப் பேசிவிட்டால் அவர்களைப் படாதபாடு படுத்துவான். கிருஷ்ணப் பிள்ளையே அடிக்கடி அவனைப் பார்த்து 'குருவுக்குத் தகுந்த சீடன். இவன் நமக்கு சீக்கிரம் கொள்ளி வைப்பான்' என்று சந்தோஷப்படுவதுண்டு.

## கல்விப் பயிற்சி

ஆறுமுகம் படிக்காத பள்ளிக்கூடம் சாத்தூரில் இல்லை என்று நிச்சயமாய்ச் சொல்லலாம். திண்ணைப்பள்ளிக்கூடம் நான்கு, முஸ்லீம்

பள்ளிக்கூடம் ஒன்று, ஆங்கிலப் பள்ளிக்கூடம் இரண்டு ஆகிய எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் அவன் படித்ததுண்டு. அடிக்கடி அவனுக்கு மாத்திரம் லீவு வருவதுண்டு. ஏண்டா பள்ளிக்கூடம் போகவில்லை என்றால் 'இன்னைக்கு வாத்தியாருக் கெல்லாம் கடைசி நாளாம்' என்பான். திண்ணைப் பள்ளிக்கூடத்தில் மற்றப் பையன்கள் உரக்க பாடம் ஒப்புவிக்கும் போது, இவன் வாத்தியார்மேல் வசைமொழி அர்ச்சனை செய்துகொண் டிருப்பான். வாத்தியார் சற்று கண்ணை மூடினால் உடனே மற்றும் சில பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு நழுவிவிடுவான். பள்ளிக்கூடத்திற்குப் பக்கத்தில் செல்லும் ரயில் பாதைக்குச் சென்று ரயிலில் போகிறவர்களை வாயார வாழ்த்தும் வசைமொழி எட்டி லடங்காது.

தகப்பனார்தான் பள்ளிச் சம்பளத்தைக் கொடுக்க வேண்டும். தப்பித் தவறி, அவன் கையில் கிடைத்தால், அன்று சிநேகிதர் எல்லாரையும் அழைத்துக் கொண்டுபோய் மாம்பழம், மிட்டாய் முதலியவை வாங்கிக்கொண்டு ஆற்றுப்பாலத்து கண்ணில் போய் உட்கார்ந்து ஆநந்தமாய்ப் பொழுது போக்குவான்; அடிபடுவதற்கு அஞ்சவே மாட்டான். அடித்தவர்கள் கை வலிக்குமே யொழிய அவன் முதுகு எந்தக் காலத்திலும் வலித்ததில்லை. பரிக்ஷையில், கேள்விக் காகிதத்தை வாங்கி அதில் உள்ளதை அப்படியே திருப்பி வேறொரு காகிதத்தில் எழுதுவான். அல்லது 'எனக்கு ஒன்றும் தெரியாது' என்று எழுதுவான். வாத்தியார்களை ஆற்றங்கரையில் கண்டுவிட்டால் அவர்களுடன் சண்டைபோடத் தவறமாட்டான்.

## கல்வியின் உபயோகம்

ஆறுமுகத்தைப் பதினெட்டும் பதினைந்தும் எவ்வளவு என்றால் உடனே பளிச்சென்று 'நாற்பத்திரண்டு' என்று பதில் சொல்வான். அவன் தகப்பனாரிடம் போய் என்னய்யா உங்கள் பையன் இப்படிச் சொல்கிறான் என்றால் 'அவன் குறைத்துச் சொல்கிறானா, தாராளமாகத்தானே சொல்கிறான்' என்று சந்தோஷமாகப் பதில் சொல்லுவார். ஆறுமுகத்தை யாராவது பார்த்து 'என்னடா சின்னப்பயலே, இப்படிச் செய்யலாமா' என்றால் 'சிறியோ ரெல்லாம் சிறியரு மல்லர்' என்பான். 'அட முட்டாள், பெரியவர் சொல்வதைக் கேள்' என்றால், 'பெரியோர் எல்லாம் பெரியரு மல்லர்' என்பான். ஒரு நாள் அவன் தாயாருக்கு வயிற்றெரிச்சல் பொறுக்க முடியாமல் 'அட மூதேவி, உன்னையும் நான் பெற்றேனே' என்றாள். உடனே 'பெற்றோர் எல்லாம் பிள்ளைக ளல்லர்' என்றான். படித்த படிப்பை இவ்விதம் நுட்பமாக உபயோகித்து வந்தான்.

## தொழிற் கல்வி

நாலுகிளாசில் நாலுவருஷத்துடம் அவன் சாதாரணக் கல்வியை நிறுத்தினான்; பிறகு வெறும் படிப்பினால் பிரயோஜனமில்லை என்று



தொழிற்கல்வி கற்க ஆரம்பித்தான்; சிவன் கோயில் மேளக்காரன் சிங்காரத்தை அழைத்துத் தேங்காய், பழம், வெற்றிலை ஒரு ரூபா முதலானது வைத்துக் குருவாகக் கொண்டான்; பிறகு தினம் அவன் வீட்டுக்குப் போய்த் தவுல் கற்றுவந்தான்; ஒரு நாள் மிகவும் திறமையாக தவுல் அடித்து அதைக் கிழித்தான். இது தெரிந்த சிங்காரம் 'தம்பி நீ படிச்சு கிழிச்சது போதும். இனிமேல் தயைசெய்து இங்கே வராதே' என்று சொன்னான். அத்துடன் ஆறுமுகம் அதை விட்டுவிட்டான்.

தற்செயலாக அச்சமயம் அவ்வூருக்கு ஒரு பாலர் நாடகக் கம்பெனி வந்தது. கம்பெனி மானேஜர் நடராஜபிள்ளையிடம் போய்த் தன்னையும் கம்பெனியில் சேர்த்துக் கொள்ள வேண்டு மென்றான். அவர் ஒரு பாட்டு பாடச் சொல்ல, உடனே 'நான் தின்னேன் மொச்சக்கொட்டை, நான்........' என்பதற்குள் 'போதும் போதும் தம்பி. உனக்கு ஒரு சலாம். நீ ஓடிப் போ' என்றார்.

## மாறுபாடு

ஆறுமுகத்தினிடம் சில அருமையான குணங்க ளிருந்தன. கள்ளி வயிற்றில் அகில் பிறப்பது போலும், சேற்றில் தாமரை பிறப்பது போலும் போக்கிரிகளிடன் சில அபூர்வ குணங்கள் காணப்படுகின்றன; முக்கியமாக சிநேகித விஷயத்திற்காக எதுவும் செய்யத் தயாராய் இருப்பார்கள். நாளை என்னும் நினைவு அவர்களிடம் கிடையாது; ஜீவகாருண்யம் மிகுந்தவர்களாகவே இருக்கிறார்கள். இவை யெல்லாம் ஆறுமுகத்தினிடம் பூரணமாகப் பொருந்தி இருந்தன. ஊருக்கு வெளியே நான்கு மைல் தூரத்தில் உணவற்று, ஒருவரும் கவனிப்பாரற்று கிடந்த ஒரு சீக்குப் பிடித்த நாய்க்கு, தினம் சாயங்காலம் நடந்து ரொட்டியும் பாலும் கொண்டு போய்க் கொடுத்து வந்தான். சற்று மயக்க மடைந்த தனது நண்பனை, இனி நடக்க வேண்டாம் என்று சொல்லிவிட்டு இரண்டு மைல் தூரம் தன் முதுகில் தூக்கி வந்தான். நண்பர்கள் கோபித்தாலும் அவர்களை விட்டகலாது, அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வான்.

## அவன் ஜோசியம்

'1935-ஆம் வருஷத்தில் உலகில் எல்லாரும் மடிந்து போக, பாக்கி இருபத்தைந்து பேர்கள்தாம் இருப்பார்கள். அதில் நான் ஒருவனாய் இருப்பேன். ஆகையால் எல்லாரும் உங்களுடைய ஆஸ்திகளை என்னிடம் ஒப்புவியுங்கள்' என்று அடிக்கடி சொல்வான். எதிர்பாராத விதமாக அவனுக்கு மதுரை முனிசிபல் இலக்டிரிக் டிபார்ட்டுமெண்டில் வேலையாயிற்று. மூன்றாம் நாள் கம்பத்தின் மீது ஏறி வேலை செய்துகொண் டிருந்தான். குறித்த வேளையில் மின்சார சக்தி

எல்லாவிடத்திற்கும் பரப்பப்படும் சங்கதி அவனுக்குத் தெரியாது. திடீரென்று உடம்பில் ஒரு வித அசைப்பு உண்டாயிற்று. ஆறுமுகம் உயிரற்று கம்பியினின்றும் தொங்கினான். அதிகம் சொல்வானேன். இறுதிச் சடங்குகள் நிறைவேறின.

ஆறுமுகம் சாத்தூரில் மின்னல் போல் தோன்றினான்; முட்புதரிடை தோன்றிய மல்லிகைபோல் மற்றோரை மகிழ்வித்தான்; காற்றைப்போல் மறைந்தான். எவ்வுயிரையும் காத்து நிற்கும் ஈசன் அவனுக்கு நற்பதவி அளிக்குமாறு இறைஞ்சுவோமாக.

---

## பொறுக்கு மணிகள்

### காலத்தின் அருமை

காலத்தின் விலையை அறிந்துகொள். காலமே உன் உயிர். அதை வீணாக்குவது உன்னை நீயே கொலை செய்து கொள்வதைப் போலாம். —சார்ல்ஸ் வாக்னர்

### ஒரே குடும்பம்

நமது தினசரி வாழ்வில் சாதி, மத, சமூகப் பாகுபாடுகளை உறுத்திக் காட்டும் எச் செயலையும் செய்யலாகாது. யாவரும் ஒரே குடும்பத்தினரா யிருத்தல் வேண்டும். —சரோஜனி தேவியார்

### எதையும்

ஒவ்வொரு வேலையையும், அஃது எவ்வளவு அற்பமான தாயினும், உடனுக்குடனே ஊக்கத்தோடும் விருப்பத்தோடும் செய்து முடித்தல் வேண்டும். —ஜேம்ஸ் ஆலன்

### உன்னைப் பற்றி

உன்னைப் பற்றி யாரேனும் குறை கூறினால், அஃது உண்மையாயின் திருத்திக்கொள்; பொய்யாயின் நகைத்துவிடு.

—எபிக்டெட்டஸ்

### அன்பே ஆண்டவன்

எவனது உள்ளத்தில் அன்பு குடிகொண்டு உள்ளதோ, அங்குத்தான் ஆண்டவன் குடிகொண்டுள்ளான். —குரு. நானக்கு

### உண்மையின் உயர்வு

நீ எந் நிலையில் இருப்பினும் சரியே; சொன்ன சொல்லைக் காப்பாற்றுவதை உன் கடமையாகக் கொள்; நீ, உயர்வடைவாய்.

—தாமஸ் கார்லைல்

# 'யான் கொள்ளைக்காரன் ஆனதேன்?'

('ஜீவா')

தொண்டை நன்னாட்டில் சிறப்புற்றுத் திகழும் வள்ளிமலையில் திருக்கோயில்கொண் டெழுந்தருளி யிருக்கும் அழகப்பிரானும் முருகப் பெருமானைக் கண்டு களிக்க வருதல் வேண்டுமென்று என்னை எனது நண்பரொருவர் நான்கைந்து ஆண்டுகளாகக் கூப்பிட்டு வந்தார். எனக்கும் குன்றுதோ றாடுங் குமரனை வள்ளி வெற்பில் கண்டு களிக்க வேண்டுமென்னும் விருப்ப முண்டு. ஆனால் தாளாண்மையில் தலைப்பட் டிருந்த எனக்கு இத்தனை வருடங்கள் அவ்விருப்பம் நிறைவேறுவதற்கு இடனில்லாது போயிற்று. கடைசியாக யான் சென்ற தை மாதத்தில் எனது நண்பர்கள் நால்வரோடு வள்ளிமலைக்குப் புறப்பட்டேன்.

நாங்கள் ஐவரும் சென்டிரல் ஸ்டேஷன் சென்று இரவு 9-30 மணிக்குச் செல்லும் பெங்களூர் பாசஞ்சர் ரயில் வண்டியில் ஏறினோம். இரவில் ரயில் பிரயாணஞ் செய்வது எங்களுக்கு மகிழ்ச்சியையே தந்தது. பல ஸ்டேஷன்களிலும் நின்று நின்று சென்ற அந்த ரயில் வண்டி 12-15 மணிக்கு அரக்கோணம் சந்திப்பில் (ஜங்ஷனில்) நின்றது. அங்கே பிரயாணிகள் ஒரு வண்டியிலிருந்து வேறொரு வண்டிக்குப் பரபரப்புடன் சென்று ஏறுங் காட்சி பார்க்க விநோதமா யிருந்தது. பால், பழம், பலகாரம் முதலியன விற்போர் ஆரவாரம் சொல்லுந் தரத்த தன்று. 12-30 மணிக்கு மீண்டும் எங்கள் ரயில் வண்டி மிக வேகமாக வடக்கு நோக்கி யோடியது. யாங்கள் வழி நெடுக உலக நிகழ்ச்சிகளைப் பற்றியும், அறிஞர்கள் அறிவுரை யாராய்ச்சிகளைப் பற்றியும், ஆண்டவன் அருள் பெற்ற மெய்யன்பர்கள் பக்தி நனி சொட்டச் சொட்ட பாடிய பாக்களைப் பற்றியும் பேசிக் கொண்டு சென்றோம். ஆதலால் எங்களுக்கு உறக்கமோ, பிரயாணத்தால் ஏற்படும் சிரமமோ உண்டாகவில்லை. கடைசியாக ஒன்றரை மணிக்கு எங்கள் வண்டி திருவல்லம் (அது இப்போது திருவலம் என வழங்குகிறது.) ஸ்டேஷனை யடைந்தது. நாங்கள்ரயிலை விட்டு இறங்கினோம்.

திருவல்லம் ஒரு சிறிய ஸ்டேஷன். அங்கு விளக்குகள் மங்கலாக எரிந்து கொண்டிருந்தன. முதலில், யாங்கள் அந்த ஸ்டேஷனில் தங்கிப் பின்னர் விடியற் காலையில் வள்ளிமலை நோக்கிச் செல்லலா மென்று எண்ணினோம். ஆனால் ஸ்டேஷன் இருக்கும் சீர்கேடான நிலைமையை அறிந்ததும் யாங்கள் அங்கே தங்குவது கூடாத காரியமென்று தீர்மானித்தோம். எனவே, யாங்கள் அங்குள்ள மாட்டு வண்டிக்காரனொருவனை யழைத்து ஸ்டேஷனி லிருந்து

திருவல்லம் என்னும் ஊருக்குச் செல்ல எத்தனை மைல் இருக்கும் என்று கேட்டோம். அவன் மூன்று மைல் தூரமிருக்குமென்றான். உடனே அவனைப் பின் தொடர்ந்து வண்டி யிருக்குமிடத்தை யடைந்தோம். எங்களோடு ஒரு குருக்களும், மற்றுஞ் சிலரும் வந்தனர். அவர்கள் மற்றொரு வண்டியை அமர்த்தினர். குருக்கள் வண்டிக்காரனைப் பார்த்து, 'அடே! நம்மோடு தீண்டாதார் யாராயினும் வரப் போகிறார்கள். ஜாக்கிரதை' என்றார். இதைக் கேட்டதும் அவரோடு வந்த சிலர் பின் தங்கலாயினர். அப்போது என் மனம் பட்ட பாட்டை என்னென்பேன்!

யாங்கள் வண்டியை அடைந்ததும், வண்டியில் மாடு பூட்டப்பட்டு ஆயத்தமாயிற்று. யானும், எனது நண்பர்களும் ஒரு வண்டியி லேறினோம். வண்டி திருவல்லத்தை நோக்கிப் புறப்பட்டது. பாதை மேடும் பள்ளமுமாகக் காணப்பட்டது. சில விடங்களில் மலைக் கற்கள் பூமியில் புதைந்து கிடந்தன. ஆதலால் நாங்கள் வண்டி மேட்டிலும் பள்ளத்திலுமாகச் சென்று மலைக்கற்கள் மீது செல்லும்போது ஒருவர்மீ தொருவர் மோதிக் கொள்ள நேர்ந்தது. அதுவன்றி, நள்ளிரவில் பேரிருளில் நாலா பக்கங்களிலுமுள்ள மரங்கள் காற்றினால் அசைவது, பேய்கள் தலை விரித்தாடுவது போல் தோன்றிப் பெரும் பீதியை உண்டாக்கியது. நாங்கள் இம்மாட்டு வண்டியில் பிரயாணஞ் செய்தது பெருந் துன்பத்தை விளைத்தது. இரண்டு மணிக்கு நாங்கள் திருவல்லத்தை யடைந்தோம்; அங்கு ஓரிடத்தில் அவ்விரவைப் போக்கினோம்.

விடியற் காலையில் நாங்கள் விழித்தெழுந்து, அவ்வூருக்குப் பக்கத்துள்ள ஆற்றுக்குச் சென்று காலைக் கடனை முடித்துக் கொண்டோம். அது மலையை அடுத்த ஊராதலால் எங்கே பார்த்தாலும் பனி மிகுதியாகச் சூழ்ந்திருந்தது. அவ்வூரிலுள்ளாரை நாங்கள் அவ்வாற்றின் பெயரை வினவியபோது, அவர்கள் அதன் பெயர் நீவாநதி என்றும், முருகப் பெருமான் தணிகை மலையி லிருந்து வள்ளி வெற்புக்குச் சென்று வள்ளியம்மையாரை விவாகஞ் செய்துகொண்டு வருகையில் அங்குள்ள ஆற்றைக் கண்டு கையைக் காட்டி 'நீவா' என்றழைத்த போது, அது அவ்விருவர் பின்னே ஓடி வந்ததாகவும், அதனால், அதற்கு நீவா நதி என்று பெயரேற்பட்டதாகவுங் கூறினார்கள். இதைக் கேட்டு நாங்கள் வியப்படைந்தோம். குளிர்ந்த தெளிந்த நீரைப் பருகிய நான் அந் நதியைப் பார்த்து 'நீவா! நீவா!' என்றழைத்தும், அது என்னை ஏறெடுத்தும் பாராது சலசல வென்ற ஓசையோடு ஓடிக்கொண் டிருந்தது.

அங்கிருந்து யாங்கள் பெரிய கோபுரத்தோடு திகழும் கோயிலை யடைந்து அதில் எழுந்தருளி யிருக்கும் சிவபெருமானையும் பார்வதி தேவி யாரையும் சேவித்து வணங்கினோம். அக்கோயிலில் யாங்கள் கண்ட அதிசயம் என்னவென்றால், அங்குள்ள நந்தி சுவாமியை நோக்கிய வண்ண மில்லாது திரும்பி யிருந்தது. அதற்கு அவ்வூரார் ஏதேதோ கதையைக் கூறினார்கள்.

நாங்கள் காலை யுண்டி யருந்திய பின், மீண்டும் மாட்டு வண்டியிலேறி வள்ளிமலைக்குப் புறப்பட்டோம். வள்ளிமலை திருவல்லத்தி லிருந்து எட்டு மைலிருந்தது. திருவல்லத்தி லிருந்து வள்ளிமலைக்குச் செல்லும் பாதை ஒழுங்கா யிருந்ததாலும், காலை வேளை யாதலாலும், இரவு துன்ப முற்றதைப் போல் இல்லாது சிறிது சௌகரியமா யிருந்தது. இரண்டு மைல்கள் சென்றதும், பாட்டையின் இரு பக்கத்திலும் மலைத் தொடர்கள் அழகாகக் காணப்பட்டன. அடிக்கடி வண்டிக்காரன் எங்களை நோக்கி, 'சாமி கொஞ்சம் முன்னுக்கு வாங்கோ' என்று கூறிக் கொண்டே வந்தான். அப்போதெல்லாம் நான், 'ஐயா! நாங்கள் முன்னுக்கு வரத்தான் பாடு படுகிறோம். ஆனால் அது அவ்வளவு எளிதில் சாத்தியப்படுவதா யில்லையே!' என்று கூறி வந்தேன். என் நண்பர்கள் இவ் வார்த்தையைக் கேட்டு நகைத்தார்கள்.



இவ்வாறாக, நாங்கள் மேற்பாடியை அடைந்தோம். அது ஒரு சிறிய ஊர். அதில் சில ஏழைக் குடியானவர்கள் வசித்து வந்தார்கள். நாங்கள் அங்கே சென்றபோது எங்களுக்கு வள்ளிமலை காட்சி யளித்தது. மேற்பாடியிலிருந்து வள்ளிமலைக்கு ஏறக்குறைய ஒரு மைல் இருக்கும். நாங்கள் சிறிது நேரத்திற்கெல்லாம் வள்ளிமலை யடைந்து வண்டியை விட்டு இறங்கினோம்.

## வள்ளிமலையின் காட்சி

பின்னர் நாங்கள் அங்குள்ள சத்திர மொன்றில் தங்கினோம். அங்கே குடியானவர்கள் வீடுகள் நான்கைந்தே யிருந்தன. நாங்கள் அங்குச் சென்றபோது பத்துமணி யிருக்கும். உடனே நாங்கள் அங்குள்ள குளத்தில் நீராடிவிட்டு மலைமேல் ஏறினோம். அன்று வள்ளிமலையில் எழுந்தருளி யிருக்கும் முருகனுக்கு அபிஷேகமானதால், மற்றும் பல மக்கள் அங்கு வந்து குழுமி யிருந்தனர். வள்ளிமலை மற்ற மலைகளுக் கிடையே ஓங்கி யுயர்ந்து நின்று, அவைகளுக்கு நடு நாயகமாய் விளங்கியது.

நாங்கள் மலைமீது ஏறஏற எங்களுக்கு இயற்கைத் தாய் காட்சி யளித்து வந்தாள். ஆங்காங்கு மாஞ்செடி கொடிகள் வளர்ந்திருந்தன. நாங்கள் வெயில் கொடுமையைத் தாங்காது, மர நிழலில் நின்று நின்று சென்றோம். இவ்வாறு அரை மணி நேரம் நடந்து கடைசியாக முருகப்பெருமான் வீற்றிருக்கும் கோயிலை [illegible]டைந்தோம்.

அவள் சில [illegible]

[illegible] ஒரு மங்கை [illegible] கல்லால் அமைக்கப்பட் டிருந்தது. அம்மலைக் கல்

அக்கோயில் ஒரு இலக்[illegible] போதிய இட வசதி யுடையதா யிருந்தது. உள்ளே குடைந் தெடுக்கப்பட்டு [illegible]டப்பட்டிருந்த சிறு மண்டப மொன் அம்மலைக் கல்லின் வெளிப்புறத்தில் கட[illegible]ந்தனர். நாங்கள் அம் மண்டபத்தை றில் முருக னடியார் பலர் குழுமி யிரு[illegible] முருகப்பிரான் எழுந்தருளி யடைந்து கோயிலினுள் நுழைந்தோம். அங்[illegible]க்கப்பட் டிருந்தன. அப் யுள்ள இடத்திற்குச் செல்ல பல படிகள் அ[illegible]களின் நுட்பமும், பல் படிகளின் மீது நாங்கள் ஏறுங்கால், எனக்குத் தத்துவ[illegible] வந்தது. 'பேணு சமய நெறிகளாஞ் சோபானத்தின் தன்மையும் நினைவுக்கு [illegible]வத்தைச் சார தத்துவங்க ளென்னும் பெருகு சோபான மேறி யாணையாஞ் [illegible] என்று சேக்கிழார் மொழிந்துள்ள வணைபவர் போல நீணிலமலையை யேறி' நெகிழ்ந்தேன். முடிவிலா இன்ப அமுத மொழிகளை எண்ணி எண்ணி மனம் பொங்கி மட்பெருந் மான அன்பினை யெடுத்துக் காட்ட அளவிலா ஆர்வம் எழும்பெரு காதல் கூர சுற்று முற்றும் நோக்கி யென்பு நெக்குருகி யுள்ளத்து சென்றேன். வேட்கையோடும் முருகன் இருக்குமிடம் விரைந்து சென்றேன்.

'அம்மலையின் உச்சியை எட்டிய அளவில் வள்ளி தேவசேனை சமேதராய் முருகப்பெருமான் நின்று எங்களுக்குக் காட்சி யளித்தார். வேண்டுநர் வேண்டி யாங்கு எய்தினர் வழிபட ஆண்டு ஆண்டு உறையும் குமரக் கடவுள் தமது

கருணை கூர்ந்த அருள் திருநோக்கத்தை எங்கள் மீது பதித்து, 'என்று வந்தீர்' என்று கேட்பதுபோல், அவரது புன்னகை பூத்த முகத்தின் திருக்குறிப் பிருந்தது.

இக்கண் கொள்ளாக் காட்சியை யான் கண்டு, மூகம் அமர்ந்து ஏத்திக் கைதொழுது பரவிக் கால் உற வணங்கி நெடிது போது உயிர்த்து நின்றேன். மயிர்க் கால்தோறும் புளகம் பொங்க, கண்ணீரருவி பாய யான் வாயார வழுத்தினேன்.

பின்னர் யான் என் நண்பர்களோடு வெளிப் போந்து அம்மலை யுச்சியைப் பார்த்தபோது, முருகப் பெருமான் அமர்ந்திருக்கும் குறியைக் காண்பிப்பதற்காக அதன்மீது ஒரு துவஜஸ்தம்பம் நிறுவப்பட்டிருப்பது தெரிந்தது. அதை விட்டு யாங்கள் சில அடிகள் எடுத்து வைத்தபோது கூட்டத்திலுள்ள அன்பர்கள் சிலர் எங்களை நோக்கி, 'இவ்வளவு தூரம் வந்தீர்களே! வள்ளிமலைசாமியைப் பார்த்து விட்டுப் போகப்படாதா!' என்று கூறி அவர் உள்ள இடத்தையுங் குறிப்பிட்டனர். எனவே, அவரைக் காண யாங்கள் விழைந்து மலைமீது மேலுஞ் சென்றோம். அப்போது நடுப்பகல் 12-மணி யாதலால் சூரியன் தனது வெவ்விய கிரணங்களைப் பரப்பிக் காய்ந்துகொண் டிருந்தான். மலைமீது செல்லும் எங்களுக்கு அவ்வெயிலின் கொடுமை தாங்க முடிய வில்லை. என்னோடு வந்த நண்பர்களில் ஒருவரான தமிழ்ப் புலவர் 63 வயதுடையவராதலால் அவர் அச்சூரிய வெப்பத்தில் மலைமீ தேறுவது சிரமமாகவே இருந்தது. நாங்கள் திருப்பதி, திருவண்ணாமலை, திருக்கழுக்குன்றம், திருப்போரூர், திருத்தணிகை முதலிய பல மலைகளைப் பார்த்திருக்கிறோமானாலும், அமைப்பிலும், இயற்கை வளப்பத்திலும் வள்ளிமலை அவற்றினும் மேற்பட்டதென்பதை அதன் முழுதும் சென்று பார்த்ததி லிருந்து அறிந்தோம்.

## துறவியின் தோற்றம்

இவ்வாறு, யாங்கள் தாமரை குளம் முதலியவற்றைக் கடந்து சென்று கடைசியாக வள்ளிமலை சாமியார் வசிக்குமிடத்தை யடைந்தோம். அச்சமயம் வள்ளிமலை சாமியார் ஒரு சாய்வு நாற்காலியில் சாய்ந்த வண்ணம் உட்கார்ந்திருந்தார். அவரைச் சூழ்ந்து மக்கள் பலர் அடக்க வொடுக்கத்தோடு அமர்ந்திருந்தனர். சாமியார் வசிக்கும் அந்த இடம் வள்ளிமலையிலேயே மிக அழகானதாகும். அங்கு ஒரு பெரிய ஆலமரம் வளர்ந்திருந்தது. அதைச் சூழ்ந்து மற்றும் பல பழந்தரும் மரங்கள் காணப்பட்டன. அவற்றினிடையே ஒரு சிறு குடிசை கட்டப்பட்டிருந்தது. அதில்தான் சாமியார் வசித்து வருகிறார். அதற்குப் பக்கத்தில் மலைக் கற்களால் கட்டப்பட்ட ஒரு சிறு கட்டிடம் இருந்தது. அதில் சாமியாருக்கு வேண்டிய சாமக்கிரியைகள் வைக்கப்பட்டிருந்தன. சாமியாரிடத்தில் அன்பு பூண்ட வயது சென்ற அம்மையாரொருவர் அவருக்கு வேண்டிய பணிவிடை செய்து வருகிறார். அதுவன்றி, சாமியாரால் வளர்க்கப்படும் பசுக்களைக் கவனித்துக் கொள்வதற்கும், பச்சிலை மூலிகைகளைப் பல விடங்களுக்குச் சென்று கொண்டு வந்து வேண்டிய உதவி செய்வதற்கும் இரு ஆட்கள் இருக்கின்றனர். அவர்களில் ஒருவனுக்கு ஏழு ரூபா சம்பளம் கொடுப்பதாகவுந் தெரிகிறது. நாங்கள் சென்றிருந்த சமயம், 30 வயதுள்ள ஒரு பிராமண மாதும், 16 வயதுள்ள ஒரு பிராமணச் சிறுமியும், 9-வயதுள்ள மற்றொரு சிறுமியும் அக் குடிசையில் இருந்தனர்.



வள்ளிமலை சாமியார் தலையில் சிகையும், நீண்ட தாடியு முடையவராய் விசுவாமித்திரர் போல் காணப்பட்டார். அவர் இடுப்பில் ஒரு துண்டையே கட்டி யிருந்தார். நாங்கள் அவரை யணுகி வணங்கி நின்றோம். எங்களைக் கண்டதும் சாமியார் உபசார வார்த்தைகள் கூறி வரவேற்று இருக்கச் செய்தார். யாங்கள் அவருக்கு அருகாமையில் வலது பக்கத்தில் உட்கார்ந்தோம். எங்கள் தோற்றத்தையும், நாங்கள் பேசும் மாதிரியையுங் கண்ட சாமியார் மற்றவர்களைக் காட்டிலும் எங்களிடம் அதிக மதிப்பு கொண்டதாக அவர் பேசிய வார்த்தைகளி லிருந்து தெரிந்தது. அவர் எங்களை நோக்கி, 'ஐயோ, நல்ல வெயிலில் வந்தீர்களே! மாலையில் வரப்படாதா?' என்றார். யான், 'தங்களைப் போன்ற பெரியார்களைக் காணுதற்குக் காலத்தையும் சிரமத்தையும் பார்க்கலாமா? தங்களைக் கண்டபோதே எங்களுடைய களைப்பெல்லாம் பறந்தோடி விட்டது' என்றேன். இதைக் கேட்டதும் அவர், 'நீர் நினைக்கிற மாதிரி நான் அவ்வளவு பெரியவனல்லேன். ஜனங்கள் என்னைப் பிரமாதமாக நினைக்கிறார்கள். நான் அல்லல் தரும் மக்கள் கூட்டத்தை விட்டு குமரப் பெருமான் எழுந்தருளி யிருக்கும் அமைதியான இவ்விடத்தில் வசிக்கலாமென்ற எண்ணத்துடனே இங்கு வாழ்ந்து வருகிறேன். ஆனால் நான் எதிர்பார்த்ததற்கு மாறாக இங்கு யாவும் நடக்கிறது. நான் ஏதோ பெரிய சாமியாரென்றும், நினைத்ததைச் செய்யவும், பிறர் விரும்பியதை யெல்லாம் நிறைவேற்றவும் வல்லவனென்றும், மந்திரம் யோகம் முதலியவைகளில் பழகிய சித்தனென்றும் ஜனங்கள் நினைக்கிறார்கள். அது மிகவுந் தவறு. நான் பிறப்பில் பிராம்மணனாய்ப் பிறந்தும், இளமையில் அவ்வருணத்துக்குரிய ஆசாரத்தோடு இருக்கவில்லை. தமிழ்க் கல்வியோ, ஆங்கிலக் கல்வியோ இல்லாததால், யான் சமையற்றொழிலை மேற்கொண் டிருந்தேன். அதில் எனக்கு நல்ல வருவாய் கிடைத்தது. என் உற்ற வயதில் யான் ஒரு மாதை மணந்து கொண்டேன். அவள் சில வருடங்களுக்கெல்லாம் இறந்து விட்டாள். பின்னர் இரண்டாந் தாரமாக ஒரு மங்கையை வதுவை செய்தேன். அவளுக்கு இரு பிள்ளைகள் பிறந்தனர். ஒருவன் இறந்து விட்டான். மற்றொருவன் சிறிது காலம் என்னோடிருந்து பின்னர் உத்தியோகங் கருதிப் பினாங்குக்குச் சென்று அங்கேயே வாழ்ந்து வந்தான். ஒரு வாரத்துக்கு முன்தான் அவன் சென்னை வந்து நான் இங்கிருப்பதறிந்து இங்கு வந்து சேர்ந்தான். அவனுடைய மனைவி மக்களுமே இதோ இருப்பவர்கள். அவன் ஏதோ அலுவலாக இப்போது சென்னை சென்றிருக்கிறான். யான் முப்பது வயதுக்கு மேற்பட்டுதான் தமிழ் கற்றுக்கொண்டேன். அதுவுஞ் சரியாகத் தெரியாது. அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ் பாடல்களில் ஆசை கொண்டு யான் அவைகளை இடைவிடாது ஓதி வந்தேன். அவற்றை எங்கணும் பாடும் வழக்கமும் எனக்கு ஏற்பட்டது. இச்சமயத்தில் என் இரண்டாம் மனைவியும் இறந்தாள். எனவே யான் என் சமையற்றொழிலை விட்டுத் திருப்புகழ் பாராயணஞ் செய்வதையே பேரறமாகக் கொண்டேன். அதனால் பல அறிஞர்களும், செல்வந்தர்களும் எனக்கு நட்பாயினர். அவர்கள் எனக்கு வேண்டிய உதவி செய்து வந்தனர். யான் சென்னையிலும், மற்ற இடங்களிலும் இருந்து பின்னர் வள்ளிமலையின் வளப்பத்தையும், அமைதியையும் கண்டு இங்கேயே இருந்து இளங்குமரனாம் முருகப் பெருமானை வழிபட்டு வரத் தீர்மானித்து அவ்வாறே இருந்து வருகிறேன். இப்போதும் பல நண்பர்கள் எனக்கு உதவி செய்து வருகின்றனர். இவ்வாறிருக்க, வள்ளிமலைக்குவரும் மக்கள் என்னிடம் வந்து என்னை மகானாக நினைத்து ஏதேதோ


கேட்கின்றனர். எனக்கு ஒன்றுந் தெரியாது என்று சொன்னாலும் நம்புவ தில்லை. பலர் என்னிடம் வந்து விபூதி யளிக்க வேண்டு மென்று கேட்பர். நான், நீங்கள் வைத்திருந்தால் என் நெற்றியில் பூசி விட்டுப் போங்கள் என்பேன். யான் நான்கு வியாக்கிரபாதர் (புலி) களோடும், நாலாயிரம் பதஞ்சலி (பாம்பு) களோடும் வசித்து வருகிறேன். அவைகளால் எனக்கு ஒரு வித பயமுமில்லை. அவை யானிருக்கு மிடத்துக்கு வந்து அமைதி யாக இருந்துவிட்டுச் செல்லுகின்றன. இங்குள்ள மலைக் குகைகளில் பல மகான்கள் யோகஞ் செய்கின்றனர். அவர்கள் எப்போதாவது இப் பக்கம் வந்துவிட்டுச் செல்வார்கள். நான் அவர்களுக்கு வேண்டுவன செய்வேன். அம் மகான்களைப் போல் யான் யோக மார்க்கத்தில் சித்தி பெற வேண்டுமென்ற ஆவலதிக மிருக்கின்றது. அதற்கு வேண்டிய முயற்சியும் செய்து வருகிறேன். எல்லாம் முருகன் அருள்' என்று கூறி மற்றும் பல விஷயங்களைப்பற்றிப் பேசினார். அவைகளில் மிக முக்கியமானது இவ் வள்ளிமலையே ஆறுபடை வீடுகளில் ஒன்றாகிய பழ முதிர் சோலை யாகும் என்றும், நக்கீரர் திருமுரு காற்றுப்படையில் பழமுதிர் சோலையைப் பற்றிக் கூறியுள்ள இயற்கை வளங்க ளெல்லாம் இங்கு அமைந் திருப்பதைக் காணலாமென்றும், பெரும்பாலார் மது ரைக்குப் பக்கத்துள்ள கள்ளழகர் மலையைப் பழமுதிர் சோலை என்று கூறு வது தகாதென்றும் வற்புறுத்திக் கூறியதேயாகும். யாங்கள் இதைக் கேட்டு மிகவும் ஆச்சரிய மடைந்தோம். மேலும் அவர் தாம் வசிக்கும் அம் மலையில் நான்கு வியாக்கிரபாதர்களும், நாலாயிரம் பதஞ்சலிகளும் இருப்பதாகக் கூறிய போது, என் மனதில் ஒரு புறம் வியப்பும், மற்றொரு புறம் ஐயமும் உண்டா யிற்று. அதாவது சாமியார், அங்கு நான்கு வியாக்கிரபாதர்கள் இருப்பதை வேண்டுமானால் அறிந்திருக்கலாம்; நாலாயிரம் பதஞ்சலிகள் இருப்பதாக எவ் வாறு அறிந்திருப்பார் என்பதேயாகும். ஆனால், அவர் தன்னைப்பற்றிக் கூறிய வரலாற்றி லிருந்து இவரே உண்மைத் துறவி என என் மனம் உறுதிகொண் டது. அவரை யான் முதலில் கண்டபோது கொண்ட மதிப்பைக் காட்டிலும் இப்போது அதிகமான மதிப்பைக் கொண்டேன்.

## முதுமை யகற்றுங் குமரி

பின்னர் யாங்கள் வள்ளிமலை சாமியாரிடம் விடை பெற்றுக்கொண்டு, குமரி யாற்றை நாடிச் சென்றோம். வள்ளிமலை யெங்கணும் நீலக்குண்டு நீர்ச் சுனைகள் பல இருந்தாலும், குமரியாற்றைக் கண்டதும் எங்கள் மனம் குதூ கலித்தது. ஒரு சிறு குட்டம்போல் காணப்பட்ட குமரிக்கு இரண்டடி மேலே மலை யொன்று கவிந்திருந்தது. அதுவன்றி, அதை யெதிர்த்தாற்போல், இருந்த மலைக்கல்லைச் சூரியன் வெளிச்சம் இதன்மீது படுவதற்காக வேண்டிச் செதுக்கி எடுத்திருந்தது. அவ்வா றிருந்தும், 'நீண்ட தனி மூப்பு அகல, நெஞ் சம் மருள் நீங்க, ஈண்டு நும் வரைக் குமரி யெய்தி இனிதாட வேண்டி வரு கின்றனன்' என்று வள்ளியம்மையிடங் கூறிய குமாரக் கடவுள் ஆடிய குமரி யின் மீது தன் கிரணங்களைப் பரப்பவுஞ் சூரியன் அஞ்சினான். குமரிச் சுனை நீரை ஆவலோடு இரு கரங்களாலும் எடுத்துப் பருகிய பின்னர் யாங்கள் மலையி னின்றும் வேறு வழியாகக் கீழே இறங்கலானோம். வழியே நான்கைந்து இடங்களில் காணப்பட்ட இதணங் (பரண்) களைப் பார்த்ததும் வள்ளிப் பிராட்டியார் கவண்கல் கொண்டு கிள்ளை முதலிய பறவைகளைக் கடிதோச்சித் தினைப் புனங் காத்த வரலாறு எனக்கு ஞாபகத்துக்கு வந்தது.



இவ்வாறாக, குரவ மலரும், கொன்றை மலரும், கொத்துக் கொத்தாகப் பூத்திருப்பதையும், தோகைமயில்கள் செறிந்து உலாவுவதையும், பார்த்துக் கொண்டே அவ்வியற்கைக் காட்சிகளிலேயே அறிவு செலுத்தி வந்த யாங்கள்,



ஒரே தலையில் இரண்டு முகங்கள்

ஒரு விதமான சப்தத்தைக் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தோம். பக்கத்திலுள்ள செடிப் புதரி லிருந்து ஐந்தாறு ஆட்கள் ஒரு கையில், குண் டாந் தடியும், மற்றொரு கையில் வீச்சு வாளும் உடையவர்களாய் குபீரென்று

கிளம்பி எங்களைச் சூழ்ந்து கொண்டார்கள். அவர்கள் ஒவ்வொருவரும், கரடு முரடான தேகக் கட்டும், பயங்கரத் தோற்றமும் உடையவர்களாய்க் காணப்பட்டார்கள். எதிர் பாராதவாறு ஆயுதங்களோடு எங்களை வளைந்து கொண்ட அம் முரட்டு மனிதர்களைக் கண்ட நாங்கள் பெரும் பீதி யடைந்தோம்.. அவர்கள் எங்களை என்ன செய்வார்களோ என்று ஏங்கினோம். அச்சமயம் அவர்களில் ஒருவன், 'என்ன ஐயா! விழிக்கிறீர்கள்? எவ்விதந் தப்பித்து ஓடலாமென்று பார்க்கிறீர்களா? அந்த ஜம்பம் இங்கு பலிக்காது. அவ்வாறு ஓட ஆரம்பித்தீர்களானால் அடுத்த கணமே நீங்க ளனைவரும் பிணமாவீர்கள். ஒன்றும் பேசாமல் எங்களோடு வாருங்கள்' என்று பயமுறுத்தலோடு கட்டளையிட்டான்.

யான் என் நண்பர்கள் முகத்தைப் பார்த்தேன். அவர்கள் பேரச்சத்தால் மெய் நடுங்க வாய் பேசவும் சக்தி யற்றவர்களானார்கள். 'இவர்கள் நம்மை எங்கு அழைக்கிறார்கள்? எதற்காக அழைக்கிறார்கள்? இவர்கள் நம்மை வழி மறித்ததன் நோக்கம் என்ன?' என்று என் மனதில் பல வினாக்கள் எழுந்தன. ஆனால் எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. எங்கள் கையிலுள்ள பொருளை வாங்கிக்கொண்டு, எங்களுக்கு யாதொரு துன்பமுஞ் செய்யாது விட்டுவிட்டால் போதுமென்று யான் என்னுள் எண்ணினேன். இவ்விதமாக ஒரு கணத்தில் பல எண்ணங்களை யெண்ணிய யானும் என் நண்பர்களும் வேறு வழி யில்லாது அவ்வழி பறிக் கொள்ளைக்காரர்கள் பின் சென்றோம்.

எமதூதர்களைப் போன்ற அக்குண்டர்கள் எங்களைப் பல குறுக்கு வழியாக அழைத்துச் சென்று, கடைசியில் ஒரு மலைக் குகைக்குள் கொண்டு போனார்கள். அம் மலைக்குகை மிக விசாலமான இடமுடையதா யிருந்தது. அதன் வாயிற் புறத்தில் நான்கு பேர் காவ லிருந்தனர். குகையின் உள்ளேயும் திடகாத்திர தேகமும், தறுகண்மையுமுடைய பல மனிதர்கள் இருந்தனர். அதனுள் பலவிதமான ஆயுதங்கள் வரிசையாக மாட்டி வைக்கப்பட்டிருந்தன. ஒரு புறத்தில் உயர்வான மேடை யொன்றில் ஒரு மனிதன் உட்கார்ந்து கொண்டிருந்தான். அவனைச் சூழ்ந்து பலர், அவன் கட்டளைக்கு எதிர்பார்ப்பவர்கள் போல் அடக்கவொடுக்கத்தோடும் உட்கார்ந்திருந்தனர். இதிலிருந்து மேடையின்மீது அமர்ந்திருந்த அம்மனிதன் இம்முரட்டுக் கூட்டத்தார்க்குத் தலைவனெனத் தெரிந்தது. அவனது தோற்றம் மற்றவர்களுடைய உருவங்களைப் போல் அஞ்சத் தக்கதா யில்லை. அவன் முக அமைப்பும், உடம்பின் அமைப்பும் அழகு மிகுந்தனவாகவே யிருந்தன. ஆனால், இவன் வடிவத்தில் ஒருவல் லென்ற தன்மையும், மங்கல் நிறமுங் காணப்பட்டன. இவ்வன்மையான தன்மை அவனுக்கு இடையிலே வந்ததாகல் வேண்டும்; ஏனென்றால், அஃது அவன் வடிவத்தில் நன்றாக முதிர்ந்து தோன்றவில்லை. எனவே, அவனைக் கண்டு என் மனம் அச்ச மடைய வில்லை. நண்பகலில் உண்டி யருந்தாமையாலும், நல்ல வெயிலில் நெடுந்தூரம் மலை மீது நடந்து வந்தமையாலும் சோர்ந்து களைத் திருந்த யாங்கள் அக் கொள்ளைக்காரத் தலைவன் முன் நிறுத்தப்பட்டோம்.

(தொடர்ச்சியை அடுத்த இதழில் பாருங்கள்)

---

# * சர்க்கார் வேலை

(திரு. உ. வி. அளகேசன்)

## I

இந்தக் காலத்தில் ஞாயிற்றுக்கிழமை என்றால் பலருக்குக் கொண்டாட்டம். 'குலாம்கீர்'களுக்கு எல்லாரையும் விட அதிகக் குஷி. முதலாவதாக நிர்மலமான சுதந்திரக் காற்றை ஞாயிற்றுக்கிழமையில் தான் அவர்கள் ஸ்வாசிக்க முடியும். மேலதிகாரிகளின் முகச்சுளிப்பு, கடுஞ்சொல் இவைகளிலிருந்து அன்றுதான் விடுதலை கிடைக்கும்; பெண்டாட்டி பிள்ளை குட்டிகளுடன் கலந்து அளவளாவலாம். உத்தியோகத்தினால் பிரிவை அநுபவிக்கும் தம்பதிகள் அன்று ஒருவரையொருவர் கண்டு களிக்கலாம். இப்படிப் பல நன்மைகளுண்டு. இந்த ஞாயிற்றுக்கிழமை இனிமேல் அரசாங்கத் தொண்டர்களாகத் தங்களைத் தயாராக்கிக்கொண்டிருப்போருக்கும் மகிழ்வை அளிக்கிறது. உபாத்தியாருக்கே கொண்டாட்டம். பிள்ளைகளைப்பற்றிச் சொல்ல வேண்டிய தில்லை. காலேஜில் படிக்கும் மாணவ மாணவிகளின் சந்தோஷத்துக்கு ஓர் எல்லை சொல்ல முடியாது. சினிமா, தியேட்டர், பீச் முதலியன அவர்கள் மனக்கண் முன் தோன்றித் தம்மை மறக்கச் செய்கின்றன. இப்படி வெவ்வேறு விதமான அந்தஸ்துக்களிலிருக்கும் வெவ்வேறு விதமான மனிதர்களுக்கு ஞாயிற்றுக்கிழமையின் வருகை எத்துணை மகிழ்வை அளிக்கிறதென்பதைச் சொல்லிக்கொண்டே போகலாம். புராணங்கள் மிகுந்த நமது நாட்டில் 'ஆதிவார மஹாத்மிய புராணம்' என ஒன்று இல்லாதது பெருங் குறையாகும்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த ஒரு ஞாயிற்றுக்கிழமை காலை 7-மணிக்குச் சென்னை—பெஜவாடா டௌன் பாசெஞ்சர், நெ. 22, ஓங்கோலு (Ongole) பிளாட்பாரத்தில் வந்து நின்றது. இன்டியன் ஜென்டில்மென் ரிசர்வ்ட் வெஹிக்கில் (Indian gentlemen reserved Vehicle) ஆகிய ஒரு மூன்றாம் வகுப்பு வண்டியிலிருந்து ட்ரங்க் ஒன்றைக் கையிற் பிடித்துக் கொண்டு ஒரு பெரிய மனிதர் இறங்கினார். இவர் பெயர் கோபால் ராவ். வயது சுமார் 28 இருக்கும்.

* ['பாரதி' என்னும் ஆந்திரப் பத்திரிகையில் வெளிவந்த கதையைத் தழுவி இஃது எழுதப்பட்டது.]

பளபளப்பான சிவந்த மேனி; மன்மதாகாரம். அன்பு, அமைதி, கருணை பொலிவுற்று விளங்கின இவரது முகம் சோர்வைக் காட்டிற்று. ஆயினும் ஒரு சிறிது மலர்ச்சியும் இல்லாமற் போகவில்லை. சர்க்கார் உத்தியோகத்தாற் பிரிவை அனுபவிக்கும் தம்பதிகள் ஆதி வாரத்தின் வருகையை ஆவலோடு எதிர்பார்ப்பார்களல்லவா? கோபால் ராவ் இந்த இனத்தைச் சேர்ந்தவர். எம். எஸ். எம். ரெயில்வே ஹெட் ஆபீசு ஆடிட் டிபார்ட்மெண்டில் கோபால் ராவ் கிளார்க். சம்பளம் 40 ரூபா. சென்னையிலிருந்தால் எத்தனை தொல்லை? காபி ஹோட்டல், வீட்டு வாடகை, டாக்டர் பில், லாண்டரி முதலிய செலவுகள் வந்துகொண்டே இருக்கும். இவருக்கு வருகிற சொற்ப சம்பளத்தில் எங்கிருந்து இவ்வளவு செலவு செய்கிறது? ஆகையினால் பிரமோஷன் ஆனால் பார்த்துக் கொள்ளலாம் என எண்ணித் தமது மனைவியைக் கிராமத்திலேயே விட்டுவிட்டுத் தாம் ஒரு வாரம் அல்லது இரு வாரத்திற்கொருமுறை அங்கே போய் வந்து கொண்டிருந்தார். வேறு காரணங்களால் இரண்டு மூன்று வாரமாக அவர் வீட்டுக்கும் போகவில்லை. சீக்கிரத்தில் தமது அன்புள்ள மனைவியைப் பார்ப்போம் என்கிற எண்ணம் உண்டாகவே அவரது தாஸ்யதீனஹதமான முகத்தில் சந்தோஷக் குறி தோன்றியது.

## II

நமது கோபால் ராவின் ஊர் 'மலகலசருவு' என்பது. இது ஓங்கோலுக்கு 10 மைல் கிழக்கே யுள்ளது. இங்கே கோபால் ராவுக்குத் தமது முன்னோரால் கட்டப்பட்ட மெத்தை வீடு ஒன்று உண்டு. இவரது மனைவியார் சீதையம்மாள் என்னும் மாதுசிரோமணி. சீதை யென்றால் இவளுக்கே தகும். பழைய ஆசாரங்கள் இவளிடம் புத்தொளி பெற்று விளங்கின. அதனால் இரு கட்சியாரும் இவளைப் புகழ்ந்தனர். 'எப்பொழுது பிரமோஷன் ஆகும்? எப்பொழுது கணவனுடன் வாழ்ந்து களிக்கலாம்?' என்பதே இவளுக்குச் சதா நினைவு. இவ்விருப்பம் நாளுக்கு நாள் அதிகமாவதற்கு இன்னொரு காரணமும் உண்டு. கோபால் ராவ் வேலை பார்த்துவந்த ஆடிட் டிபார்ட்மெண்டின் தலைமை அதிகாரி, ஜான்சன் துரை, ஒரு வருஷம் லீவு எடுத்துக்கொண்டு இங்கிலாந்து சென்ற பொழுது, 'திரும்பி வந்ததும் பிரமோஷன் செய்கிறேன்' என்று கோபால் ராவிடம் சொல்லி யிருந்தார். 'இது நிறைவேறினால் உன்னைச் சென்னைக்கு அழைத்துச் செல்கிறேன்' எனச் சொல்லிக் கோபால் ராவ் சென்ற முறை வந்த பொழுது சீதையை மகிழ்வித்தார்.

நாம் குறிப்பிட்ட ஞாயிற்றுக்கிழமை காலை சீதை தன் கணவன் வரவை ஆவலுடன் எதிர் பார்த்துக்கொண் டிருந்தாள். சுமார் மணி எட்டிருக்கும். வீட்டிற்குள் கூலிக்காரன் ட்ரங்குடன் நுழைந்தான்.



பின்னால் கோபால் ராவ் வந்தார். சீதையின் முகம் பரிதி கண்ட மலரன்ன மலர்ந்தது. மறுநிமிஷம் அவ்வளவும் துக்கமாக மாறியது. ஏன்? கோபால் ராவ் பின்வரும் செய்தி கொணர்ந்தார்: 'ஜான்சன் இன்னும் 3 மாதம் அதிகமாக லீவு வாங்கிக் கொண்டான். ஒரு வருஷமாய் இருந்த சுடுமூஞ்சித் துரையே இன்னும் இருக்கப் போகிறான்.' இதைக் கேட்டதும் சீதையின் முகமலர்ச்சி எங்கேயோ போய் விட்டது.

மாலை நெருங்குகிறது. 6-மணிக்குக் கோபால் ராவ் புறப்பட வேண்டும். அவர் நண்பர்கள் வீட்டுக்குச் சென்றிருந்தார். சீதைக்கு என்றுமில்லாத துக்கம் இன்று நெஞ்சை யடைத்தது. இன்னது செய்வதென்று தெரியவில்லை. கண்ணீர் பெருக்கிக்கொண் டிருந்தாள். கோபால் ராவ் திரும்பி வந்தார். அவருக்கு ஒன்றுந் தோன்றவில்லை. சீதையைத் தூக்கி மார்பில் சாய்த்துக்கொண்டு, 'கண்ணே! புத்திசாலியாகிய நீ ஏன் இப்படி அழுகிறாய்? முன்னமேயே உடைந்து போயிருக்கிற என் மனம் இன்னும் அதிக துயரை அடைகின்றது. சீதே! பல தடவைகளில் என்னைத் தேற்றின நீ இப்படிச் செய்வது ஞாயமாகுமா? உன்னைவிட்டுப் பிரிந்திருக்க வேண்டும் என்பது எனது கோரிக்கையா என்ன? எழைகளாகிய நாம் என்ன செய்யக் கூடும்? கண்ணே! அழாதே' என்று சொல்லித் தேற்றினார்.

'நாதா! எனக்கு எல்லாம் தெரிகிறது. இருந்தாலும் இம்முறை என்னை யறியாமலே எனக்குத் துயர் பெருகுகிறது. நான் என்ன செய்யட்டும்?' என்று சொல்லி அவரைத் தழுவிக்கொண்டு கதறினாள் சீதை. கோபால் ராவ் என் செய்வார் பாவம். அவரும் குழந்தையைப் போல் தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்து விட்டார். இருவரும் தம்மை மறந்து துயரக்கடலில் ஆழ்ந்தனர்.

'பந்துலுகாரு! ரயிலுக்குப் போக நேரமாச்சு' என்று கூலிக்காரன் கூவினான். கோபால் ராவுக்கு உடனே சுய உணர்வு வந்தது.

## III

கோபால் ராவ் சென்னைக்கு வந்து மூன்று நாட்களாகின்றன. கட்டாயத்துக்காக ஆபீசுக்குப் போய் வேலை செய்து விட்டு வருகிறாரே ஒழிய அவருக்கு எதிலும் மனம் நிலைக்கவில்லை. பித்தம் பிடித்தவர்போல் இருக்கிறார். தமது மனைவி தன்னந்தனியாய் எவ்வாறு இன்னலில் உழல்கிறாளோ என்பதை நினைக்க நினைக்க அவரது நெஞ்சில் துயர் மண்டியது.

வியாழக்கிழமை வழக்கம்போல் ஆபீசுக்குப் போனார். இன்னொரு குமாஸ்தா வரவில்லை. அவன் வேலையும் இவர் தலைமேல் விழுந்தது.

மணி பத்தரை இருக்கும். கோபால் ராவுக்குத் தந்தி ஒன்று வந்தது. அதை வாங்கினார்; கை நடுங்கிற்று; முகம் வெளுத்தது. உறையை உடைத்தார். அதில் என்ன கண்டார்? 'Your wife attacked cholera; come at once'. (உன் மனைவிக்கு வாந்திபேதி; சீக்கிரம் வரவும்.) அவர் உடல் முழுவதும் நடுங்கியது; வியர்வை வெள்ளமாய் விட்டது; கண்ணீர் தாரை தாரையாய்ப் பெருகிற்று. அந்தத் தந்தியை எடுத்துக்கொண்டு ஹெட் கிளார்க்கிடம் ஓடினார். அதைக் காட்டி, 'ஐயா, தயவு செய்து இப்பொழுதே லீவு கொடுக்க வேண்டும். 11-30 க்கு எனக்கு வண்டி. பிராணன் போகுமுன் கடைசி முறையாய்ப் பார்க்க விரும்புகிறேன்' என இறைஞ்சிப் பணிவுடன் நின்றார்.

'திடீரென்று வந்தால் என்ன செய்வது? இரண்டு கடவை பேதியாயிருக்கும். இதற்குக் 'காபரா' செய்துவிட்டிருப்பார்கள். துரை சங்கதி உனக்குத் தெரியாதா? லீவாவது மண்ணாங்கட்டியாவது—போய் வேலையைப் பார்' என்று உருமினார் சாந்தகுண ஹெட் கிளார்க்.

'ஐயா, உங்கள் காலைப் பிடித்துக் கெஞ்சுகிறேன். இன்னொரு இன்னொரு நோயல்ல இது. உயிருக்கே ஆபத்தானது. ஆகையால் என்மேல் இரக்கங் காட்டும்' எனச் சொல்லிக் காலைப் பிடிக்கப் போகிறார் கோபால் ராவ்.

'சீ, பெண்பிள்ளை மாதிரி அழ எங்கே கற்றாய்? என்னால் ஒன்றும் முடியாது. எனக்கே உலை வைக்கப் பார்க்கிறாயா என்ன? துரை வந்தால்தான் முடியும். இனித் தொந்தரை செய்யாதே' என்று இடி இடித்தார்.

என் செய்வார் கோபால் ராவ்! தமது நாற்காலியில் போயுட்கார்ந்து கண்ணீர் பெருக்கிக்கொண்டிருந்தார். மணி $11\frac{1}{2}$-ஆய் விட்டது. வண்டியும் தவறி விட்டது. ஆ! என்ன வேலை! தன் சுக துக்கத்தைப் பகிர்ந்து கொண்ட மனைவி சாகுந் தருவாயில் இருக்கிறாள். அவளைப் பார்க்கக் கொடுத்து வைக்கவில்லையே! சாண் வயிற்றை வளர்க்கும் பொருட்டுச் சேவகஞ் செய்யவந்த கொடுமை மனைவி இறக்கும்போது அவளருகில் இருந்து அவள் வாயில் ஒரு சொட்டுத் தண்ணீர்கூட வார்க்க முடியாமற் செய்கிறதே! புருஷனுக்கு மனைவிதானே எல்லாம். அவளருகிலிருந்து ஆறுதல் செய்ய, அவளுக்கு உதவி செய்ய, அவனுக்கு இன்பத்தைக் கொடுக்க இப்பாழும் வேலை இடையூறு செய்கிறதே! ஐயோ! தெய்வமே! இவ்வேலையைப் பெறுவதற்காகவல்லவா கணக்கற்ற மாணவர்கள் இரவு பகலென்பதறியாமல், ஓய்வு உறக்கம் இவைகளை எள்ளுந் தண்ணீரும்



விட்டுத் தத்தம் செய்துவிட்டுப் புஸ்தகங்களைக் கரைத்துக் குடித்துக் கொண்டிருக்கிறார்கள்! ஆ! இந்த வேலை ஒரு விஷப்பாம்பு. அவர்களாவது இதற்கிரையாகாமல் இருக்கும்படி கடவுள் அருளுவாராக' என்று எண்ணாததெல்லாம் எண்ணி நெஞ்சம் புண்ணாகிறார் கோபால் ராவ்.

துரை, துரைசானி சமேதராய் மோட்டார் காரில் 3-மணிக்கு ஆபீசுக்கு வந்தார். தாஸ்ய கோடிகள் சலாம் போட்டானவுடன் ஹெட்கிளார்க் நடுக்கத்துடன் கோபால் ராவ் சமாசாரத்தைப் பற்றிச் சொன்னார். துரைக்கு ரௌத்திராகாரமாய்க் கோபம் வந்து விட்டது. ஹெட் கிளார்க்கைப் பார்த்து, 'You uxorious Indians always concoct letters, telegrams and useless stuff of this kind only to go and play with your wives. Well sir, tell him that he cannot leave the office without finishing the work allowed to him' (பொய்க் கடிதம், பொய்த் தந்தி இவைகளை உண்டாக்கிக் காமுகர்களாகி நீங்கள் உங்கள் மனைவிமார்களுடன் சுகமாய்க் காலங் கழிக்கப் பார்க்கிறீர்கள். இது இந்தியர்களுக்குச் சகஜமாய்ப் போய்விட்டது. அவன் வேலையை முடிக்குமுன் ஆபீசை விட்டு எடுத்தடி வைக்க முடியாதென்று சொல்லும்) என்று கர்ச்சித்தான். ஹெட்கிளார்க் இதைக் கோபால் ராவுக்குச் சொன்னார்.

கோபால் ராவ் ஆபீசைவிட்டுப் போக மணி ஆய்விட்டது. மாலை வண்டியும் தப்பி விட்டது. இரவெல்லாம் சென்னைச் சென்டிரல் ஸ்டேஷனிலேயே தம்மை மறந்து துக்கத்தில் ஆழ்ந்திருந்தார். மறுநாட் காலை வண்டியில் நண்பர்கள் இவரை எற்றி அனுப்பினார்கள்.

வெள்ளிக்கிழமை மத்தியானம் வெயில் பட்டை உரிக்கிறது. மலகலசருவு களையற்றுப் பாழாய்த் தோன்றுகிறது. ஊரில் மனிதர் எவரும் இல்லை. ஒரு ஈ, காக்கைகூடக் கிடையாது. ஏன்?

மலகலசருவுச் சுடுகாட்டில் ஜனங்கள் கஜகஜவென்று குழுமியிருக்கிறார்கள். குழந்தை குட்டி முதற்கொண்டு எல்லோரும் அங்கேதான். ஜனங்களுக்கு மத்தியில் காஷ்டம் அடுக்கப்பட்டிருந்தது. அதன்மேல் சீதையின் பிரேதம் கிடத்தப்பட்டிருந்தது. மஞ்சள் பூசிய அவள் முகத்தில் புன்னகை தவழ்கிறது; பிரேதக் குறியே இல்லை. ஜீவக் களை பொலிகிறது. அவளைச் சுற்றியுள்ளவர்கள் சீதையோடு சீரெல்லாம் சென்றதென்று சொல்லிக் 'கோடு கோடென்று' அழுகிறார்கள். வியாழக்கிழமை 11-மணிக்கே சீதையின் உயிர் உடலை நீத்தது. வெள்ளிக்கிழமை வரையில் பிரேதத்தை வைத்திருந்தும் கோபால் ராவ் வரவில்லை.

ஆச்சு, எல்லாம் சித்தமாகி விட்டது. மறு நிமிஷம் தீ மூட்டப் போகிறார்கள். கும்பலில் ஒரு மூலையில் ஒரு வித பரபரப்பு உண்டானது. கண்ணிமைக்கு முன் கோபால் ராவ் பிணத்தின் முன்பு தோன்றினார். அரையில் அலங்கோலமாய்க் கட்டப்பட்டிருந்த துணியைத் தவிர அவர்மேல் ஒன்றும் இல்லை. வந்தவுடன் 'ஆ! சீதா!' என்று அலறிப் பிணத்தின்மேல் விழுந்தார். மறு கணம் இவரது உயிர் தமது காதலியுடன் ஒன்றச் சென்றது.

* * * *

அரைமணி நேரம் கழிந்தது. கட்டை கலகலெனப் பற்றி எரிய ஆரம்பித்தது. நெருப்புச் சுவாலைகள் மேலோங்கின. சர்க்கார் உத்தியோகத்தால் பிரிக்கப்பட்ட இரு உடல்களும் வெந்து நீறாயின. உயிர்கள் கூடிக் களிக்கின்றன என்று சிலர் சொல்கிறார்கள்.

---

## விகடத் துணுக்குகள்

மனைவி:—நான் இன்று செய்த சிற்றுண்டி எப்படி இருக்கிறதென்று நீங்கள் சொல்லவில்லையே?

மணாளன்:—இன்று ஏகாதசி யாகையால் உபவாச மிருந்து விடலாமென்று உத்தேசிக்கிறேன்.

* * *

மனைவி:—நீங்கள் வரவில்லையே என்று கவலையுடன் இத்தனை நேரம் கண் விழித்துக்கொண்டு காத்திருந்தேன்.

மணாளன்:—வெகு அழகு! நீ தூங்க வேண்டுமே என்றுதான் இவ்வளவு நேரம் நான் அங்கேயே இருந்தேன்.

* * *

கமலா:—இப்போது நீயே சமைத்து விடுகிறாயே. அதனால் ஏதாவது செட்டு ஏற்பட்டிருக்கிறதா?

விமலா:—சாப்பாட்டுச் செலவு இப்போது முன்னையில் பாதி கூட ஆவதில்லை. வீட்டில் எல்லோரும் மிகக் குறைவாகவே சாப்பிடுகிறார்கள்.

* * *

மகன்:—அப்பா, தங்களுக்குக் கண்ணை மூடிக்கொண்டே கையெழுத்துப் போட முடியுமா?

தகப்பன்:—முடியும்.

மகன்:—அப்படியானால் பள்ளிக்கூடத்திலிருந்து பிராகிரெஸ் ரிப்போர்ட்டு கொண்டு வந்திருக்கிறேன். கண்ணை மூடிக்கொண்டே அதில் கையெழுத்துப் போட்டுக் கொடுங்கள். பார்ப்போம்.

# இரண்டு முட்டாள்கள்

('கனத[illegible]

208524
சென்னை-600 008



பொன்னேரியில் இரண்[illegible]ர்கள் இருந்தார்கள். அவர்களிருவரும் பணக்காரர் வீட்டுப் பிள்ளைகள். அவர்கள் தங்களை அலங்கரித்துக் கொள்வதில் மிக்க திறமைசாலிகள். தலை மயிர் கிராப்புத்தான். காலில் பூட்சுதான். கைகளில் காப்புத்தான். காதில் கடுக்கன்தான். முகத்தில் அரைவாசிமீசைதான். ஆனால், அவர்களுக்கு அக்ஷரசுரணையே கிடையாது. அன்னசுரணை மாத்திரம் நிரம்ப வுண்டு. அவர்கள் ஓர் நாள் சாயங்காலம் வீதி வீதியாகச் சுற்றிவரப் புறப்பட்டுத் தேவடியாள் வீதியாகப் போனார்கள். அப்போது, தெரு வாயற்படி யண்டை தன் சுய காரியமாக நின்றுகொண்டிருந்த ஓர் தேவடியாள் அவ்விரு வாலிபரும் தூரமாக வருவதைப் பார்த்து, 'அவர்கள் நல்ல பணக்காரர் வீட்டுப் பிள்ளைகளாகக் காணப்படுகிறார்கள். அவர்களால் நமக்கு நல்ல இலாபங் கிடைக்குமென்று' நினைத்து, அவர்கள் தன் வீட்டுக் கருகே வந்ததும் அவர்களைப் பார்த்து ஒரு கும்பிடு போட்டாள். அந்தக் கும்பிடுக்குப் பதில் கும்பிடே யில்லை. பிறகு, இரு வாலிபரும் சிறிது தூரம் போய் ஒருவர் ஒருவரைப் பார்த்து 'அடே சோமா! அந்தத் தேவடியாள் என்னைப் பார்த்துக் கும்பிடு போட்டாள் பார்த்தாயா' என்றான். 'அடே போடா, என்னைப் பார்த்தல்லவா கும்பிடு போட்டாள், அந்தக் கும்பிடு எனக்குச் சேரவேண்டும்' என்றான் சீமான். இவ்விதமாக இருவரும் சண்டை யிட்டுக்கொண் டிருந்தபோது, அவ்வீதி வழியே போய்க்கொண் டிருந்த ஒருவன் அவர்களைப் பார்த்து 'ஏனப்பா, நீங்கள் சண்டையிடுகிறீர்கள்' என்றுகேட்டான். அவர்கள் அவனிடம் கும்பிடு சங்கதியைச் சொன்னார்கள். அம்மனிதன் அவ்வாலிபப் பிரகஸ்பதிகளைப் பார்த்து, 'புட்டுக்கூடை முண்டங்களில் பொறுக்கி யெடுத்த முண்டங்களாக விருக்கிறார்களென்றும், இன்னும் இவர்கள் மூடத்தனம் எவ்வளவு தூரம் போகிறதென்பதையும் பார்க்க நினைத்து, 'வாருங்கள் அப்பா! நீங்கள் பிரபுக்கள் வீட்டுப் பிள்ளைகளாகக் காணப்படுகிறீர்கள். பார்ப்பதற்கு உற்சவ மூர்த்திகளாகவு மிருக்கிறீர்கள். பிரசாத மூர்த்திகளாகவுந் தோன்றுகிறீர்கள். புத்தியில் பிரகஸ்பதி போலும் பிரகாசிக்கிறீர்களென்று முன்னமே தெரிந்து கொண்டேன். நீங்கள் சண்டை யிடவேண்டா.

மறுபடியும் நீங்களிருவரும் அந்தத் தேவடியாளிடம் போய், அம்மா! நீங்கள் எங்களிருவரில் யாரைப் பார்த்துக் கும்பிட்டீர்கள் என்று கேளுங்கள். உடனே அவள் சொல்லி விடுவாள். உங்கள் சண்டையும் நின்று போம். வாருங்கள் 'நானும் வருகிறேன்' என்றான். வாலிபர் இருவரும் அந்தத் தேவடியாளிடம் போய் 'அம்மா! நீங்கள் போட்ட கும்பிடு எனக்கா அவனுக்கா' என்று இருவரும் ஒரே சத்தமாகக் கத்தினார்கள். பார்த்தாள் தேவடியாள், 'இவர்கள் பெரிய வீட்டுப் பிள்ளைகள், நாகரிகமுடையவர்கள், படிப்பாளிகள் என்று நாம் பிரமாதமாக நினைத்துக் கும்பிட்டோம். இவர்கள் எல்லாவற்றிலும் சைபர் (0) கள் என்று தெரிந்துகொண்டு 'உங்களிருவரில் யார் முட்டாளோ அவருக்குத்தான் அந்தக் கும்பிடு' என்று சொல்லி வீட்டுக்குள் போய் விட்டாள்.

அதனைக் கேட்ட இருவரும் 'அடே சீமா! நான்தான் முட்டாள். அந்தக் கும்பிடு எனக்குத்தான்' என்றான் சோமன். அடே சோமா! நீயல்ல முட்டாள், நான்தான் முட்டாள். கும்பிடு எனக்கே' என்றான் சீமான். இப்படி இருவரும் மீண்டும் சண்டையிட்டார்கள். அதனைக் கண்ட அம்மனிதன் 'பிள்ளையாண்டான்மார்களே! நானி போய் தீனி பெட்டு செங்கல்பட்டுக்கு மூட்டை கட்டு என்பதாகத் திரும்பவுஞ் சண்டையிடாதீர்கள். நீங்கள் எப்படி முட்டாள்? அது நல்ல பட்டந்தான். அந்தப் பட்டம் உங்களுக்கு யார் கொடுத்தது? எந்தச் சந்தர்ப்பத்தில் கிடைத்த பட்டம்? அநேகருக்கு அநேக பட்டங்களிருக்கின்றன. அப்பட்டங்களில் ஒன்றாவது ஒரு வேளை சாப்பாடு கொடுக்கிறதில்லை. எந்தக் காபி ஓட்டலுக்குப் போனாலும் ஒரு கப் காபியும் சும்மா கிடைக்கிறதில்லை. விவாக காலத்தில் அம்மான் பட்டம் என்று ஒன்று கட்டுகிற துண்டு. அதை விற்றாலும் இரண்டொரு வேளை சாப்பாடு கிடைக்கும். ஆனால், அநேகர்க்குக் கிடைத்துள்ள பட்டங்கள் காற்றில் பறந்து போம் பட்டங்களாகவேயிருக்கின்றன. அப்பட்டங்கள் பேபர் பட்டங்களேயாம். அப்பா பிரகஸ்பதிகளே! உங்களுக்குக் கிடைத்திருக்கிற முட்டாள் என்னும் பட்டமோ உங்கள் வீட்டிலிருந்தாலும் நல்ல சாப்பாடு, மாமியார் வீட்டுக்குப் போனாலும் நல்ல கறியுஞ் சோறும். ஆதலால் உங்களுக்கு அந்தப் பட்டம் கிடைத்த வழியை ஒருவர் ஒருவராகச் சொல்லுங்கள். பிறகு, தீர்மானிக்கலாம்' என்றான்.

சோமன் சொல்லத் தொடங்கினான். 'ஐய! எனக்கும் என் பெண்டாட்டிக்குந் தினந்தோறுஞ் சண்டை. ஏனெனின், பயாஸ்கோப் பார்க்க வா வென்றால் 'வரமாட்டேன்' என்கிறாள். டிராமாவுக்கு வா வென்றால் 'வரமாட்டேன்' என்கிறாள். பார்க்கு வேடிக்கை பார்க்கலாம் வா வென்றால் 'வரமாட்டேன்' என்கிறாள்.



கிண்டி குதிரைப் பந்தயம் பார்க்கலாம் வா வென்றால் 'மாட்டேன்' என்கிறாள். ஏன் வரமாட்டாய் என்று கேட்டால், 'அங்கே சனங்கள் கூட்டம் அதிகம். கொழுத்தவன்கள் பெண்களை விறைக்க விறைக்கப் பார்க்கிறார்கள். சிறிதும் வெட்கமில்லாமல் பெண்களை யிடித்துக் கொண்டு போகிறார்கள். இவைகள் எனக்குப் பிடிக்காது' என்கிறாள். அதற்கு நான் உன்னை எவனாகிலும் பார்த்தால் நீ அவனைப் பார்க்கிறதுதானே. உன்னை யெவனாவது இடித்தால் நீ அவனை இடித்துத் தள்ளுகிறதுதானே. ஆண் பிள்ளைகளுக்கு இருக்கிற சுதந்திரம் பெண்களுக்கு ஏனில்லை. ஆண் பிள்ளைகளுக்குப் பெண்பிள்ளைகள் தோற்றவர்களா? ஆண் பிள்ளைகளுக்கும் பெண் பிள்ளைகளுக்கும் இரத்தம், மாமிசம், எலும்பு முதலியவை ஒரே தன்மையல்லவா? பசி, தாகம், மோகம் இருவருக்கும் சமமாக உண்டல்லவா? அவ்வாறிருக்க பெண் பிள்ளைகளை மாத்திரம் ஏன் கட்டுப்பாட்டில் வைக்க வேண்டும்? டாம் பிளாக்! நீ என்னோடு வா உன்னைச் சுயமரியாதை சங்கத்தில் சேர்த்து விடுகிறேன். பிறகு, உன்னிஷ்டம் போல் நீ நடக்கலாம். என்னிஷ்டம் போல் நான் நடக்கலாம்' என்றேன். அதற்கு அவள் 'ஐயையோ! எனக்குச் சுயமரியாதைச் சங்கம் எப்படிப்பட்டதென்று தெரியும். பல பேபர்களில் படித்திருக்கின்றேன். அது, கொண்டகோலப் பண்டிகைதான் (அல்லாசாமிப் பண்டிகை) என்று எனக்கு நன்றாய்த் தெரியும். எனக்குச் சுயமரியாதை சங்கமும் வேண்டா; அவமரியாதை பங்கமும் வேண்டா' என்றாள். 'நீ கொஞ்சம் சாஸ்திரம் படித் தறிந்தவளாதலால் இவ்வளவு தூரம் பேசுகிறாய். நீ எவ்வளவு படித்தாலும் 'எண்ணறக் கற்று எழுத்தற வாசித்தாலும் பெண் புத்தி பின் புத்தியே' என்றதனால் நீ பெண்ணாய்ப் பிறந்ததற்கு வெளிவந்து முன்னேற்றமடைய விரும்பாமல் உள்ளவே இருந்து குண்டு சட்டியில் குதிரை யோட்டிக் கொண்டிருக்கிறாய்' யென்றேன். அதற்கு அவள் 'எனக்கு முன்னேற்றமும் வேண்டா பின்னிறக்கமும் வேண்டா' என்றாள். 'நீ அதிகமாய்ப் பேசுகிறாய், என்னிஷ்டம்போல் நடக்காமற் போவாயானால், தெரியுமா உனக்கும் எனக்கும் விவாக விமோசனந்தான்' என்றேன். 'விவாக விமோசனமா? அதென்ன எனக்கு விளங்கவில்லையே' என்றாள். 'விவாக ரத்து. அதாவது உனக்கும் எனக்கும் நடந்தேறிய விவாக சம்பந்தத்தை நீக்கிக் கொள்ளுதல் என்பதாம்.' 'இந்த விவாக ரத்து செய்தல் கணவனுக்கு மாத்திரந்தானா மனைவிக்கு இல்லையா?' என்றாள். 'இல்லை, இருவருஞ் செய்து கொள்ளலாம்' என்றேன். 'அதாவது, கட்டின தாலியை அவிழ்த்துக் கொள்ளல், அவிழ்த்துக் கொடுத்தல் என இரண்டு வகையாயிருக்கிறது. இப்படி விவாக விமோசனம் ஏற்பட்ட பிறகும், அவன் விவாக ரத்தானவளைக் கட்டிக்கொள்வானா அல்லது நல்ல யௌவன கன்னிகையைக் கட்டிக் கொள்வானா? அது போலவே, விவாக

ர்த்தானவனைக் கட்டிக் கொள்வாளா அல்லது விவாக மாகாத வாலிபனைக் கட்டிக் கொள்வாளா? என்று கேட்டாள். 'அந்த விஷயம் அவரவர்கள் யோக்கியதையைப் பொறுத்திருக்கிறது' என்றேன். 'இந்தச் சட்டம் உங்கள் சங்கத்தில் ஏற்பாடாக வில்லையா?' என்றாள். 'இந்தச் சங்கதிக ளெல்லாம் அவரவர்கள் இச்சையைப் பொறுத்தது, அதற்குச் சட்டம் என்னத்திற்கு, வேண்டியதே யில்லை' என்றேன். 'இவ்வித வழக்கம் மேல் நாட்டில்தான் இருந்தது. அவ்வழக்கம் நம் இந்து தேசத்திற்கு எப்போது வந்தது' என்றாள். 'இரண்டு மூன்று வருடமாகத்தான்' என்றேன். 'அப்படியா! மேல் நாட்டிலிருந்து நம் நாட்டிற்கு வர இத்தனை நாளாயிற்றா? மெய்தான் எத்தனை தூரம் எத்தனை சமுத்திரந் தாண்டி வரவேணும். அந்த மட்டும் நம் இந்து தேசப் பெண்களும் புருஷர்களும் சீர்திருத்தம் அடைவார்கள். இனி பெண்கள் மனம் போலப் பெண்கள் வாழலாம், புருஷர்கள் மனம் போலப் புருஷர்கள் வாழலாம். இந்த விவாக விமோசனம் நம் நாட்டில் அனுஷ்டானத்திற்கு வந்திருக்கிறதா?' என்று கேட்டாள். 'வந்திருக்கிறது' என்றேன். 'சரி, விவாக விமோசன மானவள் இன்னொரு புதியவனோடு கூடி வாழ்வதற்கு அவள் மனத்திற்கு அருவருப்பாயிராதா? நாணமிராதா? உடம்பு கூசாதா? அவ்வித உணர்ச்சி ஒன்று மில்லாமல் அப் புதியவனோடு சில நாள் கூடி வாழ்ந்து வந்த பிறகு, அவனும் கொஞ்சம் முரட் டாசாமியாயிருந்து அவளை விவாகரத்து செய்து விட்டால் அவள் இன்னொரு ஆசாமியைப் பார்த்துக் கொள்ளவேண்டும். அவனும் வேறொரு எச்சிற் பட்ட பாத்திரத்தையோ அல்லது எச்சிற் படாத பாத்திரத்தையோ தேடிக் கொள்ள வேண்டும். இப்படியே விவாக விமோசனத்தால் ஏற்படுங் காரியங்களைப் பிறர் கண்டு நகையார்களா? அவர்கள் காம வேட்கையில் மிகுந்தவர்களானதாற்றான் ஒவ்வொன்றாக இன்பம் நுகருகிறார்கள் என்று உலகம் பழிக்க இடமுண்டாகு மல்லவா? நீங்கள் என்னை விவாக விமோசனம் செய்வேனென்று சொன்னீர்கள். அதெப்படி? உங்க ளொருவரால் செய்ய முடியும்? நம் இருவருக்கும் விவாகம் நடக்கிற போது என்னுடைய தாய் தந்தையர் முன்னிலையிலும் உங்களுடைய தாய் தந்தையர் முன்னிலையிலும், பந்துக்கள் முன்னிலையிலும், புரோகிதர் முன்னிலையிலும் என்ன சொல்லி சத்தியஞ் செய்தீர்கள்? இந்தக் கன்னிகையை, இன்பத்திலும், துன்பத்திலும், வாழ்விலும், சாவிலும், சுகத்திலுந் துக்கத்திலும், என் மனைவியாக ஏற்றுக் கொள்ளுகிறேன் என்று தாலி கட்டினீர்க ளல்லவா? நானும் உங்களைப் போலவே சொல்லிச் சத்தியஞ் செய்து என் கழுத்தைக் கொடுத்தே னல்லவா? இவ்வா றிருக்க நீங்களே என்னை நீக்கிவிட முடியுமா? ஒரு காலும் முடியாது. 'மனம் போன போக்கெல்லாம் போக வேண்டா' என்று பெரியோர்கள் சொல்லி யிருக்கிறார்கள். கவனியுங்கள்; நாம் உலகத்தில் காத்துக்கொள்ள வேண்டிய பொருள்



களில் நமது தேகமே சிறந்தது. அதனினும் சிறந்தது உயிராகும். அவ் வுயிரினுஞ் சிறந்தது பெண்களுக்குரிய நாணமாகும். அந் நாணத்தினுஞ் சிறந்தது கற்பாகும். அக் கற்பே பெண்களுக்குப் பேரணிகலமாகும், எல்லா நலனுந் தரும்' என்றாள். 'நீ! என்னிஷ்டம்போல் வரப் போகிறாயா இல்லையா?' என்றேன். 'என் மனத்திற்கு ஒவ்வாத விஷயங்களுக்கு நீங்கள் வற்புறுத்தினால் நான் உங்களிஷ்டம் போல் நடக்க முடியாது' என்றாள். அதைக் கேட்டதும் எனக்குக் கோப முண்டாகி அவள் கன்னத்தில் ஓர் அறை அறைந்தேன். அதை வாங்கிக் கொண்டு ஒன்றும் பேசாது உள்ளே போய்விட்டாள். மறுநாட் காலையில் அவள் தன் சிறிய தாயை அழைத்துக்கொண்டு இரெயிலேறி புரசைவாக்கத்தில் தன் தாய் வீடு போய்ச் சேர்ந்தாள். அவள் போய் மூன்று மாதமாயிற்று, வரவில்லை. ஓர் நாள் நான் இரெயிலேறி சென்ட்ரல் ஸ்டேஷன் போய் இறங்கி புரசைவாக்கத்திற்கு நடந்தேன். நான் நடந்து செல்லும் போது கையிலொரு தடி கொண்டு போ யிருந்தேன். அத் தடியை என் கழுத்தின் பின் புறத்தில் பிடரியின் மேல் வைத்துத் தடியின் இரண்டு முனைகளிலும் இரண்டு கைகளால் பிடித்துக்கொண்டு என் மாமனார் வீட்டிற்குள் நுழையப் போனேன். வீட்டின் தெரு வாயற்படி தடுத்தது. உள்ளே போக முடிய வில்லை. காலை ஏழு மணிக்குப் போனவன் எட்டு மணி வரையும் வாயற்படியோடு முட்டி முட்டிப் பார்த்தேன். வாயற்படி என்னை வீட்டிற்குள் நுழைய விட வில்லை. என் செய்வேன். அந்தச் சமயத்தில் வெளியே வந்த என் மாமனார் பார்த்து 'அப்பா! எப்போது வந்தா' யென்றார். 'ஏழு மணிக்கு வந்தே னென்றேன்.' 'ஏன் உள்ளே வரக்கூடாது' என்றார். 'இந்த வாயற்படி உள்ளே போக வொட்டாமல் தடுக்கிறது' என்றேன். 'என்ன போ முட்டாளா யிருக்கிறா யென்று சொல்லித் தடியைப் பிடித்துக்கொண் டிருக்குங் கைகளை மேலுங் கீழு மாகத் திருப்பினார். பிறகு உள்ளே போக நேரிட்டது. ஐயா! பெரியவரே! இந்தச் சந்தர்ப்பத்தில்தான் இந்த முட்டாள் பட்டம் என் மாமனார் எனக்குக் கொடுத்தார்.

'அப்பா சீமான்! உனக்கு எப்படி முட்டாள் பட்டங் கிடைத்தது? அதனை எனக்கு விவரமாகச் சொல்' என்றான் பெரிய மனிதன். ஐயா! நான் சிறு பையனா யிருக்கும்போதே எனக்குக் கலியாண மாயிற்று. என் குழந்தை மனைவி தன் தாய் வீட்டிலேயே வளர்ந்து வந்தாள். பிறகு புத்தி யறிந்தாள். அவள் புத்தி யறிந்த ஆறு மாதங் கழித்து, ஊரி லிருந்து என் மாமனார் எனக்கு நிஷேக முகூர்த்தம் நடத்த நாள் வைத்திருப்பதாகவும், உடனே நாங்களெல்லோரும் புறப்பட்டு வரவேண்டியதென்றும் கடிதம் வந்தது. அதன்படி நாங்களெல்லோரும் புறப்பட்டுப் பெண் வீடு போய்ச்

சேர்ந்தோம். மறுநாள் இரவு 8-மணிக்கு நிஷேக முகூர்த்த நாள் குறித்திருந்தது. அன்றைய அதிகாலையில் அவ்வூரை யடுத்த தண்ணீர்க் கால்வாய்ப் பக்கத்தி லிருந்த புதரின் பக்கத்தில் மலோ பாதைக்கு நான் உட்காரப் போன அதே சமயத்தில் அந்தக் கால்வாய்க்கு அந்தப் பக்கத்தில், பக்கத்து ஊரா னொருவன் உட்கார்ந்தான். அவனும் என்னைப் பார்த்தான். நானும் அவனைப் பார்த்தேன். ஆறரை மணிக்கு உட்கார்ந்த நாங்கள் மணி 8 ஆகியும் அவனும் எழுந் திருக்கவில்லை, நானும் எழுந்திருக்கவில்லை. நானெழுந்திருக்காமல் தானெழுந்திருக்கப் போவதில்லை யென்று அவன் மனத்தில் உறுதிப் படுத்திக் கொண்டான் என்பதை யறிந்தேன். அது போலவே, நானும் அவனெழுந்திருக்காமல் நான் எழுந்திருப்பதில்லை என்று என் மனத்தில் கெட்டிப் படுத்திக் கொண்டேன். தீபம் வைக்கும் வேளையாயிற்று. என் மைத்துனனுஞ் சிலரும் என்னைத் தேடிக் கண்டு பிடித்து இழுத்தார்கள். நானெழுந்திருக்கவில்லை. என் மைத்துனன் என்னைத் தூக்கப் பார்த்தான். அவனால் முடியவில்லை. அவனோடு வந் தவர்கள் எவ்வளவோ சொன்னார்கள். முகூர்த்த இலக்கினந் தப்பிப் போகிறதே யென்று கத்தினார்கள். அதற்கு நான் முகூர்த்த இலக் கினந் தப்பிப் போகிறதானால் வேறு எவனையாகிலும் பார்த்து முகூர்த் தத்தை நடத்துங்கள். பிறகு, நான் பார்த்துக் கொள்ளுகிறேன்' என்றேன். அவர்க ளெல்லோரும் போய், என் மாமனாரிடம் 'இலக் கினந் தப்பிப்போகிறதா யிருந்தால் வேறு யாரையாகிலுங் கொண்டு முகூர்த்தத்தை நிறுத்தாமல் நடத்தி விடுங்களென்று சொல்லுகிறான் என்று சொன்னார்கள். அதனைக் கேட்டதும் என் மாமனாருக்குக் கோப முண்டாகி என்னிடம் ஓடிவந்து 'அடே! முட்டாள் எழுந்துவா இலக்கினந் தப்பிப் போகிறது' என்றார். 'நான் எழுந்திருக்க மாட்டேன், அவனை எழுந்திருக்கச் சொல்லுங்கள்' என்று சொன்னேன். 'அவன் யார் என்றார்' என் மாமனார். அதோ கால்வாய்க்கு அக்கரையில் உட்கார்ந்திருக்கிறானே அவனைத்தான் என்றேன். பிறகு எல்லோரும் ஓடி அவன் காலில் விழுந்து வேண்டிய மட்டும் சமாதானஞ் செய்து அவனை எழுப்பினார்கள். பிறகு நானும் எழுந்தேன். வீடு போய்ச் சேர்ந்தேன். இந்தச் சந்தர்ப்பத்தில்தான் என் மாமனார் எனக்குக் கொடுத்தது முட்டாள் பட்டம். 'ஐயா! பெரியவரே! அந்தத் தேவடியாள் போட்ட கும்பிடு யாரைச் சேர வேண்டியதென்று இப்போது முடிவு செய்யுங்கள்' என்றான் சீமான். 'உங்க ளிருவருக்கும் எந்த வருஷம் எந்த மாதம் எந்த நாளில் முட்டாள் பட்டங் கிடைத்ததென்று சொல்வீர்களானால் பிறகு முடிவு சொல்லுகிறேன்' என்றான் அந்தப் பெரிய மனிதன்.

# இதற்கா இரண்டு மணி நேரம்?

('ஏசி')



ஒரு நாள் காலை 6-30 மணிக்கு என்னிடம் ஒருவர் வந்தார். அவரை எனக்கு நான்கு வருஷங்க ளாகத் தெரியும். பெரிய இடத்து மனிதர் ஒருவ ருடைய பேரப்பிள்ளை அவர். வந்தவர் எப் பொழுதும் போல எல்லோரையும் போல என் யோக க்ஷேமங்களை யெல்லாம் விசாரிக்கத் தொடங்கினார். என் வேலை எவ்வாறு நடை பெற்று வருகிறதென்றும் என் ஊரில் எல்லாரும் சுகந்தானா என்றும் வினவினார்; விடை யிறுத்தேன். காபி சாப்பிடச் சொன்னதற்கு வேண்டாமென மறுத்து விட்டார். அதன்பின், 8-30 மணி வரை ஊர்க்கதைகளெல்லாம் என் னென்னமோ பேச வாரம்பித்தார். எனக்கோ வேலை யிருந்தது. இருப்பினும், வராத ஒரு நண்பர் வந்திருக்கிறாரே என வுன்னி, நானும் பொறுமையுடன் அவர் பேச்சுக்களை யெல்லாம் இஷ்ட மில்லாமலே கேட்டுக்கொண் டிருந்தேன். ஆனால், எனக்கு அவர் பேச்சில் இஷ்ட மில்லை என்பதைக் குறிப்பாகச் சில விடங்களில் காட்டினேன். 'அதைப் பற்றி யெல்லாம் நமக்கென்ன?' என்று சொல்லிய இடம் சில. 'நீங்கள் சொல்லியதைக் கேட்டுக்கொண்டு வரவில்லையே. என் மனம் வேறு ஏதோ வேலை செய்துகொண் டிருக்கிறது' என்ற இடம் சில. 'வேறு ஒன்றும் விசேஷம் இல்லையே' என்று கேட்ட இடம் பல. இதற்குள்ளாக, மாட்டி யிருந்த பைக்கெடியாரத்தை நோக்கிய முறை சில. இவைகளை யெல்லாம் கண்டுகொண்டும் அவ்வாசாமி 8-30 வரையில் வழ வழாப் பேச்சு பேசிக்கொண் டிருந்தார். எனக்கோ நேரமாகிவிட்டது. 'சரி, சற்று இருங்கள். நான் ஸ்நா னம் செய்துவிட்டு வந்துவிடுகிறேன். ஸ்நானத்துக்குப் பிறகு சாப் பிட்டு வேலைக்குப் போவதற்குத்தான் நேரம் சரியா யிருக்கிறது. நீங்களும் என்னுடன் சாப்பிட்டுச் செல்லலாம். இருங்கள், இதோ வந்து விடுகிறேன்' என்று சொல்லித் தலையில் அஸன வில்வாதித் தைலத்தை யெடுத்து ஒரு உள்ளங்கை யளவு வைத்துக்கொண்டு சோப் பெட்டியை யெடுத்தேன். 'சாப்பாடு தேவை யில்லை. வேறு ஒன்றுக்காக வந்தேன். அவரை உங்களுக்குத் தெரியுமே. அவருக்கு இன்று மாலைக்குள் தருவதாகச் சொல்லிப் பரீட்சைக்குப் பணம்

வாங்கிக் கட்டி யிருக்கிறேன். நேற்று வரை ஊரி லிருந்து பணம் வருமென்று எதிர்பார்த்தேன். வரவில்லை. இன்று நாளை வந்துவிடும். அவசியம் ஐந்து ரூபா தேவை. நாளைக்குள் வந்துவிடும். நான் வந்த வுடன் கொண்டு வந்து கொடுத்து விடுகிறேன்' என்றார் அவர். 'அப்படியா சமாசாரம்' என்று சொல்லி, என் கையைக் கழுவிக்கொண்டு பெட்டியைத் திறந்து என் இருப்பைப் பார்த்தேன். நான் பணக்கார னல்லன். ஏதோ அந்த மாத முடிவு வரை எவ்வளவு பணம் தேவையோ அவ்வளவுதான் என்னிடம் இருந்தது. உண்மையை அவரிடம் விளம்பி அந்த மாதம் 25-ஆந் தேதிக்குள் திருப்பிக் கொடுத்தால் போது மென்றும், அதற்குள் கொடுப்பதா யிருந்தாற்றான் தரக்கூடும் என்றும் திண்ணமாகக் கூறி விட்டேன். 'நிச்சயம் நாளை அல்லது மறுநாளே கொண்டு வந்து கொடுத்து விடுகிறேன்' என்று அவர் வாக்களித்ததால், நானும் ஒரு நோட்டை எடுத்துக் கொடுத்திட்டேன். நாளை, மறுநாள், வாரம், மறுவாரம் எல்லாங் கழிந்தன. 25-ஆம் தேதியும் கழிகிறது. எனக்கோ பணம் தேவையா யிருக்கிறது. எப்படியும் 25-ஆந் தேதி அவர் கொண்டுவந்து கொடுத்து விடுவார் என்ற என் நம்பிக்கை யெல்லாம் வீணாயிற்று. 'வேறு கதி யில்லை, நாமும் கடன் வாங்க வேண்டியதுதான்' என்ற நிலைமை வந்துற்றது. பொதுவாக, எனக்குக் கடன் வாங்குவதென்றால் சாவதைப் போல. கொடுக்கத் தயாரா யிருப்பதாகச் சொல்லி யிருக்கும் நண்பர்களும், கொடுக்கக் கூடிய நண்பர்களும் எனக்குச் சிலர் உண்டு. எனினும், போவதற்கு எனக்கு ஒருவித வெட்கம், ஒரு சஞ்சலம், ஒரு மனவருத்தம் எல்லாம் உண்டு. முடிவில் என் செய்வது? நானுஞ் சென்றேன்; நண்பருங் கொடுத்தார். அடுத்த மாதம் 2-ஆந் தேதியில் கொடுப்பதாகச் சொல்லி வாங்கி வந்து நானும் அவ்வாறே கொடுத்து விட்டேன்.

எனக்கு இவ்வித மரியாதையைக் கொடுத்த கடன்காரர் இவ்வூரை விட்டுத் தம்மூர் என்னிடம் பணம் வாங்கிய மறுநாளே சென்று விட்டார் எனத் தெரிய வந்தது. அவர் விலாசம் விசாரித்து, அவ் விலாசத்துக்கு அடுத்த மாதம் ஒரு கடிதம் எழுதினேன். பதில் கிடையாது. இரண்டு மாதங் கழித்து இன்னொரு கடிதம். அதற்கும் பதிலில்லை. விலாசம் மறுபடியும் தீர விசாரித்து மற்றொரு கடிதம். முன்போல் தான். அப்பா! ஆறு மாதங் கழித்து, பணம் இரண்டு நாளில் அனுப்பப்படுமென்று ஒரு கடிதம் வரவே, என் உள்ளம் பொங்கிற்று. பணம் கைக்கு வந்துவிட்டது போலவே அகமகிழ்ந் தேன். ஆனால்—ஆனால், அப்பூரிப்புக்கு இடமேயில்லை. நாள் இரண்டு சென்றன; வாரம் இரண்டு; மாதமும் இரண்டு. என்ன பயன்?

'சரி, இனி இது வாராது' என்று தீர்மானித்து, இதைப்பற்றி நினைக்கவுங் கூடாது என்று நிச்சயித்து விட்டேன். பிறகு ஒரு



வருஷம் கழித்து ஒரு நாள் அவ்வாள் கடற்கரை யோரம் உலாவி வருவதைக் கண்டேன். நான் பார்த்ததை அவர் தெரிந்துகொள்ள வில்லை போலும்! தாம் மாத்திரம் என்னைப் பார்த்ததாக நினைத்துக் கொண்டு குறுக்கே விழுந்து ஓடி விட்டார். பாவம்! கடன்பட்டார் துயர் இதனினும் மிக்குண்டோ என நினைத்து நானும் என் வழி சென்று விட்டேன். இன்னொரு நாள், கடற்கரைப் பாங்கர் அவர் தென்பட்டார். இவ்வமயம் ஓடுவதற்கு வழி யில்லை. சற்று நேரம் நின்று பேசிக்கொண்டிருந் தோம். என் விஷயத்தை அவர் முற்றும் மறந்துவிட்டவர்போல் பேசிக்கொண்டே வந்தார். பிறகு பிரிவதற்கு ஆயத்தம் பண்ணினார். அச்சமயத்தில்தான் நானும் நினைப்பூட்டினேன். 'ஓஹோஹோ, மறந்தே போய்விட்டது. இந்தாருங்க' என்று சொல்லி ரூபா நோட்டை எடுத்து நீட்டினார். ஆ! என்னே என் மகிழ்ச்சி!! ஐந்து ரூபா ஐம்பது ரூபாபோல் தோன்றிற்று. கண்டெடுத்த பணம் போல இருந்தது. அதுதான் காணாமற் போனதற் கொப்ப என்று கருதிவிட்டேனே! இந் நிலையில் அதைத் திரும்பப் பெற்றதும், பெற்றிழந்தான் மீண்டும் பெற்றால் ஒத்ததோர் நிலையில் என் மகிழ்ச்சி எப்படி இருந்திருக்கும்? உங்கள் மகிழ்ச்சிதான் எப்படி இருந்திருக்கும்? யோஜித்துப் பாருங்கள். அம் மகிழ்ச்சியைப் பெறும் பொருட்டாவது ஒருவன் கடன் கொடுத்து ஏமாறுதல் நல்லதுபோற் றோன்றுகிறது. ஆனால், ஒரு காரியம். அதற்கு வேண்டிய அளவாவது பணம் இருக்க வேண்டும்; வாங்கிக்கொண்டு போனோர் ஏதேனும் ஒரு காலத்திலாவது கொண்டுவந்து கொடுக்க வேண்டும்.

இன்னொன்று, கடன் வாங்குவதற்கென்று போவோர், நேராகக் குறித்துச் செல்லும் விஷயத்தை முதலிலேயே சொல்லிவிடுதல் எவ்வளவு நல்லது? அன்று அவர் எனது நேரத்தில் வீணாக இரண்டு மணி எடுத்துக் கொண்டாரே அவருக்குத்தான் என்ன பயன்? எனக்குத்தான் என்ன பயன்? அவர் பயன் பெற்றாரெனின், அப்பயனை அவர் ஒரு நிமிட நேரத்திலேயே பெற்றிருக்கக் கூடுமே!

ஆனால், 'இரண்டு மணி நேரத்திற்கு வருந்துகிறாயே! நீ காலத்தை வீணாகக் கழிப்பதில்லையோ?' என்று கேட்காதீர்கள். காலத்தை எனக்கு உசித மென்று படுகிற வழிகளி லெல்லாம் செலவிட எனக்கு உரிமை யுண்டென்று நினைத்து வருகிறேன். ஆனால், அவ் வுரிமையை இவர் போன்ற சிலரால் சில சமயங்களில் இழந்துவிட நேரிடுகிறது. எனக்கு யாரோடு பேச இஷ்டமுண்டோ, பேசினாற் பயனுண்டோ அவரோடு நெடுநேரம் பேசவேண்டி யேற்பட்டால், அதற்காக வருந்தப் போவதில்லை. ஆனால், இத்தகைய பெரியார் கேண்மைக்கு நானுரிய னல்லன்.

# தாசிகளும் தாசிகாந்தர்களும்

## ஒரு விநோத நாடகம்

(திரு. ஏ. சோக்கலிங்கப் பிள்ளை)

(பதிப்புரிமை ஆசிரியருடையது)

சென்ற வெளியீட்டின் தொடர்ச்சி

### காட்சி 4

இடம்:—சென்னைத் தங்கசாலை வீதியில் பாஸ்கராசாரியார் வீடு.

காலம்:—காலை 8 மணி.

(சோமநாதையரும், பாலு முதலியாரும் பிரவேசம்)

சோமநாதையர்:—பாஸ்கராசாரியாரே! நல்ல வேளை, தாங்கள் வீட்டி லிருந்தீர்கள். பாலு முதலியார்! அறிக்கைப் பத்திரிகையை அவரிடங் கொடுங்கள்.

பாலு முதலியார்:—இதோ இதைப் பாருங்கள்.

பாஸ்கரா:— (அறிக்கைப் பத்திரிகையைப் படித்து) இந்த நாராயண சாஸ்திரிக்கு நாலெழுத்துத் தெரியும். சங்கர பூஷண ராயருக்கு (கோபத்தோடு) அதுவுந் தெரியாது. நாமெல்லாரும் ஏதோ அக்கிரமமான காரியங்கள் செய்கிறதாக நாளையதினம் சபை கூட்ட வேண்டு மென்று வீடுகள் தோறுந் திரிந்துகொண் டிருக்கிறார்களாம். அதை நான் கேள்விப்பட்டேன். அதைத்தா னிதுவுஞ் சொல்லுகிறது.

சோமநாத:—அவர்க ளழுதார்கள் போங்கள். அவர்கள் சபை சேர்த்தால் இந்த வீதியி லிருந்து போகிறவர்கள் யாரிருக்கிறார்கள்? அவ்வித துஷ்ட புத்திகள் பத்துப்பே ரிருக்கப் போகிறார்கள். அவர்கள் நாராயண சாஸ்திரியார் வீட்டிற்குப் போவார்கள், போகட்டும், போய் என்ன செய்கிறார்களோ பார்ப்போம்.

பாலுமுதலி:—பார்த்தீர்களா! இதனால் அவர்களுடைய பொறாமை வெளிப்படுகிறதே தவிர வேறென்ன இருக்கிறது? அவர்கள் நம்மை அசைக்கக் கூடுமா? நாம் தேவடியாட்களை வைத்துக் கொண்டால் அவர்களுக்கு வந்த கஷ்ட மென்ன? நஷ்ட மென்ன? இப்போது பெரிய மனுஷா ளென்கிற கௌரவம் போய்க்கொண் டிருக்கிறது. இந்தப் போக்கிரிகளை அடக்கிப் போடுவதற்கு நாமேதாகிலும் உபாயந் தேடினு லொழிய அவர்கள் அடங்க மாட்டார்கள். இதுவரையும் பார்த்தும் பாராதவர் போலும், கேட்டுங் கேளாதவர்போலு மிருந்தோம். அப்படியே யிருந்தால் தலைமே



லேறுகிறார்கள். இனி நமக்கும் நாம் வைத்துக்கொண் டிருக்கும் பேர் வழிகளுக்குங்கூடக் கெடுதி தேடுவார்கள்.

சோமநாத:—ஆம், ஆம், மெய்தான். நாம் சும்மா இருப்பது கூடாது. எனக்கு இந்த கோணை இங்கிலீஷ் தெரியா தாகையால் ஆக்டு (Act) ஒன்றுந் தெரிய வில்லை. ஐயா! பாலு முதலியாரே! தாங்கள் ஒரு பெரிய வக்கீ லாகையால், நாம் அவர்கள் பேரில் கேஸ் தொடுக்கும்படி, லா (Law) வில் ஏதாவது ஆதாரந் தேடிச் சொல்லுங்கள்.

பாலுமுதலி:—அவர்கள் சபை சேர்க்கட்டும் சொல்லுகிறேன். பினல் கோட் காமெண்டரி (Penal code comentary) பார்த்து, டெபமேடரி (Defamatary)யின் கீழ் பிராது கொண்டு வருவோம். எனக்கு மாஜிஸ்டிரேட் அவர்களை நன்றாகத் தெரியும். அவரிடஞ் சொல்லி பந்தோ பஸ்து செய்கிறேன்.

சோமநாத:—டெபமேடரி யென்றால் என்னமோ எனக்கு விளங்க வில்லை. தமிழில் தெளிவாய்ச் சொல்லுங்கள்.

பாலுமுதலி:—டெபமேடரி யென்பதற்கு உங்களுக்குத் தமிழ் வேண்டுமோ?

பாஸ்கரா:—எனக்குக் கொஞ்சம் இங்கிலீஷ் தெரியும். சொல்லுகிறேன் கேளுங்கள். டெபமேடரி என்றால் அவதூறான என்பது பொருள்; என்றால், அவர்கள் நம்மை அவதூறாகப் பேசி மான நஷ்டத்தை யுண்டுபண்ணினார்கள் என்று கொள்ளலாம்.

சோமநாத:—சரி, சரி, தெரிந்தது. இது நல்ல யோசனைதான். அவர்கள் கர்வத்தை யடக்க இது தக்க யுக்தி. எனக்கு இதைக் காட்டிலும் வேறொரு யோசனை தோன்றுகிறது. அவர்க ளிருவரும் இங்கிலீஷ் வாசித்து, அடியோடே சந்தியா வந்தனத்தை மறந்து போனார்கள். நெற்றியிலும் ஒன்றும் வைக்கிற தில்லை. வேஷ்டி கட்டுவதை விட்டுவிட்டுக் கால் சட்டை மாட்டிக்கொண்டார்கள். பூட்சில் கால் நுழைத்துக்கொண்டார்கள். தலையில் குடுமியை வெட்டி, கிராப் செய்து கொண்டார்கள். அந்தக் கிராப்பைப் பார்த்தால், பாம்பு, எலி, ஓணான், பல்லி முதலியவை புகுந்து கொண்டாலுந் தெரியாத புதர், செடி இவைகளைப் போலச் சுருட்டை சுருட்டையாக மயிர்களை வளர்த்துக் கொண்டு, இன்ன சாதி யென்று தெரிந்துகொள்ளக் கூடாதபடி முகங்களை விகாரப்படுத்திக் கொண்டார்கள். எந்த ஓட்டல்களிலும், கிளப்புகளிலும் (Beaf puff mutton puff) முதலியவைகளையும், பிஸ்கட், உப்புமா, வெங்காய தோசை, வெள்ளைப் பூண்டு தோசை, வெங்காய வடை, வெள்ளைப் பூண்டு வடை, கீரை வடை, மசாலுண்டை, குசாலுண்டை, ரவா பொங்கல், ரவா தோசை, அசல் வாதம் அல்வா, கேக், காபி, டீ முதலிய பலகா

தினுசுகளை ஒருவன் நக்கி நக்கி சாப்பிட்டு வைத்துப்போன கரண்டி, பிளேட் இவைகளிலேயே அருவருப்பின்றிச் சாப்பிடுகிறார்கள். இந்தச் சங்கதிகளை யெல்லாம் விஸ்தாரமாக எழுதி, சங்கராசாரியாருக்கும், இராமானுஜருக்கும், மடாதிபதிகளாகிய தம்பிரான்மார்களுக்கும், ஜீயர்மார்களுக்கும் தெரிவித்து, இவர்களைச் சாதியை விட்டு நீக்கும்படி ஆக்ஷேப தஸ்தாவேஜி வரவழைத்தால் நல்லதாயிருக்கும். மேலும் அவர்களுடைய பெரிய பணக்காரர்களுக்கும், நாட்டாண்மைக்காரர்களுக்கும் தெரிவித்தால் அவர்களைச் சாதியை விட்டு நீக்கி விடுவார்கள். இதனால், அவர்கள் அயோக்கியதையும், துர் நடவடிக்கையும் எல்லோருக்கும் தெரிய வரும். உங்களுடைய யோசனை யெப்படி சொல்லுங்கள் ?

பாஸ்கரா:—அது நன்றா யிராது. நான் மாத்திரம் சந்தியாவந்தனஞ் செய்கிறேனா ? நெற்றியி லேதேனும் வைக்கிறேனா ? இன்னும் நம்ம ஸொஸைடி பிரெண்ட்ஸ்கள் (Society friends) அநேகரும் அப்படியே யிருக்கிறார்கள். சந்தியா என்ன ? வந்தனமென்ன ஸார்? நான்ஸென்ஸ்.

சோமநாத:—நீங்கள் இங்கிலீஷில் எவ்வளவு நிபுணர்களானாலும் அது மாத்திரம் சொல்ல வேண்டாம். பிராம்மணர்களானதால் வாஸ்தவத்தில் சந்தியா வந்தனஞ் செய்யாமற் போனபோதிலும், பிரதிதினம் தீர்த்தமாடாவிட்டாலும், எந்த இடத்தில் எப்படி யிருந்த போதிலும், நம்முடைய ஆசாரங்களில் தவறினவர்களல்லவென்று மேலுக்காகிலுங் காட்டிக்கொள்ள வேண்டும்.

பாஸ்கரா:—முதலியார்! நீங்கள் சொன்னதுபோல் டெபுடேரி சார்ஜே நன்றா யிருக்கிறது. நல்ல திருக்கட்டும். போன சுக்கிரவாரம் தெற்கே யிருந்து மானேஜர் குண்டோதர ஐயர் வீட்டுக் கலியாணத்திற்கு வந்த செட்டில் (Set) பதினாறு வயதுள்ள பெண் எவ்வளவு அழகா யிருந்தாள் பார்த்தீர்களா ! நம்மில் யாராகிலும் அவளை வைத்துக்கொண்டால் வெகு நன்றா யிருக்கும்.

பாலுமுதலி:—அந்தப் பாட்டுக் கச்சேரிக்கு நாமெல்லோரும் போயிருந்த அப்போதே அதைப்பற்றி ஆலோசித்து, அவர்களுக்குப் போகடி விட்டேன். அவர்கள் அவளுக்கு எல்லாவற்றிற்கும் மாதம் ஒன்றுக்கு 150 ரூபா கொடுப்பதாகப் பத்திரமெழுதிக் கொடுத்தால் சம்மதிக்கிறோமென்று சொல்லுகிறார்கள். இப்போது 500 ரூபா வரையுஞ் செலவுக்கு வேண்டும்; ஒரு பெரிய மிராசுதார் கேசில் 2000 ரூபா வரையிலும் பீஸ் (Fees) வரவேண்டும். அது இப்போது வந்தால், சௌகரியமாகக் காரியத்தை முடித்து, நம்ம பிரென்சுக்களை வரவழைத்து விருந்து செய்து வைக்கவேண்டுமென்னும் அபிப்பிராய மிருக்கிறது.



சோமநாத:—எனக்குமெத்த சந்தோஷம். தாங்கள் அதிர்ஷ்டசாலி. உங்கள் கோரிக்கை தப்பாமல் பலிக்கும். மிராசுதார் பீஸ் வாராமற் போனாலும் இந்தப் பட்டணத்தில் எந்த வர்த்தகனிடத்திலாகிலும் கைபதிலாக வாங்குங்கள்; அல்லது எந்த மார்வாடிக்காகிலும் ஒரு பிராமிஸரி நோட்டு எழுதிக்கொடுத்து வாங்கிக் கொடுங்கள். நானுடனே போய், அந்தப் பெண்ணுக்கு வேண்டிய புடவை, பட்டு சேலை, அதற்குத் தகுந்த இரவிக்கைகள், பலகார தினுசுகள், வாசனை திரவியங்கள், புஷ்பங்கள் முதலியவற்றை வாங்கிக் கொண்டு, ஒரு மணி நேரத்தில் வருகிறேன். என்ன ஸார் ‘ இன்றைக் கிருந்தாரை நாளைக் கிருப்பரென் றெண்ணவோ திடமில்லையே.’ நாமெப்போது இறந்து போவோமோ அது நமக்குத் தெரியாது. பிழைத்திருக்கிற நாளு நாளும் இப்படிப்பட்ட சந்தோஷத்தோடு கழிய வேண்டும். இப்படிக் கில்லாதவர் பிழைப்பு என்ன பிழைப்பு சார்? விதவைப் பிழைப் பல்லவா ?

பாலுமுதலி:—கையில் மணி ரெடியா யிருந்தால் இன்றைய சாயங்காலமே நான் நினைத்ததை முடித்திருப்பேன். இரண்டு மாதங்களாகக் காயலாக இருந்ததால் கோர்டுக்குப் போகாம லிருந்து விட்டேன். இதனால் பார்டிகளுடைய பீஸ் கைக்கு வரவில்லை. காயலா பெட்டர் பண்ணிக்கொள்வதற்கே அங்கங்கே கடன் வாங்கினேன். 50 ரூபா போனாலும் நல்ல வைத்தியரிடமிருந்து ஔஷதம் வாங்கிக் கொண்டால் நல்லதென்று, வைத்தீசுரன் கோவிலி லிருந்து வைத்தியரை வரவழைத்தேன். அவ ரிங்கிருக்கும்போதே உங்கள் தேகத்தில் நீடித்திருக்கும் பழைய சாட்டியங்களை யெல்லாம் போக்கடித்துக் கொள்ளுங்கள். நான் தெரியாத முண்டத்தி னிடமிருந்து மருந்து வாங்கிக் கொண்டேன். அவன் இரசஞ் சேர்ந்த மருந்தைக் கொடுத்தான். அதனால், வாய் பிடித்துக் கைகால்களுக்கும் பிடிப்புண்டாகிப் போன வருஷம் நாலு மாத காலம் பாயும் படுக்கையுமா யிருந்து அதிகமாகச் சிரமப்பட்டேன். பிறகு வேறு வைத்தியனால் சுகப்பட்டேன்.

சோமநாத:—நீங்கள் வைத்துக்கொண்டவளிடத்தில் சாட்டியங்க ளொன்றுமில்லை யென்று சொல்லுகிறார்களே ?

பாலுமுதலி:—அவளிடத்தி லில்லை சார். பத்துப் பதினைந்து நாளுக்கு முன் நூதனமாக மதனபுரத்தி லிருந்து ஒரு செட் வந்ததே, அவளிடத்தில் தெரியாமல் இரண்டு நாள் பால் மாறியது. ‘ அவளை இராத்திரியில் பார்த்தால் அதி பாலியையாகத் தோன்றுகிறாள்; பகற் காலத்தில் பார்த்தால் குறைந்தது நாற்பது வயதிருக்கும். எனக்குக் கண்ணிருந்தும் அவள் மோகத்தால் தெரியாமற் போனேன்.

சோமநாத:—சரி, சரி, தெரிந்தது. அந்த முண்டை யெனக்கு முன்னமே தெரியுமே. எனக்குப் பதினாறு வயது வந்தது முதல் இதுவரையும் இருநூறு முண்டைகள் தெரியும். நம்ப வேண்டும். எனக்கு எப்போதும் பாரிய வியாதியொன்றுஞ் சம்பவிக்கவில்லை. ஒரு தரம் மாத்திரம் விசித்திரமான சாட்டியங் கண்டது; அதனால் நான் சாகிறவனே. தெய்வாதீனம் பிழைத்தேன். நாலு நாள் என்னைத் தரையிலேயே போட்டு வைத்திருந்தார்கள். பாஸ்கராசாரியரே! உங்கள் தமயனாரும் இப்படிப்பட்ட சாட்டியத்தினாலேயே இறந்து போனாரல்லவா?

பாஸ்கரா:—எல்லோருஞ் சாகிறார்களா? ஆயுள் முடிந்தவன் எவனோ அவன் சாகிறான். நாம் இத்தனை காலாக இந்த வியாபாரத்தில் திரிந்து கொண்டிருக்கிறோம், இப்போதாகிலுஞ் செத்தோமா? நாமொரு விஷயத்தில் மாத்திரம் சாக்கிரதையா யிருக்கவேண்டும். பார்த்த தேவடியாட்களெல்லாரோடும் சிநேகம் பண்ணுவதை விட்டு ஒருத்தியையே வைத்துக்கொண்டால் நூறு வருஷமானாலும் பரவாயில்லை.

சோமநாத:—நீர் ஒருத்தியையே வைத்துக்கொண் டிருக்கிறீரே, உமக்கேன் வியாதி வந்தது?

பாஸ்கரா:—எப்போதும் வியாதி வராம லிருக்குமா? அடிக்கடி வந்துகொண் டிருந்தாலும் பிராண பயமிராது. நான் வைத்துக் கொண்டிருப்பவள் மகா உத்தமி, சுசீலை, கபட மற்றவள். நானொரு நாளில்லாமற் போனால், அவள் செவ்வையாகச் சாப்பிடவேமாட்டாள். நான் ஏதற்காவது கண்டித்தால் பதில் பேசாள். என்னோடு அவள் தாயாரே பத்து விசை இரகசியமாகச் சொல்லி யிருக்கிறாள். அவளுக்குப் பரபுருஷ ரென்றால் துரும்புக்குச் சமானம். உரோகங்களென்ன? கால பேதத்தினாலும் சரீர பேதத்தினாலு முண்டாகின்றன.

சோமநாத:—நீங்கள் வைத்துக்கொண் டிருப்பவள் ஒருத்தியே யல்ல. நம்முடைய சிநேகிதர்கள் வைத்துக்கொண்டிருக்கும் தாசிகளும் அப்படியேதான். அன்றியும், இப்பட்டணத்திலுள்ள கோவில் தாசிகளும், இதர ஊரி லிருக்குங் கோவில் தாசிகளும், மற்ற எல்லா அனைத்து தாசிக ளெல்லோருமே பதிவிரதைகள். அவர்களோடு பழகி அவர்கள் குணானுபவங்கள் தெரியாதவர்கள் மாத்திரமே பலவாறாக' அவர்களைத் தூஷிக்கிறார்கள். இப்போது நான் வைத்துக் கொண்டிருப்பவள் பர புருஷன் முகத்தை யறியவே மாட்டாள். நம்மதிர்ஷ்டவசந்தான் இப்பேர்ப்பட்டவர்கள் கிடைத்தார்களே யொழிய வேறல்ல.



பாலுமுதலி:—நீங்கள் வைத்துக்கொண்டிருப்பவள் அங்கங்கே கச்சேரி (ஆட்டு-பாட்டு) க்குப் போகிறாள். நான் வைத்துக் கொண்டிருப்பவள் இந்த வீதி யெப்படி யிருக்கு மென்றும் அறியாள். கோவில் முறைக்கும் போகிறதில்லை. நான் வைத்துக்கொண்ட ஒரு வருஷ காலமாகக் கெஜ்ஜை கட்டுவதையே நிறுத்திவிட்டாள். மாதம் நாலு ரூபா சம்பளங் கொடுத்து ஒரு ஆளை அவளுடைய வாசலில் காவல் வைத்தேன். காமராஜா அவர்கள் வைத்துக்கொண்டிருப்பவள் வேறொருவன் பேரில் மோகமாகி அவனுக்குத் தன்னுடைமைகளை யெல்லாம் கொடுக்கிறாளென்று கேள்விப்படுகிறேன். அது எவ்வளவு வாஸ்தவமோ எனக்குத் தெரியாது.

சோமநாத:—இதைப்பற்றிப் பிறகு சாவகாசமாய்ப் பேசிக்கொள்வோம். நாம் முதலில் பேசிய விஷயத்தைச் செவ்வையாக ஆலோசித்துச் சீக்கிரம் ஏதாவதொன்று செய்ய வேண்டும். இல்லாமற்போனால், அவர்கள் அத்து மீறி, நாளைக்கு அந்தப் பெண்ணை வைத்துக்கொண்டால் ஏதாவது கலபா செய்வார்கள்.

பாலுமுதலி:—பாருங்கள், அந்தப் பூல்சு (Fools) களுடைய வியாதியை ஒரு வாரத்தில் சொஸ்தப் படுத்துகிறேன். நாம் பேசிய சங்கதி ஒருவருக்குந் தெரிய வேண்டாம். கோர்ட்டுக்கு டைம் ஆகிறது, எழுந்திருப்போம். (எல்லோரும் போகிறார்கள்.)

(தொடரும்)

## ஆலன் அமுத மொழிகள்

1. மன நேர்மையே இன்பம். மனக் கோணலே துன்பம்.
2. நீங்கள் ஏதிலும் உங்கள் மனத்தை அரை குறையாகச் செலுத்தாதீர்கள்.
3. பாடுபட்டால்தான் ஒருவன் பயன் பெறக் கூடும்.
4. முயற்சி எவ்வளவோ, பயனும் அவ்வளவே. காலம் என்றேனும், யோகம் என்றேனும் ஒன்றில்லை.
5. உயர்ந்த எண்ணங்கள் ஒருவனை உயர்த்தவனாக்கும். தாழ்ந்த எண்ணங்கள் ஒருவனைத் தாழ்ந்தவனாக்கும்.

# அம்மை நோய்

(டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்)

அம்மை நோயானது எல்லா நாடுகளிலும் காணப்படும். ஒரு பயங்கரமான தொத்து நோயாகும்.

இந் நோயானது நீண்ட காலமாக இருந்து வரும் நோயேயன்றி புதியதோர் நோயன்று.

இந் நோய்க்குப் பல நாட்டினரும் பற்பல ஆராய்ச்சிகள் செய்து சிகிச்சைகளைச் சொல்லி யிருக்கின்றனர்.

அவற்றுள் இந்திய நாட்டிலே தமிழர்களும் முஸ்லீம்களும் அரசாண்ட காலம் தொட்டு இன்றுவரையில் தங்கள் அனுபவத்தில் கண்டுள்ள சிகிச்சையையே செய்து வருகின்றனர். எனவே இவர்களால் செய்து வரும் சிகிச்சையானது நன்மை பயக்கத் தக்கதென்பதில் சந்தேகமில்லை. ஆனால் அம்மை நோய் அடைந்தவர்களைத் தனியாய்ப் பிரித்து வாழவும் பிறர்க்கு அந்நோயை வர வொட்டாமல் தடுத்துக்கொள்ளவும் தெரிந்து நடத்தும் முறையில் இன்னும் குறைபாடுடையவர்களாகவே இருக்கின்றனர்.

ஆங்கிலர் தங்கள் ஆராய்ச்சியால் சில சிகிச்சைகளையும் வியாதியாளர்கள்பால் பிறர் நடந்துகொள்ள வேண்டிய முறைகளையும் விரிவாகக் கூறி யிருக்கின்றனர்.

அவர்கள் தாங்கள் கூறும் வண்ணம் இந்திய மக்களை அனுஷ்டிக்கும்படிச் செய்கின்றனர். தவிர அம்மை முதலான ஒட்டுவாரொட்டி நோய்களுக்காக நமது வரிப்பணத்தி லிருந்து சென்னைக் கார்ப்பொரேஷன் ஒரு ஆஸ்பத்திரியைக் கட்டிவைத்திருக்கின்றது.

கார்ப்பரேஷன் அதிகாரிகள் இந்நகரத்தில் வீதிவீதியாய் வீடு வீடாய் நுழைந்து அம்மை நோய்க் கண்டவர்களைக் கண்டு பிடித்து அவர்களை அதற்கென அமைத்துள்ள ஆஸ்பத்திரியில் வைத்து சிகிச்சை செய்கின்றனர். இந்நோய் மற்றவர்களைப் பற்றுமலும் அதிகமாகப் பரவாமலும் செய்வதற்கு இது ஒரு நல்ல ஏற்பாடு என்பதை ஒருவரும் மறுப்பதற்கில்லை. தவிர சுத்தமாய் வாழச் சொல்லுவதும் பொருத்த முடையதே யாகும்.



ஆனால் மேற்படி ஆஸ்பத்திரியில் செய்யும் சிகிச்சைகளில் நமது மக்களுக்கு வெறுப்பும் ஒரு பீதியும் ஏற்பட்டிருக்கின்றதை நாம் உணர்கின்றோம். மக்கள் பயத்தின் காரணத்தால்தான் அம்மை நோயை வெளிக்குச் சொல்லாமல் இரகசியமாய் ஆஸ்பத்திரிக்கு அனுப்பாமல் வீட்டிலேயே வைத்து சிகிச்சை செய்கின்றனர்.

என்ன காரணம் என்று விசாரித்தால் மக்கள் பயப்படுவதற்குக் காரணம் இருக்கின்றது என்பதை மறுக்க முடியாது. அது யாதெனில் நம் நாட்டு ஆராய்ச்சியில் அம்மை நோயானது அதிக உஷ்ணத்தால் உண்டாகும் கண்ணுக்குப் புலப்படாத சிறிய பூச்சிகள் மக்களைக் கடித்து அவற்றின் விஷமானது சிலருக்கு இரத்தத்தில் கலந்து இரத்தம் விஷமடைந்து சுரம் கண்டு பின் அம்மையாகக் காணப்படுகின்றது.

இப்படி அம்மை கண்டவர்களுக்கு உடல் முழுதும் கொப்பளங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் கரு நிறமுள்ள கொப்பளங்கள் காணில் அத்தகையார் இறப்பர். தவிர கொப்பளங்கள் உண்டான பின் சரீரத்திலேயே அடங்கிவிடினும் மரணமடைவர்.

இவ்விரண்டும் இல்லாதவர்களை நாம் ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொண்டால் யாதொரு கெடுதலும் சம்பவியாது. ஆனால் நாம் செய்யும் தப்பிதங்களாலேயே மக்கள் மடிய நேருகின்றது. அவை யாவையெனில் அம்மை கண்டவர்களுக்கு மலபந்தம் உண்டாகும்; வயிற்றில் இரணம் ஏற்படும்; சரீரம் காந்தும்; அம்மையின் முத்துக்கள் இறங்கும்போது நமை அதிகம் ஏற்படும். இத்தகையத் துன்பங்களை நீக்குவான்வேண்டி ஆங்கிலர் செய்யும் சிகிச்சைகளைக் கார்ப்பொரேஷனிலும் கையாண்டு வருகின்றனர். அவையாவன :

1. அம்மை கண்டவர்களுக்கு முதலில் காணும் சுரங்களுக்கு மலபந்தம் நீங்க பேதி மருந்தும், சுரத்தைக் கண்டிக்க கொய்னா மிக்சர் அல்லது ஆஸ்பிரின் இவைகளைக் கொடுத்து அவற்றால் குணமில்லையென அறிந்து, மூன்றாம் நாள் அல்லது நான்காம் நாள் சரீரத்தில் முத்துகள் காணப்படின் மருந்தை நிறுத்தி விடுகின்றனர். என்றும் இம் மலபந்தத்தைப் போக்க விளக்கெண்ணெயும், பேதி உப்பும், செட்லிட்ஸ் உப்பும் கொடுக்கின்றனர்.

2. அம்மை கண்டவர்களுக்கு, பார்லி கஞ்சியும், குளுகோசும், ஆர்லிக்ஸ் பாலும், அரரூட்மாவும், கோதுமைக் கஞ்சியும், காபி, டீயும் பாலும் ரொட்டியும் ஆகாரமாகக் கொடுக்கின்றனர். இம் முறை மிகக் கெடுதலை யுடையது. இவ் வாகாரங்களால் வியாதியாளர் அதிக உஷ்ணத்தால் துன்பமடைவர்.

3. அம்மை கண்டவர்களின் நமையைப் போக்க ஆலிவ் ஆயில் மாக்னிஷியம் கார்ப் என்னும் மாவில் வாசனை கலந்த ஒரு வகைப் பொடி ஆகிய இவைகளை உபயோகிக்கின்றனர். இதனால் நமை நீங்குவதில்லை, முத்துகளும் சீக்கிரம் ஆறுவது கிடையாது. ஆனதால் முத்துகளில் புழு அதிகரிக்கின்றது. புழுக்களை வளரவொட்டாது தடுக்கக் கத்தரிக்கின்றனர். அதனால் ஆற நாள் செல்லுகின்றது.

4. அம்மை கண்ட மக்கள் வாசம் செய்யும் இடத்தைச் சுற்றி லைசால் என்னும் நோய் பரவாதபடித் தடுக்கும் ஒருவித உஷ்ணமுடைய நாற்ற மருந்தைக் கொட்டுகின்றனர். இதனால் நோயாளிகள் கண் எரிச்சல், தேக எரிச்சல், நீர் எரிச்சல் முதலான துன்பங்களையடைய நேருகின்றது.

எனவே இத்தகைய சிகிச்சையைக் கண்ட இந்தியர் பயப்படுகின்றனர்; ஆனால் தனிமையாக வைப்பதை அனுமதிக்கின்றனர். ஆதலால் கார்ப்பரேஷன் ஆஸ்பத்திரிகளில் இந்தியர்களின் பண்டைய காலம் தொடங்கி வழங்கி வரும் தத்துவ சாத்திரங்களுக்கும் யுக்திக்கும் அனுபவத்திற்கும் ஒத்த கீழ் வரும் சிகிச்சைகளை மேற்கொள்ளுவார்களேயானால் இந்தியர் அனைவரும் ஆஸ்பத்திரிக்குச் செல்ல ஆசைப்படுவர். அதனால் நோயும் பரவா தொழியும்; மக்களும் இந்நோயால் மடியாது சுகப்படுவர்.

## இந்தியர்களின் சிகிச்சை

அம்மை கண்டவர்களுக்கு உண்டாகும் சுரத்தை முதல் நாளிலேயே தெரிந்து கொண்டு எவ்வித ஔடதத்தையும் கொடா திருத்தல். எப்படியெனில் அம்மை சுரம் கண்டோர் முகம் ஊதலாயும் சிவந்த நிறமாயும் தூக்கத்தில் பிதற்றுவதாயும் விளங்குவர். சிலர் உடம்பு வலியாலும் உட்புற மெல்லாம் வலியாலும் ஓரிடம் பொருந்தாமல் தவித்துக் கொண்டும் இருப்பர். தவிர இச்சுரம் கண்டவர்களுக்கு ஆரம்பத்திலேயே நாவரட்சி அதிகம் கண்டு நீர் அதிகமாய் அருந்துவர். ஆனால் நாடியில் சீதளக் குறி ஒன்றும் காணப்படாது. நாடி பரீட்சையில் வாதநாடி வேகமாய் அடிக்கும். பித்த நாடியும் சீதள நாடியும் கைக்கு அகப்படாது. சிலருக்குச் சுரம் விட்டு விட்டுக் காணும். இத்தகைய குறியுள்ளவரைக் கண்டு அவர்களுக்கு மூன்று நாள் பரியந்தம் யாதொரு மருந்தையும் கொடுத்தலாகாது.

அம்மை நோய் ஊரில் இருக்கும் காலத்தில் சுரம் கண்டவர்களுக்கு மருந்தைக் கொடுக்காமல் அவர்களுக்குச் சுலபத்தில் ஜீரணிக்கக் கூடிய நெல்பொரி கஞ்சியைப் பாலுடன் சேர்த்துக் கொடுத்துவர வேண்டும். வேண்டுமானால் பால் கொடுக்கலாம். தவிர வேண்டிய



அளவு நீர் கொடுக்கலாம். சுரம்விட்ட பின்னும் முத்து கண்ட காலத்தும் நெல்பொரி கஞ்சி, பாசிப்பயறு கஞ்சி, கேழ்வரகு கஞ்சியில் மோரும் வெங்காயமும் சேர்த்துக் கொடுத்தல், கம்புக்கஞ்சி ஆகிய கஞ்சிகளுடன் இளநீர், தாழம்புநீர், பேயம் பழம் ஆகிய இவைகளைக் கொடுத்து வரல் வேண்டும்.

(தாழம்பு நீர் செய்யும் விதம்: ஒரு இதழ் அல்லது இரண்டு இதழ் தாழம் பூவைப் போட்டு ஒரு படி நீர் விட்டு அரைப்படியாகச் சுண்டக் காய்ச்சி வடிகட்டின நீரை உபயோகித்தல் வேண்டும். இது குளிர்ச்சியானதும் அம்மைநோய்க்கு உகந்ததுமாகும்.)

(இளநீர் கொடுப்பதால் சீதளம் என்று எந்த இந்தியனும் அம்மை நோயில் கூறமாட்டான். ஏனெனில் அவை நீண்டநாள் அனுபவமாதலால்.)

(பேயம் பழத்தை அதிகமாய் உபயோகித்தால் மல பந்தம் இல்லாமல் தாராளமாய் மலம் கழிந்து கொண்டுவரும். இல்லையேல் மலம் தள்ளாது. ஆதலால் பேயம் பழம் தாராளமாய் உபயோகிக்க வேண்டும்.)

அம்மை முத்தானது முகத்தில் வாடிவிடுமானால் குளிர்ந்த நீரை வெய்யலில் வைத்து ஸ்நாநம் செய்துவைக்க வேண்டும். இதன்படி ஒரு நாள் விட்டு ஒரு நாள் ஸ்நாநம் செய்துவைக்க வேண்டும்.

அம்மை நோயாளிகளைச் சுற்றி வேப்பிலையைப் போட்டு வைக்க வேண்டும். தவிர மஞ்சள் நீரைத் தெளித்துக்கொண்டிருத்தல்வேண்டும். இல்லாவிடில் நோயாளியின் சரீரம் எரிச்சலாய்க் காணப்படும். (இதைச் சிலர் தீட்டுப்பட்டதாயும் மஞ்சள் சலத்தால் தீட்டு நீங்குவதாயும் கூறுகின்றனர். அவர்கள் நம்பிக்கையாளரும் விசார மற்றவரும் ஆவர்.)

உஷ்ணம் அதிகப்படில் அம்மைக் கிருமிகள் விருத்தி யடைந்து சரீரத்திலும் எரிச்சலை உண்டாக்கிவிடும். மஞ்சள் வாசனையால் அக்கிருமிகள் நாசமடைந்துவிடும். எனவே அம்மைக் கிருமிகள் விருத்தியாகா வண்ணம் தடுப்பதற்கு மஞ்சள் நீரை எங்கும் தெளித்தல் வேண்டும். அன்றியும் மஞ்சள்நீர் தெளிப்பதால் நோயாளியின் சரீரத்தில் தாக்குண்ட காற்றானது கிருமிகளைக் கவர்ந்து செல்லக்கூடியதாதலால் அக்காற்றை உட்கொள்ளும் பிற மனிதர்களை அக்கிருமிகள் அடையா வண்ணம் மஞ்சள் வாசனையானது அக்காற்றில் கலந்தக் கிருமிகளைக் கொன்று விடுவதால் பிறரைத் தாக்காதபடி பாதுகாத்துக் கொள்ளலாம். இது போலவே வேப்பிலையின் குணமும் ஆதலால் அதனையும் நோயாளியைச் சுற்றி தினே தினே புதியதாய் வேண்டிய வரையில் போட்டு வைக்க வேண்டும். இதன் தத்துவம் தெரியாத

சிலர் இதை ஒரு அம்மன் எனக் கூறி காய்ந்த வேப்பிலையானாலும் சரி, ஒரு பிடியைத் தலைமாட்டண்டை வைத்து விட்டு மாரியம்மனை வேண்டி பிரார்த்தனை செய்வது ஆராய்ச்சிக் குறைவேயாகும்.

முத்துகள் வாடும் காலத்தில் நமை அதிகம் காணும். அது சமயம் மஞ்சளையும், வேப்பிலையையும் அறைத்து தடவுவதால் அரிப்பு நீங்கிவிடும். அன்றியும் சுலபத்தில், சீக்கிரத்தில் முத்துகள் உதிர்ந்து முத்துக்களில் கிருமிகள் பெருகாதபடி தடுத்து விடும். எனவே யாவற்றினும் மேலானது வேப்பிலையும் மஞ்சளுமே யாகும்.

அம்மை நோய் நீங்கியபின் சுமார் மூன்றுமாத காலம் வரையில் உஷ்ணமான ஆகாரங்களையாவது அதிகக் காரத்தையாவது பேதி மருந்தையாவது உட்கொள்ளலாகாது.

மலம் தள்ளுவதற்கு வேண்டுமானால் விளக்கெண்ணெய் சாப்பிடலாம்.

இதன்படி ஒழுகும் எவரும் துன்பமின்றி உயிர்வாழ்வர். தவிர இச்சிகிச்சை செய்வதால் ஒருவர்கூட மரணமடைய மாட்டார். இதை விடுத்து ஆங்கிலர் செய்யும் சிகிச்சையில் மரணம் அதிகம் சம்பவிக்கின்றதென மக்கள் நினைக்கின்றதால் சென்னைக் கார்ப்பொரேஷன் மெம்பர்களும் மற்றையோர்களும் இதனை ஆழ்ந்தாராய்ந்து தக்கபடி மக்கள் மனதைத் திருப்தி செய்யும் வகையில் அம்மை ஆஸ்பத்திரியில் நடந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

இந்தியர் ஆங்கிலரைப்போல் அம்மை நோய்க்குப் பயப்படாததின் காரணம் தங்கள் சிகிச்சையால் மரணம் இல்லை என்ற ஓர் எண்ணமேயாகும்.

சன்மானம்

எழுதும் ஆற்றலுள்ள அன்பர்கள் 'தமிழர'சில் பிரசுரிப்பதற்கு நகைச்சுவை மிகுந்த கட்டுரைகளையும், இனிமை வாய்ந்த சிறு கதைகளையும், விகடத் துணுக்குகளையும் அனுப்பலாம். அவற்றைப் பரிசோதித்து, தகுதியானவைகளுக்குச் சன்மானம் அளிக்கப்படும்.

"மீனாட்சி" பிரஸ், 31, வைத்தியனாத முதலி வீதி, சென்னை.

17



# அயத்தங்க திராவகம்

நண்பர்களே! இந்த மருந்தானது மலேரியா என்னும் விஷச் சுரத்தினாலாவது அல்லது வேறு எந்த சுரத்தினாலாவது சரீரம் இளைத்து இரத்தம் குறைந்து சோகை போலும் வெளுத்துக் காணப்படும் இளைத்த தேகிகளுக்கு ஒரு ஆச்சரிய அபூர்வமெனவே காட்டும்.

இது சாப்பிடுபவர்களுக்கு மயிர் கறுத்து வளரும்; பசியின்மை நீங்கும்; மலம் தாராளமாய்க் கழியும்; தாதுவிருத்தி உண்டாகும்; பரிசுத்த இரத்தம் பெருகும்; நல்ல பசி யுண்டாகும்; முகம் வசீகரமாய்க் காணும்; மேனி சிவக்கும்; நரம்புகள் தடிக்கும்; பசி யதிகரிக்கும். இம்மருந்தை சாப்பிட்டவர்கள் வீரர்களாகவும், பலசாலிகளாகவும், இரத்த சுத்தியும், இரத்தப் பெருக்கும் பெற்று பித்த சோகை, பித்த பாண்டு, ஊதுகாமாலை, எலும்புருக்கி நோய் நீங்கப் பெறுவார்கள்.

இம் மருந்தால் மலமும் தாராளமாய்க் கழியும். இம் மருந்தைச் சாப்பிட்டவர்கள் பயில்வான்களாவார்கள். திடகாத்திர புத்திரர்களைப் பெறுவார்கள்; இன்பத்தையும் அடைவார்கள்.

இம் மருந்தைப் பால்யர் முதல்வயோதியர் வரை ஆண்பெண் இருபாலர்களும் எந்தக் காலத்திலும் சஞ்சீவியைப்போல் உபயோகித்து வரலாம்.

மக்கள் சுகம்பெற வெண்ணியே குறைந்த விலைக்கு விற்கப் படுகிறது.

உபயோகிக்கும் விதம்:—ஒரு அவுன்சு ஜலத்தில் பெரியவர்களுக்கு 2 துளி முதல் 5 துளி வரையிலும், சிறுவர்களுக்கு 1 முதல் 3 துளி வரையிலும் காலை மாலை கொடுக்கலாம். யாதொரு பத்தியமும் இதற்கு வேண்டுவதில்லை.

## சில அபிப்பிராயங்கள்

அன்புள்ள மாசிலா திலக!

தாங்கள் முந்தி யனுப்பிய வி. பி. வந்து பெற்றுக்கொண்டேன். சாமான் திருப்தியாக யிருக்கிறது. நானும் ஒரு அனுபவ வைத்தியனாதலால் விலை குறைவு செய்து அனுப்பினால் தங்கள் மருந்தை அதிகம் செலவு செய்வேன். பின்பு தங்களுதவி கண்டு தங்களுக்கு சிலோன் ஏஜண்டுமானாலு மாவேனாதலால் அதை யனுசரித்து அரைடஜன் அயத்தங்க திராவகம் (ஆறு போத்தல்) வி. பி. பார்சலில் அனுப்ப வேண்டுகிறேன்.

S. V. அக்னீஸ்வரன்.

ஐயா!

தாங்கள் எனக்கு ஒன்றரை மாதங்கட்கு முன் அனுப்பிய அயத்தங்கத் திராவகத்தை உபயோகித்ததில் மிகவும் குணமடைந்தேன். ஆதலின் நான் அதனைத் தொடர்ச்சியாகக் கையாட விரும்புகிறேன். எனவே தொடர்ச்சியாய்ச் சாப்பிடுவதினால் குணக்கேடு உண்டாகாதென்று தாங்கள் கருதுவீர்களாயின், உடனே வி. பி. மூலமாய் இன்னும் இரண்டு மருந்து புட்டிகளை அனுப்பக் கோருகிறேன். ஏனைய மருந்துகட்கு அட்டவணை சாபிதா இருந்தால் அனுப்பவும்.

இங்ஙனம்,

20-6-30, கண்ணபுரம். திரு. பி. எஸ். கணேஸ்வரன்

நான்கு மாதம் சாப்பிடக்கூடிய மருந்து விலை அணா 12.

தபால் கூலி பிரத்தியேகம்.

வியாபாரிகள் விவரம் எழுதித் தெரிந்துக்கொள்ளவும்.



# சஞ்சீவிச் சூரணம்

இச்சூரணம் ஒரு அரிசி எடை எடுத்துக்கொண்டு காலை மாலைகளில் தேனில் உட்கொண்டு வந்தால், மூலத்தில் காணும் பவுத்திரம் என்னும் புண், அஜீரணம், குன்மம், பித்த சுரம் இவைபோம்.



இம் மருந்து முக்கியமாய் பாலிய வயதுடையவர்களுக்கு இரவில் தாதுஸ்கலிதமாகும் இந்திரியத்தைத் தடைப்படுத்துவதில் நிகரற்றது.

இவ் வியாதியை ஒரு மருந்தும் குணப்படுத்துவது கிடையாது. இவ் வியாதியால் பெருத்த கெடுதலும் சம்பவிப்பது இல்லை என்றதால் அநேகர் பாராமரிக்கையாய் இருக்காதீர்கள்.

ஸ்கலிதத்தின் கொடுமையானது நாளடைவில் பலஹீனத்தை உண்டுபண்ணி கைகால் அசதி, சோம்பல், நித்திரை இவைகளால் துன்புறுத்தப்படும்.

வெண்ணெய் அல்லது நெய்யில் ஒரு அரிசி எடை சாப்பிட குணமாய் விடும்.

குழந்தைகளுக்குக் காணும் பாந்த சுரம், வயிற்றுக் கழிச்சல் இவைகளுக்குத் தேனில் பாதி அரிசி எடை காலை மாலையில் கொடுக்க நிவர்த்தியாகும்.

குழந்தைகளுக்குக் காணும் பால் கட்டி என்னும் கொடிய வியாதியை இவ்வொரு மருந்தே கேட்கின்றது. நானும் பல இங்கிலீஷ் டாக்டர்களும் பல இடங்களிலும் பல மருந்துகளிலும் ஆராய்ந்து பார்த்து கடைசியில் இம் மருந்து கிடைக்கப்பெற்று அநேக குழந்தைகளைக் காப்பாற்றப்பட்டது.

சென்னையில் காலட்சேபம் செய்யும் பன்னிபாய் என்னும் மாதின் வீட்டுக் குழந்தைக்கு லீவர் என்லார்ஜ் மெண்ட் என்னும் பால் கட்டிக்கு இம்மருந்து சஞ்சீவியைப்போல் உபயோகிப்பட்டது. கட்டி கரைந்து விட்டது.

கங்கிபட்டி சம்பத்து செட்டியார் எழுதியது:

பால்கட்டிக்குக் கொடுக்கும் கறுப்புச் சூரணம் கொடுத்தனுப்பவும். எப்படியும் அந்தச் சூரணம் எங்களுக்குக் கையிருப்பு வேண்டும்.

**சம்பத்து செட்டியார்.**

---

ஐயா, நான் 4 குழந்தைகளைப் பால்கட்டியால் பரிகொடுத்தேன். இந்த குழந்தைக்கும் பால்கட்டி என்றவுடன் திகிலடைந்து பலரை விசாரித்து தங்கள் அருமை வாய்ந்த பஸ்பத்தின் குணத்தைக்கேட்டு தங்களை நாடி சிகிச்சை பெற்றேன். தங்கள் மருந்தால் குழந்தை பூரா குணமடைந்தது. முன்னமேயே எனக்குத் தெரிந்திருந்தால் என் குழந்தைகள் ஒன்றுகூட மரண மடைந்திருக்காது. என்போல் எத்தனையோ பேர் இருக்கின்றார்கள். தங்கள் மருந்தை வெளிப்படுத்தினால் பெரும் புண்ணியம் கிடைக்கும்.

**சீனிவாசாச்சாரி, B. A., B. L. வக்கீல்.**

---

குழந்தைகளுக்கு அரை அரிசி எடை தேனில் இழைத்து முலைப்பாலில் கரைத்து காலை மாலைகளில் கொடுத்துவர மேல்சொன்ன நோய்கள் நீங்கும். தாய்மார்களுக்குப் பத்தியமில்லை. குழந்தைகளுக்கு மலம் தள்ளும்.

**புட்டி 1-க்கு விலை ரூபா 3.**

## சிவப்பிரகாச ஜன்னித் தைலம்

நம் தேசத்தில் பாலியத்தில் மோகத்தினாலும், தேகவலிமையினாலும், நாள் கிழமை பாராமல் ஸ்நானம் செய்து புணரும் ஸ்திரீ புருஷர்களுக்கு உண்டாகும் ஒரு தலைநோய் கழுத்து நரம்பு வலி முதலிய வியாதிகளுக்கு இந்தத் தைலம் மிகவும் உபயோகமானது.

உபயோகிக்கும் விதம்:—இந்தத் தைலத்தைத் தலையில் தடவி இரண்டு நாளைக் கொருதரம் ஸ்நானம் செய்து வரவும். ஸ்நானம் செய்தவுடன் ரசம் சாதம் சாப்பிட வேண்டும். இப்படி 2, 3 ஸ்நானம் செய்வதற்குள் தலைவலி நின்று விடும். வேறு பத்தியம் கிடையாது.

5 பலம் கொண்ட எண்ணெய் விலை ரூபா 5—0—0

வி. பி. தபாற் கூலி பிரத்தியேகம்.

# கூழ்ப்பாண்ட லேகியம்




இந்த லேக்கியத்தில் ஒரு கெச்சக்காய் அளவு காலை மாலைகளில்சாப்பிட பலம் தரும், மலம் தள்ளும், சரீர உஷ்ணம் நீங்கும். மலச்சிக்கல் நீங்குவதும் கணச்சூடு விலகுவதும் இம்மருந்தின் முக்கியகுணம். எலும்பு நாக்கி

நோயால் இளைக்கும் தேகத்தைப் பலப்படுத்தும். குழந்தைகள் முதல் யாவரும் சாப்பிடலாம். யாதொரு பத்தியமும் இல்லை. எண்ணெய் ஸ்நானம் செய்யும் தினம் மருந்தை நிறுத்த வேண்டும். சுரம், தலைவலி யிருக்கும் காலத்தில் மருந்து சாப்பிடலாகாது. மருந்து குளிர்ச்சியைத் தரக்கூடியது.

**ஆர். சடகோபாச்சாரியார், பி. ஏ., பி. எல். ஐகோட் வக்கீல் என்ன எழுதி யிருக்கின்றார்:—**

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு என்னுடைய பேத்திக்குக் கொடுத்த கூழ்ப்பாண்ட லேகியம் 6—மாதமாய்க் கொடுத்து வந்ததில் தேகம் மேனியும் சதையும் பிடித்திருக்கின்றது. இனி மீன் எண்ணெயை உபயோகிக்கவே மாட்டோம். இன்னும் 10 பவுன் கூழ்ப்பாண்ட லேகியம் அனுப்பவும். என்னுடைய குமாரன் வக்கீலுக்குப் படிப்பதால் அவனுக்கும் இதைக்கொடுத்துவருகிறேன். இதனால் சரீரத்தில் உஷ்ணம் ஏற்படாமலும், மலச்சிக்கலில்லாமலும் சாப்பிட வாய்க்கு ருசியாயும் இருப்பதால் அதிகமாய்ச் சாப்பிட்டு வருகிறான்.

எங்கள் குடும்பத்திற்காகக் கூழ்ப்பாண்ட லேக்கியத்தை 1 ஜாடி செய்து கொடுத்தால் நலமாய் இருக்கும்.

என்னுடைய ஜூனியர் மாயவரம் பார்த்தசாரதி ஐயங்காரும் இந்த லேகியத்தை அடிக்கடி கேட்டுக் கொண்டிருக்கிறபடியால் அவருக்காகக் கொஞ்சம் தயார் செய்யவும். இந்தக் காலத்துப் பையன்களுக்கு இது மிகவும் அவசியமானது.

---

**டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு** கூழ்ப்பாண்ட லேகியம், மீன் எண்ணெயைக் காட்டிலும் குணம் செய்கின்றது. கணச்சூட்டுக்கு மேன்மையாய்த் தெரிகின்றது. க்ஷயரோகம் வாராதபடி தடுக்கவும் மேலானதாய்க் காணப்படுகின்றது. மலச்சிக்கல் நீங்குகின்றது. ஆனபடியால் எங்கள் எல்லா ஷாப்புக்கும் மாதாமாதம் 10 பவுன் அனுப்பவும். இந்த லெட்டர் கொண்டுவரும் ஆள் வசம் 3 வீசை கூழ்ப்பாண்ட லேகியம் கொடுத்தனுப்பவும்.

M.C. நஞ்சுண்டராவ். B. A., M. B. & C. M. மைலாப்பூர்.

---

**டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு** தங்களைப் பார்த்து வெகுநாளாய் விட்டது. நான் இளையாளை மணந்தபிறகு 'டனுக்கு' என்னும் ஊருக்கு ஜில்லா முனிசீப்பாக இருக்கின்றேன். தங்கள் கூழ்ப்பாண்ட லேக்கியத்தினால்தான் என் குழந்தை பெருத்து



நன்றாக பலத்து இருந்தது. இப்போது எனக்கு கூழ்ப்பாண்ட லேகியம் 5 பவுன் வி. பி. யில் அனுப்பவேண்டியது.

இப்படிக்கு,

C. ராஜகோபாலாச்சாரியார். B. A , B L.
District Munsiff Tanuku.

---

**டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு** 2 பவுன் கூழ்ப்பாண்ட லேகியம் வி. பி. யில் அனுப்பவும். இப்போது என் மனைவியின் தேக காந்தம் குறைந்திருக்கின்றது. அத்துடன் சிவப்பிரகாச பற்பொடி 1 டசன் அனுப்பவும்.

வியாசராவ் M. A. B. L. District Munsiff Bellary.

**ஒரு பவுன் விலை ரூபா 2.**

# அயக்காந்த செந்தூரம்

இந்தச் செந்தூரத்தில் ஒரு அரிசி எடை காலை மாலைகளில் தேனில் சாப்பிட சுரம் நீங்கும். இரத்த விருத்திக்கு இது நல்ல மருந்து. பித்தப் பாண்டு, பித்த சோகை இவைகளுக்கு வெள்ளாட்டுப் பாலில் அரிசி எடை கலந்து சாப்பிட 3 நாளில் வீக்கம் நீங்கும். இரத்த விருத்திக்காகக் குளிர்ச்சியுள்ள கூழ்ப்பாண்ட லேகியத்திலாவது வேறு எந்த லேக்கியத்திலாவது வைத்துச் சாப்பிடலாம். மற்ற மருந்துகளைப்போல் இது மலம் கட்டாது என்பதே இதன் முக்கிய குணம். வெள்ளாட்டுப் பால் கிடைக்காவிட்டால் பசும் பாலில் சாப்பிடலாம். பாரிச வாயுவுக்கு இது நல்ல மருந்து.

இந்தச் செந்தூரம் அயம், காந்தம் இரண்டும் சேர்த்து 100 புடம் போட்டது. இதை இருமலுக்குத் தேனில் கொள்ள நீங்கிவிடும். ஈளை, இருமல், காச இருமல் இவ்விரண்டையும் (பிரான்கைடிஸ் ஆஸ்தமா) மூன்று நாளில் நிறுத்தி விடும். புட்டி 1—க்கு ரூ. 3.

எனதன்புள்ள டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு: எனது மூத்த குமாரத்திக்குத் தாங்கள் கொடுத்த அயக்காந்த செந்தூரம் கொடுத்ததில் கை கால் வீக்கம், கண்ணில் இரத்தமில்லாமல் வெளுத்திருந்தது இப்பொழுது நீங்கி இருக்கின்றது. உப்பில்லாப்பத்தியம் மூன்று நாளும் வறுத்த உப்பு, சுட்டபுளி சேர்த்து பத்தியம் மூன்று நாளும் தீர்ந்துவிட்டது. இனிக் கூழ்ப்பாண்ட லேகியத்துடன் சேர்த்துப் பத்தியமில்லாமல் சாப்பிடலாம் என்றால் இந்தக் கடிதம் கண்டவுடன் 1 பவுன் கூழ்ப்பாண்ட லேகியம் வி. பி. மூலமாய் அனுப்பி வைக்கவும்.

கிருஷ்ணசாமி ஐயங்கார், சைதாப்பேட்டை.

# சிவப்பிரகாச பற்பொடி

உலகில் அநேகவித பல்பொடிகள் கிளம்பி உலவி வருவதை உணர்ந்திருப்பீர்கள். நமது சிவப்பிரகாச பல்பொடி பல வருஷங்களாகப் பலரால் உபயோகிக்கப்பட்டும், அநேக காட்சி சாலைகளில் பொன், வெள்ளி முதலான பரிசுகள் பெற்றும் விளங்கி வருவதை அறிவீர்களாகவும். நகரத்தார்கள் சிவப்பிரகாச பல்பொடியைத் தவிர வேறு பல்பொடியை உபயோகிப்பது கிடையாது.



தற்சமயம் பல போலிப் பல்பொடிகளைத் தயார் செய்து நாட்டு டின்களில் போட்டு சிவப்பிரகாச பல்பொடி என்று போலி விளம்பரம் செய்து விற்கப்படுகின்றது. உண்மையாக எங்களால் தயாரிக்கப்பட்ட பல்பொடியின் டப்பி அழகிய பொம்மை அமைந்த சொர்ண வர்ணமுள்ள ஜெர்மன் டப்பியில் வரும் சிவப்பிரகாச பல்பொடியையே பார்த்து வாங்குங்கள்.

சிவப்பிரகாச பல்பொடி ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருந்தும் சிலர் எங்களிடம் கமிஷனுக்கு வாங்கி விற்றவர்கள் சில மாதமாக கண்டதை டப்பியில் நிரப்பி எங்கள் பெயரால் விற்றுவருவதை உலகமுணர தெரிவிக்கின்றோம்.

## நன்மதிப்புகள்

ஐயா, இக்கடிதம் கண்டவுடன் சுணங்காமல் 100 டஜன் பல்பொடி கள்ளிப் பெட்டியில் வைத்து அனுப்பவும்; இவ்விடம் பல்பொடி அனேகர் வற்புறுத்துவதால் விரைவில் அனுப்பினால் நலம்.

**வேலாயுதம் செட்டியார்.**

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு V. ஆள்வார் செட்டியார் எழுதுவது :- தங்களுடைய பல்பொடியைத் தவிர வேறு இங்கு பிடிக்கவில்லை. பல்லில் இரத்தம் வருதல் நின்று விட்டது. வாய்க்கு ஆரோக்கியமாய் இருக்கின்றது.

பல் வெள்ளையாய் துலங்குகின்றது. நான் தென்னிந்திய ரயில்வேயுக்கு எங்கள் சாமானுடன் இதையும் சப்ளை செய்ய யோசனை. 100000 டின் மாதா மாதம் அனுப்பவும்.

இப்படிக்கு,

**V. ஆள்வார் செட்டியார், Hoe & Co,**

**இன்னும் இத்தகைய கணக்கற்ற கடிதங்கள் குவிந்து கிடக்கின்றன.**

12 டசன் கொண்ட குரோஸ் விலை 13—0—0

டின் 1-க்கு விலை அணா 2—0—0



# தலைவலிச் சூரணம்

இந்தச் சூரணத்தில் ஒரு சிட்டிகை எடுத்து வாயில் போட்டுக் கொண்டு ஜலம் சாப்பிட்டால் 5 - நிமிஷத்தில் தலைவலி நீங்கும். தவிர உடம்புவலி கை கால்வலி இவைகள் போம். எத்தகைய சுரமானாலும் ஒரு சிட்டிகை மருந்து சாப்பிட்டவுடன் வியர்வை விட்டு சுரம் நீங்கும். மருந்து உபயோகிக்கும் முறை மருந்துடன் அனுப்பப்படும். இம் மருந்து வீட்டிலிருப்பின் எந்தப் பாமும் எவ்வித அஞ்சனமும் வேண்டியதில்லை. புட்டி 1—க்கு விலை 8.

# ஸ்பிளினோ பில்ஸ்

இம் மாத்திரையில் அயம், காந்தம், நவாச்சாரம் வெடியுப்பு, சுரப்பட்டை ஆகிய பல அரிய மருந்துகள் சேர்ந்துள்ளன. சென்னையில் சகலரும் இம் மருந்தை சுரக்கட்டி குறைய வாங்கி உபயோகிக்கின்றார்கள்.

அநேக டாக்டர்களும் இதை வாங்கி வைத்துக் கொண்டு உபயோகிப்பது இதன் பெருங்குணத்தைக் காட்டுகின்றதால் சுரத்தால் பீடிக்கப்பட்டவர்களும் இரத்தக்குறைவால் சோகை முதலான பாண்டு ரோகிகளும், பலஹீனர்களும் இம்மாத்திரையை உபயோகித்தால் பலமடைவார்கள்.

சுரக்கட்டி எத்தகைய அளவு பெருத்திருந்தாலும் இம்மாத்திரையால் கரைந்து விடும்.

சுரம் அடிக்கும் காலத்தில் இம்மாத்திரையைக் கொடுக்க சுரம் நீங்கும். குழந்தைகள் முதல் சகலரும் தாராளமாய் இம்மாத்திரையைக் கையாளலாம்.

**எ. இரங்கநாதம் அண்டு கோ, கால்பாதேவிரோட், பாம்பே.**

**எழுதுவது:-** ஸ்பிளினோ பில்ஸ் என்னும் சுரக்கட்டி மாத்திரை எனக்குச் சஞ்சீவியாக இருக்கின்றது. பம்பாயில் இதைப் பரப்பினால் வெகு ஜனங்களுக்கு உபகாரமாகும். இவ்விடத்தில் சுரக்கட்டியும் விஷ சுரமும் அதிகம்.

நான் இதற்கு எஜண்டாக இருக்கப் பிரியப்படுவதால் உடனே பதில் எழுவதுடன் 50 மாத்திரை புட்டி ஒன்றும் வி. பி. யில் அனுப்பவும்.

**குள்ளபள்ளி நாராயண செட்டி,**

**கோவிந்தப்ப நாய்க்கன் வீதி, சென்னை.**

ஐயா, உடனே ஸ்பிளினோ மாத்திரை டப்பி ஒன்று அனுப்பவும். இம்மாத்திரை எங்கள் குடும்ப ஔஷதமாய் இருக்கின்றது.

50 மாத்திரையின் விலை ரூபா 2—8—0

# கெர்ப்ப நிராஞ்சனி

ஸ்திரீகளுக்கு வீட்டுத் தூரமாகும் பொழுது வயிற்று வலி உண்டாவதற்குக் காரணம் கெர்ப்பப்பையில் உள்ள கல்மிஷம் அல்லது சதை வளர்ந்திருந்தலால் பூச்சிகளின் உபத்திரவம் சதை பிரளல் முதலியனவாம்.

2. இதனால் உண்டாகும் பாதை சொல்ல முடியாததாம். அஃதல்லாமலும் கெர்ப்பம் தரியா திருந்தல், கை கால் ஒய்ச்சல் பலயீனம் முதலியனவாம்.

3. இதைத்தான் இங்கிலீஷில் டிஸ்மனோரியா என்பார்கள். இதற்கு மருந்து இல்லையா என்றால், உண்டு.

4. மருந்து உண்டு என்றால் உலகத்தில் இந்த வியாதியால் அநேகர் கஷ்டப்படுகின்றார்களே அது என்ன காரணம் என்றால், தக்க ஔஷதம் உபயோகிக்காததேயாம்.

5. ஆனால் உங்கள் கெர்ப்ப நிராஞ்சனி என்னும் மருந்து தக்க மருந்தோ வென்றால், அதைச் சொல்லவேண்டியதில்லை. இதை வாங்கி உபயோகித்தவர்களைச் சற்று விசாரியுங்கள். அல்லது ஒரு முறை வாங்கி உபயோகித்துப் பாருங்கள்.

6. வீட்டுத் தூரம் ஆகும் நாளில் உண்டாகும் வயிற்றுவலி எத்தனை வருஷ காலமாய் இருந்தாலும் சரி இந்த மருந்தை உபயோகித்த மாத்திரத்தில் நீங்கிவிடும்.

7. உபயோகிக்கும் விதம்:—வீட்டுக் தூரமாகும் தினத்தில் காலையில் ஒரு மாத்திரை, உச்சியில் ஒரு மாத்திரை, மாலையில் ஒரு மாத்திரை இப்படி மூன்று மாத்திரை வாயில் போட்டுக் கொண்டு ஜலம் சாப்பிடவும்.

8. வேண்டுமானால் மறு மாதமும் இதேமாதிரி சாப்பிடவும். பத்தியம் கிடையாது. இரவில் உச்சியில், மாலையில் தூரமானகாலத்தில் 6—மணி நேரத்திற்கு ஒரு மாத்திரையாகச் சாப்பிடவும்.

6—மாத்திரை அடங்கிய டப்பி 1—க்கு ரூபா 1—8—0

# சிவப்பிரகாச கோரோஜனை மாத்திரை

இம் மாத்திரையைக் குழந்தைகளுக்கு முலைப்பாலில் காலை மாலைகளில் கொடுத்துவர மந்தம் நீக்கி மலம் போக்கி, சுரம், சளுப்பு முதலானவைகளை நிவர்த்தி செய்யும் மாந்த சுரம் அல்லது (நிமோனியா) சுரம் கண்ட குழந்தைகளுக்கு ஆடா தோடா, முசு முசுக்கை, நிலத் துளசி, கஞ்சாங்கோரை கரிசலாங்கண்ணி, பொடுதலை, நொச்சியிலை,



நொச்சியிலை, ஈயப்பொடி ஆகிய இவைகளில் வகைக்கு 2 பை எடை எடுத்துக்கொண்டு புட்டிட்டு ரசம் பிழிந்து ரசம் ஒரு பாலாடை, கோரோசனை மாத்திரை ஒன்று சேர்த்துக் காலையில் கொடுத்து விட்டு மாலையில் பச்சிலைகளின் திப்பியை சட்டியிலிட்டு வறுத்து சாம்பலாக்கிச் சிறிது சலம்விட்டுக் காய்ச்சி ஒரு பாலாடைக் கஷாயத்தில் ஒரு மாத்திரை இழைத்துக் கொடுக்க இரண்டு நாளில் கபவாத சுரம் என்னும் கொடிய மாந்த சுரம் நீங்கும்.

குழந்தைகளுக்கு மலம் போவதற்காகத் தாராளமாய்ப் பிறந்த நாள் முதல் உபயோகிக்கலாம்.

பெரியோர்கள் சளுப்புள்ள காலத்தில் வெற்றிலையுடன் உட்கொள்ள சளுப்பு நீங்கும். புட்டி 1-க்கு விலை ரூபா 1.

# சிவப்பிரகாச சுகபேதி மாத்திரை

(1) மருந்திடு அல்லது இடுமருந்து முறிய மிதி பாவல் ரசம் தேங்காய்ப்பால் இரண்டும் சமனாய்க் கலந்து ½ ஆழாக்கு எடுத்துக் கொண்டு அதில் ஒரு மாத்திரையை வைத்துக் காலையில் சாப்பிடவும்; பத்தியம் கிடையாது.

(2) ஒத்தைக்கால் வாதத்திற்கும், நெரிகட்டின சுரம் வருவதற்கும் ஒரு தோலா ஆமணக்கின் இலை ¾ தோலா ஏலக்காய், 1-தோலா வெள்ளருகு, ½ தோலா சீரகம், 1 விராகனிடை குங்குமப்பூ இவைகளைப் பால்விட்டு அரைத்து அதில் ஒரு மாத்திரையை வைத்து மூன்று நாள் சாப்பிடவும்.

(3) சளிக்கும் இருமலுக்கும் அதோடு சம்பந்தப்பட்ட சுரத்திற்கும் புளியங் கொட்டைப் பருமன் இஞ்சியும் அவ்வளவு ஓமமும், இரண்டு வெற்றிலையும் சேர்த்துக் கொஞ்சம் வெந்நீர் விட்டுத் தட்டிப் பிழிந்து அதில் ஒரு மாத்திரையை இழைத்துக் கொடுக்க வியாதி சுகமாகும். பத்தியம்-குழந்தையின் தாயார் மீன் கருவாடு முதலிய உஷ்ண பதார்த்தங்கள் உட்கொள்ளக் கூடாது.

இம்மாத்திரையில் 2 முதல் 4 வரையில் காலையில் வாயில் தூள் செய்து போட்டுக் கொண்டு ஜலம் அல்லது காபி சாப்பிட்டு இரண்டு மணி நேரம் கழித்தபின் ரசம் சாதம் சாப்பிடவும். சுகமாய்ப் பேதியாகும். காலையிலும் சாப்பிடலாம். பேதி அதிகமானால் கொஞ்சம் வெந்நீர் விட்டுச் சாதம் சாப்பிட நின்றுவிடும். குழந்தைகளுக்கு 1 முதல் 2 வரை கொடுக்கலாம். பத்தியம் சூப்பு, கத்திரிக்காய், முருங்கக்காய், தொவரை, வாழைக்கச்சல், அவரைக்காய் இவைகள் சேர்க்கவும்.

முக்கிய கவனிப்பு:—இம்மாத்திரை சுகமாகவும் வயிற்றுக் கடுப்பின்றியும் பேதியாவதோடு உன்னத குணத்தோடு கூடினது. குறைந்த விலையைக் கொண்டு விற்பது பரோபகாரமே.

புட்டி 1—க்கு விலை அணு 0—6—0

# தைலாமிர்தம்



இந் தைலம் பலவித உயர்ந்த பச்சிலைகளின் ரசமும் பசுவின் பால் கோரோசனை முதலான உயர்ந்த வஸ்துக்களும், மூளையைக் குளிரச் செய்யும் விந்துத் தினுசுகளும் மற்றும் பல கடைச் சரக்குகளும் சேர்த்துத் தயார் செய்யப்பட்டது.

இந் தைலத்தைத் தேய்த்து ஸ்நானம் செய்து வர, கண் எரிச்சல், கண் சிவப்பு, கண்ணில் நீர் வடிதல், கண் குத்தல், கண்ணில் பூ விழுதல், பார்வை மந்தம், கண் கூசல் முதலான சகல நேத்திர ரோகங்களையும், மூளைக் கொதிப்பு, தலை சுற்தல், மயக்கம், புத்தி மந்தம், சோம்பல் முதலானவைகளையும் நீக்கி மூளைக்குக் குளிர்ச்சியைத் தந்து, புத்தித் தீட்சண்யத்தை உண்டு பண்ணும். ஒத்தைத் தலைவலி, கழுத்து நரம்பு வலி, மண்டைக் குத்தல் இவைகள் போம். மூளையின் கொதிப்பால் உண்டாகும் பைத்தியம் நீங்கும்.

## சில அபிப்பிராயங்கள்:

### லக்ஷிமி நரசிம்மராவ், பார்ப்பர்த்திதார் (திருப்பதி தேவஸ்தானம்)

எழுதுவது :—

எனது மனைவியின் நேத்திரம் சிவந்து பார்வைபோய் நீர் வடிந்து கொண்டிருந்தது. என் தம்பியின் மனைவி நேத்திரமும் பூ விழுந்து பார்வை நீங்கி யிருந்தது. இவ்விருவர்களின் கஷ்டத்தைப் பற்றிச் சென்னை காசிச்செட்டி தெருவி லிருக்கும் ஜி. ஆர். கிருஷ்ணசாமி செட்டியாரிடத்திலும், நேஷனல் பாங்கி தலைமை குமாஸ்தா



சுந்தர ராமாஞ்சலு நாயுடுகாரு இடத்திலும், வி. பெருமாள் செட்டி கம்பெனி சொந்தக்காரர் ஆழ்வார் செட்டியாரிடத்திலும் சொல்லித் துயருற்றபோது அம்மூவரும் சென்னைக்கு அனுப்பும்படிக் கட்டளை யிட்டனர். அதன்படியே திருவாளர் ராவ் சாகிப் தர்மலிங்க முதலியார் அவர்களின் சகாயத்தால் பட்டணம் சேர்ந்து டாக்டர் மே. மாசிலாமணி முதலியாரிடம் காட்டினோம். அவர் என் மனைவிக்குத் தான் சிகிச்சை செய்வதாயும் என் தம்பி மனைவியைக் கண்ணாஸ்பத்திரிக்கு அனுப்பும்படியும் கட்டளை யிட்டார். அதுபோலவே நடந்துகொண்டதில், என் மனைவிக்கு தைலாமிர்தம் என்னும் தைலம் ஒரு புட்டி கொடுத்து, 4 நாளைக் கொருமுறை ஸ்நானஞ் செய்து வரச் சொன்னார். அதன்படி செய்ததில் 15 நாளில் கண் சிவப்பு மாறிப் பார்வையும் நன்றாய்த் தெரிந்தது. பிறகு 2 புட்டி தைலாமிர்தம் வாங்கிக்கொண்டு திருப்பதிக்கு என் மனைவி வந்து விட்டாள்.

என் தம்பியின் மனைவி ஒரு வருடமாகக் கண்ணாஸ்பத்திரிக்குப் போய், சிகிச்சை பெற்றுக் கடைசியாய்க் கண் பார்வை உண்டாகாது என அனுப்பிவிட்டார்கள். பிறகு இச் செய்தியை டாக்டர் மே. மாசிலாமணி முதலியாரிடம் சொல்ல அதைத் தான் பார்ப்பதாக ஒப்புக்கொண்டு ஒரு புட்டி தைலாமிர்தம் கொடுத்து தலை முழுகச் சொல்லி, வேறொரு மருந்துப் பொட்டலம் கொடுத்துக் காட்டுக் களாப் பூவை முலைப்பாலில் ஊரவைத்து மருந்தையும் அதனுடன் கலந்து நாள்தோறும் கண்ணுக்குப் போட்டுவரச் சொன்னார். அதன்படியே செய்ததில் ஒரு மாதத்தில் கண் பார்வை பெற்று சுகமாக வாழ்கின்றாள். டாக்டர் அவர்களின் உதவிக்குத் திருப்பதி பெருமாள் அவருக்கு சகாயம் அளிப்பார்.

---

கனம் டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்கள் திவ்விய சமுகத்திற்கு நாராயணன் எழுதிக் கொண்ட நிருபம்.

நான் இங்கிருந்து தங்கள் பேருக்கு தைலத்துக்காக மணியார்டரில் அனுப்பிய ரூபாய் 15 கிடைத்ததும் எனக்கு அதிகச் செலவு ஏற்படாதபடி மனையப்பட்டி கதிரேசச் செட்டியார் அவர்கள் வசம் தாங்கள் அனுப்பிவைத்த தைலம் பாட்டல் 7-ம் வந்து சேர்ந்தது. அதன் செலவு ரூபாய் 1½-ம் கொடுத்து ஷை பாட்டல்களையும் வாங்கிக் கொண்டேன்.

தாங்கள் இதனால் எனக்கு அதிகச் செலவு ஏற்படாதபடி செய்த ஒரு உபகாரத்தையும், நன்றியையும் மறவாதிருக்க எப்பொழுதும் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். தங்களிடம் நானும் ஏராளமான தைலமும், மருந்துகளும் வாங்கி உபயோகித்து வந்திருக்கிறேன். அதனால் நற்குணங்கள் அடைந்திருப்பதோடு எனது இரண்டு வயது ஆண் குழந்தைக்கு மூக்கில் சதா நீர்வடிந்து கொண்டு வந்தது. தங்க

ளின் தைலம் தேய்த்து வந்ததிலிருந்து அவ்வித குற்றம் நீங்கி பூரண குணம் கிடைத்ததால்தான் தங்களுடைய தைலத்தையே வாங்கி எங்கள் குடும்பத்தில் நாங்கள் எல்லோரும் சதா பாவித்து வருகிறோம். இன்னும் எங்களுக்கு வேண்டியவைகளுக்குக் குணத்தை தங்களுக்கு எழுதி தங்கள் பாகமாக வேலை செய்துகொள்ள அன்பு வைத்திருக்கிறேன்.

**ம கு. நாராயணச் செட்டியார்,**
**நச்சாந்துபட்டி** புதுக்கோட்டை ஸ்டேட்.

**அன்புள்ள ஐயா,**

தைலாமிர்தத்தை நான் உபயோகப்படுத்திவருகின்றேன். மிக மேன்மையான குணம் கண்டிருக்கிறேன். ஆனால், அதன் முறை இன்னும் எனக்குப் பிடிபடவில்லை. தற்சமயம் தைலம் ஸ்நானம் செய்து கொண்ட தினம் தூக்கம் இல்லாமலும், வெயிலில் ரொம்ப அலையாமலும், மோர் உபயோகப்படுத்தாமலும், ரசம், மரக்கறி கசாப்பு இவைகள் உபயோகப்படுத்திக்கொண்டு வருகிறேன். இரவிலும் மேற் கண்ட விதமே செய்து வருகிறேன். இவைகள் சரிதானா அல்லது சரியில்லையா என்ற விவரம் தெரிவிக்கவேண்டுகிறேன்.

**ராம. பி. சு. பழனியப்பன்,** 24, மார்கட் தெரு, நச்சாந்துபட்டி.

இதுபோல் எத்தனையோ கடிதங்கள் வந்து குவிந்து கிடக்கின்றன.

5 பலம் கொண்ட டின் ரூபா 1. தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

# இரண சஞ்சீவி

இம்மருந்தை சேத்துப் புண்ணுக்குத் தடவலாம், சொரி சிரங்குகளுக்குப் பூசினால் குணமாகும். முகத்தில் காணும் மேகப் பருவுக்குத் தடவ முக வசீகரத்தைத் தரும்.

ஆராத மேகப்புண், மேகப்படை இவைகளுக்குப் பூச இரணம் ஆறும். மூல வியாதிக்கு மேல் பூசினால் மூல இரணங்கள் ஆறிவிடும்.

இம்மருந்தால் மேகப்படை, ஊரல் படை, தேம்பல் படை, சொரி, சிரங்கு முதலான சகல இரணங்களும் தீர்ந்து விடுகின்றன.

இம்மருந்தை உபயோகிப்பதால் எரிச்சல் உண்டாகாது. உள்ளுக்குச் சாப்பிட்டாலும் கெடுதல் உண்டு பண்ணாது.

புட்டி 1-க்கு விலை 1—0—0

டாக்டர் அவர்களுக்குத் தெரிவிப்பது:—

தாங்கள் கொடுத்த இரண சஞ்சீவியை எனக்கு ஏற்பட்டிருந்த மேக இரணங்களுக்கு உபயோகித்தேன். மூன்று நாளில் குணமாய் விட்டது. என்னுடைய இரண்டு கால்களிலும் இரணம் ஏற்பட்டுத் தொடையிலிருந்து பாதம் வரையில் நீர் வடிந்து கொண்டிருந்த இரணங்கள் ஆச்சரியமடையும்படி நீங்கினதைக் கண்டு ஆனந்தமடைந்தேன்.

**கண்ணன், இராயபுரம் B. A.**

# கார்டோலின்



யங்கள் சுவாசக் குழாயினுண்டாகும் வீக்கத்தினாலும், இரணத்தாலும், சுவாசம் விடுவதற்கு ஆயாசப்பட்டும், இழுப்பு இருமலினால்

துன்பப்பட்டும் வாடி வருந்துகிறார்கள். ஆங்கிலர்கள் இவ்வியாதியை இரண்டுவிதமாகக் கொள்கின்றார்கள். அவையாவையெனில், பிரான் கயடிஸ், ஆஸ்தமா என்பவையாம். இந்தியர்கள் இதை எட்டுவிதமாகப் பிரிக்கிறார்கள். ஈளை இருமல், காச இருமல், சுவாசகாசம், மந்தாரகாசம் என்பனவாகிய பெயர்களால் நோயைக் கணிக்கின்றார்கள். இந்நோயானது மழைக்காலங்களில் பெரும்பான்மையும், துன்பத்தை உண்டுபண்ணுகின்றது. சிற்சிலருக்கு அதிக வெப்பமான காலத்திலும் துன்பம் தருகின்றது.

இந்த நோயால் துன்பமடைவோர்கள் எத்தனையோவிதமான மருந்துகளை சாப்பிட்டும் நோய் நிவர்த்தி ஆகாமையால் மருந்துகளில் நம்பிக்கை இழக்கின்றார்கள்.

வைத்தியர்கள் தங்களால் இயன்ற மருந்துகளை உபயோகித்துப் பார்த்தும் குணமடையாமையைக் கண்டு இந்நோயானது கர்மத்தால் வந்ததெனக் கூறிவிடுகின்றார்கள்.

இத்தகையர்களின் மனதை மாற்றுவான் வேண்டியே நமது கார்டோலின் என்னும் மருந்து வெளிவந்திருக்கிறது. இம்மருந்தால் சுமார் 30, 40 வருடங்களாகக் கஷ்டப்பட்டிருந்த காசநோய் இருந்த அநேகர் சுகப்பட்டிருக்கின்றனர். அஸ்தமா இருமலானது எந்தநிலைமையில் இருந்தாலும் இம்மருந்தானது குணப்படுத்திவிடும். ஆஸ்தமா என்னும் சுவாச ரோகத்தால் துன்பப்படுபவர்கள் அவநம்பிக்கையின்றி இம்மருந்தை வாங்கி உபயோகித்துப் பாருங்கள்.

இதன் விலை புட்டி 1-க்கு ரூபா 10.

**சென்னை பெரியமேட்டு கண்டிராக்டர் நா. கணபதி முதலியார்,** எழுதுவதாவது:—

**அன்புள்ள, டாக்டர் மே மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,** தாங்கள் எனது குமாரனுக்கு ஏற்பட்டிருந்த அஸ்தமா வியாதிக்குக் கொடுத்த கார்டோலின் என்னும் மருந்தை உபயோகித்ததிலிருந்து இழுப்பு இருமல் நின்றுவிட்டது. இப்பொழுது என்னுடைய மகன் சுகமாக இருக்கின்றான்.

**விலாசம்:—**

**டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்,**
31, வைத்தியநாத முதலித் தெரு, சென்னை.

524
சென்னை-600 018

## சந்தா நேயர்களுக்கு

1. சந்தாத் தொகையை முன்னதாக மணியார்டர் மூலம் அனுப்ப வேண்டும். வி. பி. யில் பெறுவதென்றால் ரிஜிஸ்டர் சார்ஜ 3 அணா, மணியார்டர் கமிஷன் 2 அணா, வி. பிக்குத் தபால் சார்ஜ ½ அணா, ஆக 5½ அணா சேர்த்து ரூபா 1-5-6 கட்டி வி. பி. யைப் பெற நேரிடும். மணியார்டர் அனுப்பினால் ரூ. 1-2-0 மட்டுமேயாகும். ஆதலால் முன்னதாக மணியார்டர் அனுப்பிப் பத்திரிகை பெற்றுக்கொள்வதே இரு சாராருக்கும் நலமாகும். இது முக்கியமாய்க் கவனிக்க வேண்டிய விஷயம்.

2. இடம் மாறும் சந்தாதாரர்கள் தங்கள் புதிய விலாசத்தோடு சந்தா எண்ணையும் குறிப்பிட்டு எழுத வேண்டும்.

3. சந்தாதாரர்கள் கடிதம் எழுதும்பொழுதும் மணியார்டர் அனுப்பும் பொழுதும் சந்தா நம்பரை அவசியம் குறிப்பிட்டு எழுத வேண்டும். இன்றேல் பதில் செய்ய இயலாது. பதிலை விரும்புவோர் ரிப்ளை கார்டாவது தபால் பில்லையாவது அனுப்ப வேண்டும்.

### வியாசம் எழுதுவோர்க்கு

4. வியாசம் எழுதுவோர் எளிய இனிய தமிழ் நடையில் இலக்கண வழுவில்லாமல் காலதேச வர்த்தமானங்களுக் கொத்த பொருள்பற்றி ஒரே பக்கத்தில் மிகத் தெளிவாக மையினால் எழுதி அனுப்புதல் வேண்டும்.

கிடைக்கப்பெறும் கட்டுரைகளைக் கூட்டவும் குறைக்கவும் திருத்தவும் ஆசிரியருக்கு அதிகார முண்டு.

---

வெளி வந்துவிட்டது ! வெளி வந்துவிட்டது ! !

## ஜீவ இரகசியம்

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களால் எழுதப்பட்ட 'ஜீவ இரகசிய' நூல் வெளியாகி விட்டது.

இது ஒவ்வொருவரும் வாசிக்க வேண்டிய முக்கியமான நூலாகும். இந்நூலில் சுகாதாரம், பிராணாயாமம், சூரிய ஒளியின் பயன், நித்திய விதிகளின் தத்துவம், மோட்சத்தின் இரகசியம், ஆயுளைப் பெருக்கும் மார்க்கம், யோக சாதனத்தின் உண்மைகள், சரீர நடை முதல் காரணம், நோய் வாராது தடுக்கும் அனுஷ்டானங்கள் முதலான பல அரிய பெரிய நுட்ப விஷயங்களைத் தெளிவாக விளக்கியும் அனுஷ்டிக்கும் மார்க்கங்களைத் தெள்ளத் தெளிய படங்களுடன் காட்டியும் இருக்கின்றது. இதன் விலை ரூபா 1.

தபால் சார்ஜ் வேறு.

'தமிழரசு' புத்தகாலயம்,
31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

"Tamil Arasu" Rgd. M. No. 2559.


# கார்டோலின்

## ஆஸ்தமாவுக்கு அரிய ஔடதம்

டீ. 40 வருட [illegible]
விலை புட்டி 1-க்கு ரூ. 10. [illegible]



சளி இருமல், சுவாச காசம், காச [illegible] காசம் முதலிய நோய்களுக்குச் சிறந்த மருந்து.

விலாசம்:—31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.